JPL
C3856

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**POLITICAL SCIENCE SUPPLIMENTARY SERIES - 04**

19

**G.C.E(A/L) G.A.Q**

27-6-1995

KOHA-JPL

38566 CC

# இலங்கையின் அரசியல் 95

115158

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

**நிகழ்கால நிகழ்வுகள்**

**(மாதிரி வினாக்களையும், சுருக்க விடைகளையும் உள்ளடக்கியது)**

**பீ. எம். புன்னியாமீன் B.A.(S.L)**

PUBLIC LIBRARY JAFFNA

**வெளியீடு**

EPI புத்தகாலயம்
64-2/2, Hinniappuhamy Mawatha,
Kotahena, Colombo-13

**சிந்தனை வட்டம்**
14, Udatalawinna Madige,
(Via) Katugastota,

115158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அரசியல் நிகழ்கால நிகழ்வுகள். '9

## வினா-விடை

ஏக விநியோகஸ்தர்கள்
Poobalasigham Book Depot
Jaffna & Colombo
தொடர்புகளுக்கு
340, Sea Street, Colombo-11
Tel: 422321

ஆசிரியர்: பீ.எம்.புன்னியாமீன் B.A.(S.L)

முதலாம் பதிப்பு: 1995 May 22

பதிப்புரிமை: Mrs.Mazeeda Puniyameen.

கணனிப்பதிவு:- THAS, JEEVA Computers

பதிப்பு:- MB Printers
L/G/S/04,
Sri Sabgaraja Mawatha,
Colombo-10
071-28947.

70/-

புத்தக அமைப்பு: V. கிருஷ்ணமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதிரிவினாக்கள்
### தொகுக்கப்பட்டுள்ள பகுதிகள்

☆ இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகள்.
☆ அணிசேராமை, சார்க், UNO.
☆ இலங்கையின் உள்ளூராட்சி முறைகள்.
Iபிரதேசசபை IIநகரசபை IIIமாநகரசபை
☆ மாகாணசபை.
☆ கட்சி முறை.
☆ இலங்கை, இந்திய உறவு நிலை.
☆ இலங்கையில் தேர்தல்.

## இப்புத்தகம் 115158

☆ G.C.E (A/L)
☆ G.A.Q (வெளிவாரி)
☆ B.A
☆ பல்கலைக்கழக அரசறிவியல் மாணவர்கள்
☆ சட்டக்கல்லூரி முதலாண்டு மாணவர்கள்
☆ மற்றும் போட்டிப்பரீட்சைகள் எழுதப்போகும் மாணவர்கள்

**அனைவருக்கும் ஏற்புடையது**

ஆசிரியருடனான தொடர்புகளுக்கு
**P.M.PUNYAMEEN**
14, Udatalawinna Madige, (Via) Katugastota,
Sri Lanka



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# G.C.E (A/L)
# G.A.Q
# B.A

## புன்னியாமீன்

### ஆசிரியரின்

**Political Science**

**வகுப்புக்கள் நடைபெறுவது**

**EPI**

**258, D.S SENANAYAKE STREET,**
**KANDY.**

**EPI**

**64-2/2, HINNIAPPUHAMY MAWATHA,**
**KOTAHENA, COLOMBO-13,**
**T/P: 01-344518.**

**EPI**

**316, Galle Road, Bambalapitiya**
**Colombo-04**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புடன்**
**என் பிரியத்திற்குரிய மாணவ நெஞ்சங்களே.....**

எமது இலங்கைத் திருநாட்டில் அரசறிவியலானது பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் கலை, வர்த்தகப் பாடமாகப் பிரபல்யம் அடைந்து வருவதை அறிவீர்கள். இருப்பினும் தமிழ் மொழி மூலமாக இப் பாடத்திட்டத்தைக் கற்பதற்குப் போதியளவு நூல்கள் இன்மை துரதிர்ஷ்டமான விடயமாகும். இதனால் அரசறிவியல் கற்கும் மாணவர்கள் பல விதமான பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும் முகங்கொடுக்கின்றனர்.

இத்தகைய பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும் ஓரளவேனும் தீர்வினைப் பெற்றுக்கொடுக்கவேண்டுமென்ற நோக்கிலும், பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக மாதிரி வினா, விடைகளை வழங்க வேண்டும் என்ற நோக்கிலும் EPI கல்வியகம் ஒழுங்கு செய்துள்ள கருத்தரங்குத் தொடரில் (4 கருத்தரங்குகள்) என்னால் கலந்துரையாடப்படும் உத்தேச வினாக்களையும், விடைகளையும் புத்தகமாகத் தொகுத்துத் தருவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இப் புத்தகத் தொடரில் மொத்தம் 4 புத்தகங்கள் இடம் பெறும். இந்த 4 புத்தகங்களும் உயர்தர முழுப் பாடப்பரப்பையும் உள்ளடக்கியதாக இருக்கும். எனவே க.பொ.த (உ/த) பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும், பல்கலைக்கழக (வெளிவாரி) முதற்கலைத் தேர்வு மாணவர்களுக்கும் ஏற்புடையதாக இருக்கும் என்பது என் நம்பிக்கையாகும்.

குறுகிய காலத்தில் இப்புத்தகத்தினை வெளியிட முன் வந்த EPI கல்வி நிலையப் பணிப்பாளரும், விரிவுரையாளரும் EPI புத்தகாலய உரிமையாளரும் இலங்கையின் பிரபல கணித, விஞ்ஞான விரிவுரையாளருமான திரு W.L. ராஜரட்ணம் அவர்களுக்கும், அழகிய முறையில் கணனிப்பதிவையும், பதிப்பையும், மேற்கொண்டுதந்த திருவாளர்கள் அமுதாஸ், ஜீவா அகியோருக்கும் நூலுருப்படுத்துவதில் ஒத்துழைத்த திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், அகில இலங்கை ரீதியில் என்புத்தகங்களை விநியோகித்து வரும் பூபாலசிங்கம் புத்தக நிலைய உரிமையாளர், முகாமையாளர், மற்றும் ஊழியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

இப்புத்தகம் குறித்து உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பீர்களாயின் நன்றியுடையவனாக இருப்பேன்.

மிக்க நன்றி - அன்புடன்
**புன்னியாமீன்**
1995.05.22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த.(உயர்தர) அல்லது முதற் கலைத் தேர்வு

G.C.E (A/L) & G.A.Q

# அரசறிவியல்

பரீட்சையை எழுதப்போகும் உங்களுக்காக

## சில ஆலோசனைகள்

**01.** பரீட்சை வினாப் பத்திரத்தைப் பெற்றவுடன் பதற்றப்படாதீர்கள். முதலில் நிதானமான முறையில் சகல வினாக்களையும் வாசித்துப் பாருங்கள்.

**02.** பின்னர் உங்களுக்கு இலகுவானதாகவும், பூரணமானதாகவும் விடையை எழுதக்கூடியதுமான ஐந்து வினாக்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். A/L பரீட்சை என்றாலும் சரியே, G.A.Q பரீட்சை என்றாலும் சரியே அரசறிவியல் வினாப்பத்திரம் மொத்தமாக பத்து வினாக்களைக் கொண்டிருக்கும். இந்தப் பத்து வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மாத்திரமே விடை அளித்தல் வேண்டும்.

**03.** நீங்கள் எழுதும் விடையைப் பாதியளவில் எழுதிய பின்பு அவ்வினாவை வெட்டிவிட்டு மற்றுமொரு வினாவிற்கு விடையளிப்பதை இயன்றளவில் தவிர்த்துக்கொள்ளுங்கள். G.C.E (A/L) அரசியல் மூலதத்துவ கடந்தகால பரீட்சை விடைப் பத்திரங்களை நோக்குமிடத்து பல மாணவர்கள் இவ்வாறு செய்திருப்பதை அவதானிக்க முடிந்தது. இதற்குக் காரணம் மாணவர்கள் ஆரம்பத்திலேயே வினாக்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளாமையே ஆகும். (இவ்வாறு நீங்கள் செய்வது நேரத்தை விரயமாக்கும் என்பதை கருத்திற் கொள்க.)

**04.** பரீட்சையில் நீங்கள் 5 வினாக்களுக்குக் கட்டாயமாக விடையளித்தல் வேண்டும். 5 வினாக்களுக்கு விடையளிக்காது 3 அல்லது 4 வினாக்களுக்கு மாத்திரம் விடையளித்தால் நிச்சயமாக மொத்தப்புள்ளியைக் குறைக்கச் செய்யும். எனவே கட்டாயமாக 5 வினாக்களுக்கு விடையெழுத முயற்சித்தல் வேண்டும்.

**05.** பரீட்சையில் உங்களுக்கு தரப்படும் நேரம் 3 மணித்தியாலங்கள் மட்டுமே. எனவே விடையெழுதும்போது 5 வினாக்களுக்கும் சம நேரத்தை ஒதுக்க நீங்கள் எத்தனியுங்கள். ஒரு வினாவுக்கு அதிக நேரத்தை ஒதுக்குமிடத்து ஏனைய வினாக்களுக்கு ஒதுக்கும் நேரம் குறைவடையும். இதனால் பின்னர் எழுத வேண்டிய விடைகளை உங்களால் பூரணப்படுத்த முடியாமற் போகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பிரிவுக் கேள்விகள் இடம்பெறும் போது இதே முறையைக் கையாள வேண்டும்.)

**06.** எழுத்துத் தெளிவு மிகப் பிரதானமானதாகும். நீங்கள் எழுதிய விடைகளை பரீட்சகர்கள் இலகுவாகவும் துல்லியமாகவும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

## 07. க.பொ.த (உயர்தர) மாணவர்களாயின்.

நீங்கள் எழுதுவது பல்கலைக்கழக நுழைவுக்கான ஒரு போட்டிப் பரீட்சை என்பதை மறந்துவிடாதீர்கள். குருவி கூடு கட்டும் போது நிச்சயமாக ஒரேயடியாகக் கட்டிவிட முடியாது. சிறுகச்சிறுக துரும்புகளைச் சேர்த்தே கூட்டைக் கட்டி முடிக்கின்றது. இதேபோல நீங்களும் ஒவ்வொரு புள்ளியாகச் சேகரிக்க முயல வேண்டும். வினாவுடன் தொடர்புடைய சிறு விடயங்களைக்கூட குறித்துக் காட்டுதல் ஓரிரு புள்ளிகளையாவது அதிகரித்துத்தர ஏதுவாகலாம். சில நேரங்களில் அவ்வோரிரு புள்ளிகளே உங்கள் பல்கலை கழக வாழ்வை நிச்சயிப்பதாகவும் அமையலாம்.

**08.** அரசியல் மூலதத்துவப் பாடத்தில் நீங்கள் எழுதும் விடைகள் பரந்த அடிப்படையில் அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உங்கள் விடைகளில் நீங்கள் கற்ற கோட்பாடுகளை மட்டும் எழுதாது நடைமுறை விடயங்களையும், அண்மைக்கால சம்பவங்களையும் எழுதுதல் வேண்டும்(வினாவின் தன்மைக்கேற்ப). இவ்வாறு எழுதுவது அதிக புள்ளிகளைப் பெற்றுத்தரும் வாய்ப்பாக அமையும்.

**09. G.A.Q** மாணவர்களும் விடையெழுதும்போது ஒழுங்கமைப்பு உதாரணங்கள், அணுகுமுறைகள் போன்றவற்றில் அதிக அக்கறை செலுத்துதல் வேண்டும்.

**10.** பரீட்சையைப் பற்றிய தயக்கத்தை விட்டுவிடுங்கள். சந்திர மண்டலத்தில் பாதம் வைத்தவனும் எம்மைப் போன்ற மனிதனே. நவீன காலத்தில் மனிதன் எத்தனையோ படிகள் முன்னேறிச் சென்று விட்டான். இந்நிலையில் ஒரு சாதாரண பரீட்சையைச் சந்திக்க, முகங்கொடுக்க நாம் ஏன் அஞ்சவேண்டும்?

துணிவுடனும் மனஉறுதியுடனும் உங்கள் பயணத்தைத் தொடருங்கள். நிச்சயம் சிறந்த பெறுபேறு—உங்களுக்காக காத்திருக்கின்றது.

**உங்கள் வெற்றிக்கு எனது
மனமார்ந்த பிரார்த்தனைகளும் நல்வாழ்த்துக்களும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னியாமீன் ஆசிரியரின்

# சகல
# இலக்கிய
# அரசறிவியல்

புத்தகங்களையும் பெற
தொடர்புகொள்க

Poobalasigham Book Depot
340, Sea Street, Colombo-11
Tel: 422321

தபாலில் பெற

P.M.PUNYAMEEN
14, Udatalawinna Madige, (Via) Katugastota,
Sri Lanka




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா 01

**அ) மூன்றாம் உலக நாடுகளும் அணிசேராமையும் பற்றிக் கருத்துரை வரைக.**

**ஆ) "அணிசேராக் கோட்பாட்டிற்கமைய இலங்கை தனது வெளி நாட்டுக் கொள்கைகளை வகுத்துள்ளது" இக்கூற்றை ஆராய்க.**

## விடைக்குறிப்புகள்

அ) பொதுவாக பொருளாதார அபிவிருத்தி குறைந்த வறிய நாடுகளை மூன்றாம் உலக நாடுகள் என அழைக்கின்றோம். ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுள் அனேகமானவை மூன்றாம் உலகத்தைத் சேர்ந்த நாடுகளே.

இந் நாடுகளுள் அதிகமான நாடுகள் மத்திய ஐரோப்பாவின் ஏகாதிபத்திய கொள்கைகளுக்கு அடிமைப்பட்டு காலனித்துவ நாடுகளாக விளங்கியவையே. 20ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் அல்லது அதன் பின்னர் சுதந்திரம் பெற்ற நாடுகளாக இவை விளங்குகின்றன. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந் நாடுகள் வளப்பற்றாக்குறை, மூலதனப் பற்றாக்குறை சனத்தொகைப் பெருக்கம் போன்ற அடிப்படை பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றன.

தற்காலத்தில் அணிசேரா அமைப்பானது நடைமுறையில் உள்ள சர்வதேச அமைப்புகளுள் முக்கியமானதொரு அமைப்பாகும். இந்த அமைப்பானது பொதுவாக மூன்றாம் உலகநாடுகளின் கூட்டிணைப்பிலேயே செயற்படுகின்றன.

இரண்டாம் உலக யுத்த முடிவில் உலகின் பிரதான வல்லரசுகளில் இரண்டான அமெரிக்காவின் தலைமையில் முதலாளித்துவப் போக்குடைய நாடுகளின் ஓர் அணியும், சோவியத் ரஷ்யாவின் தலைமையில் சோஷலிசப் போக்குடைய நாடுகளின் ஓர் அணியும் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு ஏற்படுத்தப் பட்ட அணிகளில் கூட்டுச்சேராமல் மூன்றாம் உலக நாடுகள் ஏற்படுத்திக் கொண்ட அமைப்பே அணிசேரா அமைப்பாகும். இதன் காரணமாக மூன்றாம் உலக நாடுகளுக்கும் அணிசேரா அமைப்பிற்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் உண்டு என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமே.

அணிசேரா அமைப்பின் ஆரம்பத்தை நோக்குமிடத்து மூன்றாம் உலக நாடுகளின் தொடர்பு தெளிவாகப் புலப்படுகின்றது. மூன்றாம் உலக நாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குள் ஒரு கூட்டிணைப்பினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற கருத்தினை 1945 ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உருவாக்கம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட பாரதப்பிரதிநிதி ஜவஹர்லால் நேரு முன்வைத்திருந்தார். இதன் பலனாக 1947ம் ஆண்டில் ஆசியத் தொடர்பு சம்மேளனம் கூட்டப்பட்டது. அத் தலைவர்கள் கூட்டத்தில் மொத்தம் 32 நாடுகள் பங்கு பற்றின. இலங்கையின் சார்பில் திரு.எஸ்.டபிள்யு ஆர்.டி.பண்டாரநாயக்கா கலந்து கொண்டார்.

1953ம் ஆண்டில் இந்தோனிசியா ஜனாதிபதி சுகர்னோ சுதந்திர ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் சம்மேளனம் ஒன்றைக் கூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டார். 1955ல் அரச தலைவர்களைக் கொண்டதாக கூட்டப்பட்ட இச் சம்மேளனம் 'பென்டுன் சம்மேளனம்' என அழைக்கப்படுகின்றது. இச் சம்மேளனத்தில் ஆசிய ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க மூன்றாம் உலக நாடுகளின் அமையமொன்றினை ஏற்படுத்த வேண்டும் என்ற அவசியம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனவே அணிசேரா இயக்கத்தின் ஆரம்பப்படியாக இதனைச் சுட்டிக் காட்டலாம்.

1961ம் ஆண்டில் பெல்கிரேட் நகரில் கூடிய ஆசிய, ஆபிரிக்க, இலத்தின் அமெரிக்கா நாடுகளைச்சேர்ந்த சில தூதுவர்கள், இராஜ தந்திரிகள் இது போன்ற அமைப்பொன்றின் அவசியத்தை ஏற்றுக் கொண்டனர். இதன்படி 1961 ல் பெல்கிரேட் நகரில் 25 நாடுகளின் தலைவர்கள் ஒன்று சேர்ந்து ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளின் பொருளாதார, கலாசார மேம்பாட்டிற்காக அமைத்துக் கொண்ட அமைப்பே அணிசேரா அமைப்பாகும். இன்று இதில் 108 நாடுகளுக்கு மேல் அங்கம் வகிக்கின்றன. மூன்றாம் உலக நாடுகள் மத்தியில் ஒரு சக்தி மிக்க அமைப்பாக இது பரிணமிக்கின்றது.

சுருக்கமாக அணிசேரா அமையத்தின் நோக்கத்தினைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

1. உலக சமாதானத்தைப் பாதுகாத்தல்.
2. அங்கத்துவ நாடுகளின் கூட்டிணைப்புடன் நாடுகளின் பொருளாதார மேம்பாட்டினைக் கட்டியெழுப்புதல்.
3. வல்லரசுகளின் தலையீடின்றி ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க(மூன்றாம்உலக)நாடுகளின் பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக் கொள்ளுதல்.
ஆகியனவாகும்.

பொதுவாக வல்லரசுகளின் தலையீடுகள் மூன்றாம் உலகநாடுகளால் தவிர்க்க முடியாததொன்றாகும். அதாவது 3ம் உலக நாடுகள் எதிர்நோக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நெருக்கடிகளின் போது வல்லரசுகளின் உதவியை நாட வேண்டிய நிலை அணிசேராக் கொள்கைக்கு ஒரு சவாலாகும். எவ்வாறாயினும் அணிசேராவின் தோற்றம், செயற்பாடுகள் மூலம் மூன்றாம் உலக நாடுகளின் தொடர்புகள் வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அணிசேரா அமைப்பின் 9ம் உச்சி மகாநாடு கடந்த (1992) செப்டம்பர் மாதம் இந்தோனேசியாவின் தலைநகரான ஜகர்த்தாவில் நடைபெற்றது. ஜகர்த்தா மகாநாட்டைத் தொடர்ந்து அணிசேராக் கொள்கையில் மீண்டும் ஒரு இணைப்பு நிலை பலப்படுத்தப்படுமென அவதானிகள் கருதினர். இருப்பினும் எதிர்பார்த்த பலன் கிட்டாமை வேதனைக்குரிய விடயமே.

ஆ) அணிசேரா அமைப்பினைத் தோற்றுவிப்பதில் காரண கர்த்தாக்களாக அமைந்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். 1961 முதல் முதலாம் மகாநாட்டில் கலந்து கொண்டதன் மூலம் இலங்கை அதன் ஆரம்ப அங்கத்துவ நாடுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. அணிசேரா அமைப்பிற்கு இலங்கை வழங்கி வரும் முக்கியத்துவம் காரணமாக 1976ல் அணிசேரா உச்சி மகாநாடு கொழும்பில் நடைபெற்றது. 1976 முதல் 1980 வரை தலைமைத்துவத்தையும் இலங்கை ஏற்றிருந்தது. (முதலில் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்க, 1977 இன் பின் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா) தற்போதும் இலங்கை அணிசேரா இயக்கத்தின் ஒரு அங்கத்துவ நாடாகும். எனவே தொகுத்து நோக்குமிடத்து அணிசேரா அமைப்பிற்கு இசைவான ஒரு வெளிநாட்டுக் கொள்கைகையை இலங்கை கடைப்பிடிக்க வேண்டியுள்ளமை ஒரு முக்கிய விடயமாகும். அணிசேரா அமைப்பின் கொள்கைக்கிணங்க ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை வகுக்குமிடத்து உலக வல்லரசுகளின் அணியில் ஒன்று சேராமல் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுமுகமாக அங்கத்துவ நாடுகளின் கூட்டிணைப்பினை வேண்டி நிற்பதாகும்.

அணிசேராக் கொள்கைக்கிணங்க இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகளை ஆராய்கையில் சுதந்திரத்தின் பிற்பட்ட காலம் முதல் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளைச் சுருக்கமாக ஆராய்தல் அவசியமாகும்.

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற வேளையில் பிரித்தானியாவுடன் மூன்று பிரதான ஒப்பந்தங்களுக்கு இலங்கை உட்பட்டிருந்தது. அதாவது –

1. வெளிநாட்டு விவகாரங்கள்
2. பாதுகாப்பு
3. பொதுத்துறை நிர்வாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் து றைமுகங்களும், விமான நிலையங்களும் (திருமலை, கட்டுநாயக்கா) பிரித்தானியரால் சுயேற்சையாகப் பயன்படுத்தப்பட்ட அதே நேரம் 1948-1956 இடைப்பட்ட காலகட்டத்தில் முதலாளித்துவ நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை வைத்திருந்தமை அவதானிக்கத்தக்க தொன்றாகும். அதே நேரம் கம்யூனிச எதிர்ப்புக் கொள்கையையும் இலங்கை பெற்றிருந்தது. இப்போக்கின் கணிசமான மாற்றங்களை அணிசேராவின் ஆரம்பத்தின் பின்னர் காணமுடிகின்றது.

1956ல் ஸ்ரீ.ல.சு.கட்சிக் கூட்டரசாங்கம் (மக்கள் ஐக்கிய முன்னணி) வெளிநாட்டுக் கொள்கையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. 1948ல் பிரித்தானியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு விமான நிலையங்களில் பூரண பரிபாலனத்தை இலங்கை பெற்றுக் கொண்டது. அதே நேரம் ரஷ்யா, சீன சார்புக் கொள்கையினையும் கடைப்பிடிக்கலாயிற்று.

1961ன் பின்னர் அணிசேரா அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் அரசாங்கத்தை அமைத்த கட்சிகள் அணிசேரா கோட்பாடுகளுக்கு அமைய தமது வெளிநாட்டுக் கொள்கைகளைத் தெரிவித்தன. 1960-1965/ 1970-1977 களில் ஸ்ரீ.ல.சு.கட்சி அரசாங்கமும் 1965-1970, 1977ன் பின்னர் ஐ.தே.கட்சி அரசாங்கமும் அணிசேரா சார்புக் கொள்கையைக் கடைப்பிடித்தமை அவதானிக்கத் தக்கதாகும். தற்போது இலங்கையின் 3வது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியான திருமதி சந்திரிக்கா குமாரண துங்க அவர்களும் அணிசேராக் கொள்கைகளுக்கிணங்க நாட்டின் வெளிநாட்டுக் கொள்கைகள் பேணப்படும் என்பதை அறிவித்துள்ளமை அவதானிக்கத்தக்க விடயமாகும்.

இருப்பினும் நடைமுறையில் அணிசேராக் கொள்கைகள் செயற்படுகின்றனவா? என்பது கேள்விக்கிடமாகவே காணப்படுகின்றது. ஸ்ரீ.ல.சு.கட்சி காலத்தில் அணிசேராமைக்கிணங்க தமது நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் கம்யூனிச நாடுகளுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டிருந்தமையும், ஐ.தே.கட்சி காலத்தில் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப உதவிகளுக்காக வேண்டி மேலைத்தேய முதலாளித்துவ நாடுகளுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தமையும் காணமுடிகிறது. எனவே அணிசேராமைக்கிணங்க இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை அமைந்துள்ளதா என்பது விமர்சன ரீதியாக நோக்கத்தக்கதே.

## வினா-02

**அ)தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்பு அமையம்(சார்க்)பற்றி சுருக்கக் குறிப்புரை ஒன்று எழுதுக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ) பிராந்திய அமைப்பு என்ற வகையில் சார்க்கின் சாதனைகளை மதிப்பீடு செய்க.

### விடைக்குறிப்புகள்

அ) தெற்காசிய நாடுகளின் பொருளாதார சமூக கலாச்சாரத் துறைகளில் கூட்டுறவை ஏற்படுத்தும் நோக்கில் தாபிக்கப்பட்டதே தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமையமாகும்.

1. நாடுகள் - பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, நேபாளம்.

2. மேற்படி நாட்டுத் தலைவர்கள் சார்க் அமையத்தின் கொள்கைகள், நோக்குகள் இலக்குகள் என்பவற்றை உள்ளடக்கிய பட்டயத்திற்கு 1985ம் ஆண்டு டிசம்பர் மாதம் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற முதலாவது சார்க் மாநாட்டில் கையொப்பமிட்ட ஏழு தலைவர்களும் பின்வருவோராவர். பங்களாதேஷ் ஜனாதிபதி முகம்மது இர்ஷாத், மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம், பூட்டான்நாட்டு அரசர்-ஜிக் மொசங்ஜீ வாங்சுங், நேபாள மன்னர் பீரேந்திரா சீர்விக்ரம் சார்தேவ், பாரதத் தலைமை அமைச்சர் ரஜிவ் காந்தி, ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜயவர்த்தனா, பாகிஸ்தானிய ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் ஆகியோராவர்.

3. <u>தெற்காசிய நாடுகளில் காணக்கூடிய முக்கிய பண்புகள்</u>

அ) இவை புவியியல் ரீதியாக அண்மித்துக் காணப்படுபவை.

ஆ) இந் நாடுகளின் பிரதான மதங்கள் இந்து, இஸ்லாம், பௌத்தம்.

இ) தெற்காசிய நாடுகளிடையே பாகிஸ்தான் பங்களாதேஷ் மாலைதீவு என்பன இஸ்லாமிய நாடுகளாகும்.

ஈ) இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகள் இந்துக்களைப் பெரும் பான்மையாகக் கொண்டிருப்பதுடன் ஸ்ரீலங்கா, பூட்டான் என்னும் நாடுகள் பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டவையாகும்.

4. 1983 ஆகஸ்ட் 2ம் திகதி புதுடில்லியில் கூடிய மேற்படி 7நாடுகளின் வெளியுறவு மந்திரிகளின் முடிவின்படி 1985 டிசம்பர் 8ம் திகதி கைச்சாத்திடப்பட்ட சார்க் பட்டயத்தின் முக்கிய அம்சங்களாவன.

1. உறுப்புரிமை
2. நோக்கங்கள்

அ) தெற்காசிய மக்களின் நலன்களை மேம்படுத்துவதும் அவர்களது வாழ்க்கைத் தரத்தினைச் சீர்ப்படுத்துவதும்.

ஆ) பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம், கலாச்சார அபிவிருத்தி என்பவற்றைத் துரிதப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) இச்சமூக மக்கள் கௌரவத்துடன் வாழச் சந்தர்ப்பம் வழங்குதல். அவர்களின் முழுச் சக்தியையும் உணரல்.

ஈ) தெற்காசிய நாடுகளிடையே கூட்டுத்தன்னம்பிக்கையைப் பலப்படுத்தலும் மேம்படுத்தலும்.

உ) பரஸ்பர நம்பிக்கை, புரிந்துணர்வு என்பவற்றை ஏற்படுத்துதலும் மற்றவர்களுடைய பிரச்சினைகளில் கரிசனை கொள்ளுதலும்

ஊ) பொருளாதார, சமூக, கலாச்சார தொழில்நுட்பத் துறையில் பரஸ்பரஉதவியையும், தீவிர இணைப்பையும் மேம்படுத்தல்.

எ) மற்றைய அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் கூட்டுறவை ஏற்படுத்தல்.

ஏ) பொதுவான அக்கறையுள்ள விடயங்களில் தத்தமக்கிடையில் கூட்டுறவை அனைத்துலக அரங்கில் வலுப்படுத்துதல்.

ஐ) ஒத்த இலக்குகள், நோக்கங்கள் கொண்ட அனைத்துலக பிரதேச அமைப்புக்களுடன் ஒத்துழைத்தல்.

## ஆ)சார்க்கின் சாதனைகளும், மதிப்பீடுகளும்.

1. இணங்கப்பட்ட துறைகளில் கருத்தரங்குகள், பணிக்களங்கள் (Work Shop) குறுகிய காலப்பயிற்சிநெறிகள், தரவுப்பரிமாற்றம், காலநிலைபற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல் என்பவற்றைச் செயற்படுத்துகின்றது.

2. சார்க் தொடர்பாடல் (Audio-Visal Exchange) பரிமாற்றம் செய்தல். மற்றும் சுற்றுலா விருத்தி, புலமைப்பரிசில்கள் வழங்கல். இளைஞர் தொண்டர் திட்டங்கள் என்பவற்றைச் செயற்படுத்துதல். இவை மக்களிடையே தொடர்புகளை மேம்படுத்துவதுடன் தெற்காசிய நாடு களிடையே உள்ள பல்வேறு மக்களிடையே தொடர்பளிக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் உணர்த்துகின்றது.

3. <u>சார்க் அமைப்பிடையே பிராந்திய நிறுவனங்களைத் தாபித்தல்</u>

அ) சார்க் விவசாய தகவல் நிலையம் (SAJC) டாக்காவில் தாபிக்கப்பட்டுள்ளமை.

ஆ) சார்க் வானிலை ஆராய்ச்சி நிறுவனமொன்று அமைக்க அங்கீகாரம் பெறப்பட்டமை.

இ) கிராமிய தொழில்நுட்ப நிறுவனம், பிராந்திய கனிம நிலையம் (Regional Sottware Center) போன்றவை தொடர்பான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளமை.

4. ஆண்டுக்கொருமுறை கூடும் பிராந்தியக் கூட்டுறவில் பிராந்தியக் கூட்டுறவை மேம்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமை.

உ-ம் அ) வர்த்தகம், உற்பத்திச் சேவைகளில் கூட்டுறவை ஏற்படுத்தியுள்ளமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) சமூக, பொருளாதாரத் தரவுகளைத் திரட்டுவதற்காக வங்கியொன்று தாபிக்கப்பட்டுள்ளமை .

5. 1987ல் காட்மண்டு மாநாட்டிலும் 1988ல் இஸ்லாமாபாத் மாநாட்டிலும் பின்வரும் நடவடிக்கைகளுக்கு இணக்கம் காணப்பட்டமை.

அ) இயற்கை அனர்த்தங்களைத் தடுப்பதற்கான சூழலை விருத்திசெய்யும் கூட்டுறவு.

ஆ) சார்க் பிராந்திய பச்சை வீட்டு விளைவின் தாக்கம்.

இ) மனித வள அபிவிருத்திக்கான நிலையமொன்று தாபிக்கப்பட்டமை.

ஈ) கி.பி.2000ல் சார்க்கின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

6. சார்க்கின் உன்னத சாதனைகளைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

அ) இப் பிராந்தியத்தில் ஏற்படும் வரட்சி, வெள்ளப் பெருக்கு போன்ற அவசர நிலைமைகளுக்கு 231/480 கொண்ட உணவுப் பாதுகாப்பு ஒதுக்கமொன்றைத் தாபித்தமை.

ஆ) பயங்கரவாதத்தை அடக்குவதற்குப் பிராந்திய சாசனத்தை அங்கிகரித்தமை.

இ) பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர்நீதிமன்ற நீதிபதி மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு வீசா இன்றி பயணம் செய்யும் அனுமதிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை.

ஈ) போதைப் பொருள் வகைகளைத் தடை செய்யும் சாசன வரைவு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டமை.

உ) தெற்காசிய வறுமை ஒழிப்புக் குழு உதயம்

ஊ) 1992 சார்க் சூழல் ஆண்டாகவும் 1993 சார்க் வலது குறைந்தோர் ஆண்டாகவும் பிரகடனப்படுத்தியமை.

# மதிப்பீடு

1. பல்வேறு நடவடிக்கைகளை சார்க் சாதித்துள்ள போதிலும் உண்மையான பிராந்தியக் கூட்டுறவு இன்னும் ஏற்படவில்லை.

2. சார்க் இன்னும் நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையின் ஓர் அம்சம் மட்டுமே. ஆனால் அது அபிவிருத்தியின் கொள்கையல்ல.

3. சார்க் நாடுகள் இந்தியாவில் தங்கியுள்ளமை. இதனால் அது சுயமாகச் செயற்பட முடியாத நிலையில் உள்ளது.

4. சார்க் பிராந்தியத்தில் ஒரு நாட்டை இன்னொரு நாடு சந்தேகத்துடன் நோக்குதல்

உ-ம் பாகிஸ்தான், இந்திய உறவு விரிசல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா 03

**ஐக்கியநாடுகள் சபையின் பிரதான அமைப்புக்கள் பற்றி நுணுக்கக் குறிப்புரையொன்று எழுதுக.**

## விடைக்குறிப்புகள்

**உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சி**

1. முதலாம் உலக மகா யுத்தம் முடிவடைந்ததும் உலக சமாதானத்திற்கான அறை கூவல்கள் மீண்டும் ஒலிக்கலாயிற்று. உலக யுத்தங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு உலக மக்களை ஒன்றிணைக்கும் நோக்குடன் சமாதானத்தின் பக்கம் உலகு மக்களின் கவனம் ஈர்க்கப்பட்டது.

2. இவற்றின் பெறுபேறாக உதயமாகியதே சர்வதேச சங்கமாகும்.

3. ஆனால் காலப்போக்கில் சிற்சில நாடுகள் சர்வதே சநலனைவிடத் தத்தமது சொந்த நலன் கருதி மேற்கொண்ட சில நடவடிக்கைகள் சர்வதேச ஒத்துழைப்பு எனும் உன்னத நோக்கை அடையும் முயற்சி வெற்றியளிக்காமைக்கு முக்கிய காரணமாயிற்று. சர்வதேச சங்கத்தின் நோக்கம் தோல்வி கண்டதும் மீண்டும் ஓர் உலக மகா யுத்தம் ஏற்படலாயிற்று (இரண்டாம் உலக மகா யுத்தம்)

4. 2ம் உலக மகாயுத்தம் முடிவடைந்த பின்னர் சர்வதேச சங்கத்தில் காணப்பட்ட குறைபாடுகள் இல்லாதவகையில் ஐக்கிய நாடுகள் சபை என்ற பெயரில் சமாதானத்தை நிலைநாட்டும் ஒரு அமைப்பு எதிர்கால சந்ததியினரை யுத்த ஆபத்திலிருந்து காப்பாற்றும் நோக்கோடு 1945 இல் தோற்றுவிக்கப்பட்டது.

5. ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம் U.N.O

2ம் உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெலும், பிரித்தானியப் பிரதமர் வில்சன் சர்ச்சிலும் அத்திலாந்திக் கடலில் கப்பலொன்றில் (1941-08-14) ஒன்று கூடி உலக சமாதானத்தை ஏற்படுத்த முடிவுசெய்து ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டனர்.

6. இதையடுத்து 1943 அக்டோபர் மாதத்தில் அமெரிக்கா, சீனா, பிரித்தானியா, ரஷ்யா ஆகிய நாடுகள் மொஸ்கோவில் ஒன்று கூடி உலகில் சமாதானத்தை ஏற்படுத்த ஒரு தனிநிறுவனம் அமைக்க வேண்டுமென முடிவுசெய்தன.

7. இவற்றின் விளைவாக யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் சென்பிரான்ஸிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோ நகரில்(1945 ஜூலை) 50 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றிய ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. இம் மகாநாட்டிலேயே ஐக்கிய நாடுகள் சாசனம் உருவாக்கப்பட்டது.

8. 1945 ஒக்டோபர் 24ம் திகதி இச் சாசனத்தில் சீனா, பிரான்ஸ், சோவியத் நாடு, பிரித்தானியா, அமெரிக்கா ஆகியநாடுகள் கைச்சாத்திடப்பட்ட பின்பே அதேதினத்தில் உத்தியோகபூர்வமான முறையில் ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பித்து வைக்கப்பட்டது.(இன்றும் உலகில் அக்டோபர் 24ம் திகதியே ஐக்கிய நாடுகள் தினமாகக் கொண்டாப்படுகிறது.)

9. **ஐக்கிய நாடுகள் சபையின் பொது நோக்கங்கள்**

அ) சர்வதேச சமாதானத்தையும் பாது காப்பையும் பேணல்.

ஆ) நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல்(உறுப்புநாடுகள் ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் பிறிதொரு நாடு தலையிடாதிருத்தல்)

இ) சர்வதேச பொருளாதார, சமூக, கலாச்சார, மனிதாபிமானப் பிணக்குகளைத் தீர்த்தல்.

ஈ) மனித அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாத்தல். ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் சமமானவைகளே. எனவே அங்கத்துவ நாடுகள் தங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைச் சர்வதேச அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ளல் வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

10. **ஐக்கியநாடுகள் சபையின் பிரதான அமைப்புக்கள்**

ஐ.நா சபையின் பிரதான அமைப்புக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அ) பொதுச் சபை (General Assambly)

ஆ) பாதுகாப்புச் சபை (Security Council)

இ) பொருளாதார, சமூக சபை (Socio Economic council)

ஈ) நம்பிக்கைப் பொறுப்புச் சபை (Trustieship Council)

உ) சர்வதேச நீதிமன்றம் ( International Court Of Justice)

ஊ) செயலகம் (The Secretariat)

## அ) பொதுச் சபை

1. அனைத்து அங்கத்துவ நாடுகளையும் இது கொண்டிருக்கும். எல்லா அங்கத்துவ நாடுகளும் 5 பிரதிநிதிகளை பொதுச் சபைக்கு அனுப்பலாம். இருப்பினும் ஒரு வாக்கிற்கு மட்டுமே உரித்தானவர்களாவர்.
2. பொதுச் சபை பொதுவாக வருடத்தில் ஒரு முறை கூடும்.
3. இதன் தலைமையகம் நியுயோர்க்கில் அமைந்துள்ளது.



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சாசனத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு எந்தப் பிரச்சினையையும், எந்த அங்கத்தவ நாடும் விவாதிக்கலாம்.

5. முக்கிய நெருக்கடிப் பிரச்சினைகளைப் பற்றி முடிவெடுக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் சாதாரண பிரச்சினைகளை முடிவெடுக்க பெரும் பான்மை வாக்குகளும் போதுமானது.

6. இதன் பொறுப்புக்கள் 7 நிர்வாகக் குழுக்கள் மூலம் நிறைவேற்றப்படும்

அவையாவன

1. அரசியல் பாதுகாப்பு
2. பொருளாதாரம்
3. சமூகம் கலாச்சாரம்
4. தர்மகர்த்தா
5. நீதி
6. நிர்வாகம்
7. சிறப்பு அரசியல் குழு

7. பாதுகாப்புச் சபையின் சில உறுப்பினர்களையும், பொருளாதார சமூக சபையின் அனைத்து உறுப்பினர்களையும், பொதுச் செயலாளரையும் பொதுச்சபையே தெரிவு செய்யும்.

## ஆ) பாதுகாப்புச் சபை

1. இதன் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை 15(நிரந்தர அங்கத்துவ நாடுகள் 5 அவையாவன சீனா, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா, பிரித்தானியா ஏனைய 10 நாடுகளையும் பொதுச்சபை 2 ஆண்டுகளுக்குகொருமுறை தெரிவு செய்யும்) பாதுகாப்புச் சபையின் அங்கத்தவர் எண்ணிக்கையை 17ஆக உயர்த்துவதற்கும் யப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கும் நிரந்தர அங்கத்துவத்தை வழங்கவும் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது.

2. பாதுகாப்புச் சபையில் ஒரு தீர்மானத்தை எடுக்க 5 நிரந்தர அங்கத்துவ நாடுகளும் ஏனைய 4 நாடுகளும் வாக்களிக்க வேண்டும்.

3. 5 நிரந்தர அங்கத்துவ நாடுகளில் ஒரு நாடாவது பிரேரணையை நிராகரித்தால் நடைமுறைப்படுத்த முடியாது. இவ்விசேட அதிகாரம் 'வீட்டோ' எனப்படும்

4. <u>பாதுகாப்பு சபையின் நோக்கங்களும் ,செயற்பாடுகளும்.</u>

அ) ஐ.நாவின் நோக்கங்களுக்கும் ,கொள்கைகளுக்கும் ஏற்ப உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணல்.

ஆ) சர்வதேச மோதல்களுக்கு வழி கோலும் அபிப்பிராய பேதங்கள் பற்றி ஆராய்தல்.

இ) இத்தகைய மோதல்களைத் தீர்ப்பதற்கான வழிகளை அல்லது நிபந்தனைகளை முன் வைத்தல்.

ஈ) ஆயுதக் குறைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளல்.

உ) சமாதானத்திற் கெதிராக எழும் எச்சரிக்கைகள், ஆக்கிரமிப்புக்கள் பற்றி ஆராய்ந்து மேற் கொள்ள வேண்டிய வழிமுறைகளை முன்வைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்தில்

1. பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளல்.
2. ஆக்கிரமிப்பைத் தடுக்க பொருளாதாரத் தடை, ஒழுக்க நடவடிக்கையை எடுத்தல்.
3. இராணுவப் பலத்தைப் பிரயோகித்தல்.

## இ) பொருளாதார சமூக சபை

1. அங்கத்துவ நாடுகள் 54ஐக் கொண்டது.
2. 18 நாடுகள் 3ஆண்டு காலத்திற்குப் பொதுச் சபையால் தெரிவு செய்யப்படும்.
3. ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அமைப்புக்களை ஒன்றிணைக்கும் அமைப்பே இது.
4. இது வருடத்தில் இரண்டு தடவைகள் கூடும். (ஏப்பிரல் மாதத்தில் நியுயோர்க்கிலும், ஜுலை மாதத்தில் ஜெனிவாவிலும் கூடும்)
5. இந் நிறுவனத்தின் கடமைகள் துணைக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

அ) போக்குவரத்து, செய்தித் தொடர்புகள் குழு.
ஆ) புள்ளிவிபரக்குழு.
இ) சனத்தொகைக் குழு.
ஈ) சமூக வளர்ச்சிக் குழு.
உ) மனித உரிமைகள் பாதுகாப்புக் குழு.
ஊ) சிறுபான்மையினரின் பாதுகாப்புக் குழு.
எ) பெண்கள் நல பாதுகாப்புக் குழு.
ஏ) மேலும் ஐரோப்பிய ஆசிய, லத்தீன் அமெரிக்கா நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

## ஈ) நம்பிக்கைப் பொறுப்புச் சபை

1. சுதந்திரம் பெறாத நாடுகள் தாம் வளர்ச்சி பெறும் வரை வல்லரசுகளின் பொறுப்பில் இருக்கும். அவ்வாறு இருக்கும் நாடுகளால் (உறுப்பு) நிர்வகிக்கப்படும் நாடுகளைக் கண்காணிக்க இது அமைக்கப்பட்டது.
2. இச் சபையில் 12 உறுப்பினர்கள் இடம் பெறுவர். 3 ஆண்டுகளுக் கொருமுறை பொதுச் சபையால் இத் தெரிவு இடம் பெறும்

## உ) சர்வதேச நீதிமன்றம்

1. இது ஹெய்க் நகரில் அமைந்துள்ளது.
2. இந் நீதிமன்றத்தின் சட்டங்களை ஏற்றுள்ள எந்தவொரு உறுப்புநாடும் தமது பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ள இந் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கலாம்.
3. இதில் 15 நீதிபதிகள் இருப்பர் (பதவிக்காலம் 9 ஆண்டுகள்) இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றத்தில் ஸ்ரீலங்காவைச் சேர்ந்த திரு ஜயபதிரன என்பவரும் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஊ) செயலகம்**

1. ஐக்கிய நாடுகள் சபையின் ஏனைய அமைப்புக்களுக்குச் சேவையாற்றவே பொதுச் செயலகம் அமைக்கப்பட்டுள்ளது.

2. இதன் முதல்வர் செயலாளர் நாயகமாவார் (தற்போது செயலாளர் நாயகம் எகிப்து நாட்டைச் சார்ந்த பூத்ரஸ்பூத்ரஸ்காலி என்பவராவர் இதன் முதலாவது செயலாளர் நாயகம் ட்ரிக்வி லீ என்பவராவார்.)

3. செயலாளர் நாயகம் பாதுகாப்புச் சபையின் சிபார்சின் பேரில் பொதுச் சபையால் தெரிவு செய்யப்படுவார்.

4. ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நிர்வாகியான இவரது பிரதான கடமை உலக சமாதானத்தையும், பாதுகாப்பையும் பாதிக்கும் எந்தவிடயத்தையும் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகும்.

## வினா 04

**அ) ஐக்கிய நாடுகள் அமையத்தின் யாதாவது இரண்டு நிறுவனங்கள் பற்றி கருத்துரை வழங்குக.**

**ஆ) "உலக சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் அமையம் தோல்வி கண்டுள்ளது" ஆராய்க.**

## விடைக்குறிப்புகள்

அ) முதலாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் மீண்டும் ஓர் உலக மகாயுத்தம் ஏற்படக்கூடாது என்பதற்காக, உலக அமைதியைப் பேணும் நோக்கில் சர்வதேச சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும் முதலாம் உலக மகா யுத்தம் முடிவடைந்து 3 தசாப்தங்கள் செல்லுமுன்பே இரண்டாம் உலக மகா யுத்தமும் ஏற்பட்டது. மேலும் நவீன ஆயுத உற்பத்திப் பெருக்கமும் ஏற்படலாயிற்று. இந் நிலையில் உலக சமாதானத்தைப் பேணிப்பாதுகாக்கும் நோக்கில் 1945 ஒக்ரோபர் 24ம் திகதி தோற்றுவிக்கப்பட்ட அமைப்பே ஐக்கிய நாடுகள் சபையாகும்.

இவ் வமையத்தின் அடிப்படை நோக்கம் உலக சமாதானத்தை உறுதிப்படுத்தி அச் சமாதானத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளத்தக்க வகையில் பொருளாதார, சமூக, கலாச்சார அபிவிருத்தியை மேற்கொள்ளல் ஆகும் இதற்காகவேண்டி ஐக்கிய நாடுகள் அமையத்துடன் இணைந்த பல துணைநிறுவனங்கள் காணப்படுகின்றன.

1. ஐக்கிய நாடுகள் சபையின் வெற்றி அல்லது தோல்வி அது நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படுத்தும் செயல் திட்டங்களிலேயே தங்கியுள்ளது.

2. சபையின் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு மனித உரிமைகளைப் பாதுகாத்தல் அவசியம் என்பதால் மனித உரிமைகள் பற்றி பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

3. உலகில் வறுமை நிலவும் போது உரிமைகளைப் பாதுகாப்பது சிரமமாகும். இதனால் வறுமையை அகற்றி பொருளாதார, சமூக, கலாச்சார முன்னேற்றத்திற்காக ஐக்கிய நாடுகள் சபை பெருமளவில் முயற்சி யெடுத்து வருகின்றன \

4. விசேட உதவிகள் தேவைப்படும் மக்களுக்கு அவற்றை வழங்குவதற்காக பல நிறுவனங்கள் இத் தாபனத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாச்சார அமையம் (UNESCO)

1. இது 1946ல் நிறுவப்பட்டது.

2. ஐக்கிய நாடுகள் சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ள மனித அடிப்படை உரிமைகள், அடிப்படைச் சுதந்திரம் என்பவற்றை வளர்த்தலின் பொருட்டு கல்வி, கலாச்சார, விஞ்ஞான அபிவிருத்தியை ஏற்படுத்துவதே இன் நிறுவனத்தின் நோக்கமாகும்

3. குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளின் கல்வி கலாச்சார விஞ்ஞான அபிவிருத்திக்கு இன் நிறுவனம் கணிசமான பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

**உதாரணமாக**

புதிய கல்வித் திட்டங்கள், கற்பித்தலின் நவீன முறைகள், பயிற்சிகள் போன்றவற்றை அறிமுகப்படுத்துதல். பண உதவிகளை வழங்குதல், புதிய விஞ்ஞானக்கண்டு பிடிப்புக்களைக் கண்டு பிடித்தல், ஊக்கப்படுத்தல் கலாசார அபிவிருத்திக்காக கலை, இலக்கியம் சங்கீதம், போன்ற துறைகளுக்கு ஊக்கமளித்தல், உதவி வழங்குதல் போன்றன

4. இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு (குறிப்பாக ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்காக) இந் நிறுவனத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அதேபோல கலாச்சார முக்கோணத் திட்டத்திற்கும் இதன் பங்களிப்பு முக்கியமானதாகும்.

## உணவு விவசாய அமையம் (FAO)

1. இவ்வமைப்பு 1965ம் ஆண்டு நிறுவப்பட்டது. அனேக அங்கத்துவ நாடுகளின் அபிவிருத்தி, வறுமை காரணமாகப் பாதிக்கப்பட்டு வருவதை உணர்ந்த ஐ.நா.நிறுவனத்தினர் இத்தகைய நாடுகளின் உணவு உற்பத்தி, விவசாய அபிவிருத்தி போன்றவற்றைக் குறிப்பாகக் கொண்டே இந் நிறுவனத்தை நிறுவினர்.

2. இதன் பிரதான நோக்கம் - நாடுகளிடையே உணவு உற்பத்தியை பெருக்குவதாகும்.

4. உணவு விவசாயப் புள்ளிவிபரங்களைத் திரட்டல் நவீன முறைகளை அறிமுகப்படுத்துதல், விஞ்ஞானரீதியாக விவசாய விருத்திக்கு வழிகாட்டுதல் பேன்றவை அதன் நடவடிக்கைகள் ஆகும்.



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
PUBLIC LIBRARY
JAFFNA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் இலட்சியத்தை அடைவதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஏனைய சில இணைப் பணியகங்களாவன ,

1. உணவு விவசாய அமையம் (FAO)
2. ஐ.நாவின் கல்வி, விஞ்ஞான, கலாச்சார அமையம் (UNESCO)
3. உலக சுகாதார நிறுவனம் (WHO)
4. சர்வதேச தொழிலாளர் அமையம் (ILO)
5. மறுசீரமைப்பு, அபிவிருத்திச் சர்வதேச வங்கி (IBRD)
6. சர்வதேச நிதி நிறுவனம் (IMF)
7. சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IMC)
8. சர்வதேச அணுசக்தி முகவர் அமையம் (IAFA)
9. சர்வதேச அபிவிருத்திச்சபை (IDA)
10. சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமையம் (ICAO)
11. சர்வதேச தபால் ஒன்றியம் (UPO)
12. சர்வதேச தந்தி ஒன்றியம் (ITU)
13. அகில உலக வளிமண்டலவியல் ஆராய்ச்சித் தாபனம் (WMO)
14. கடலெல்லைகள் பற்றிய சர்வதேச மகாநாட்டு அமையம் (IMCO)
15. சுங்கத் தீர்வை வர்த்தகம் பற்றிய பொது உடன்படிக்கை (GATT)

ஆ) உலகசமாதானத்தைப் பாதுகாக்க அல்லது உறுதிப்படுத்த ஐக்கிய நாடுகள் சபை கொண்டுள்ள நடவடிக்கைகள் விமர்சன ரீதியில் நோக்கப்பட வேண்டியதாகும் ,

சர்வதேச சங்கத்தால் உலக சமாதானத்தைப் பேண முடியாமற் போனதன் காரணமாக 2ஆம் உலக மகாயுத்தம் ஏற்பட்டது. இனி மேல் இது போன்றதோர் யுத்தம் ஏற்படக்கூடாது என்பதைப் பிரதானமாகக் கொண்டு உலக சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டியிருந்தது. உலக மகாயுத்தங்களை எடுத்து நோக்குமிடத்து நாடுகளுக்கிடையே ஏற்பட்ட அடிப்படைப் பிரச்சினைகள் காலகதியில் விஸ்வரூபம் எடுப்பதன் காரணமாகவே யுத்தங்கள் தோற்றுவிக்கப்பட்டன. எனவே உலக சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் நாடுகளுக்கிடையிலான பிணக்குகள் சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டியதன் அவசியம் உணரப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் மற்றுமொரு உலக யுத்தம் ஏற்படவில்லை. இவ் வடிப்படையில் நோக்குமிடத்து ஐக்கிய நாடுகள் அமையம் உலக சமாதானத்தை ஏற்படுத்த வில்லையென்று முற்றுமுழுதாகக் கூறமுடியாது. பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளிடையே ஏற்பட்டுள்ள பிணக்குகளை (குறுங்காலப் பிணக்குகள் அல்லது நீண்ட காலப்பிணக்குகள்) ஐக்கிய நாடுகள் சபையினால் தீர்க்க முடியாமற்போன சந்தர்ப்பங்களும் உண்டு. உதாரணமாக ஈரான், ஈராக் ஆகிய நாடுகளிடையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் சுமார் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக உக்கிரமடைந்து இருந்தமை, மத்தியகிழக்குப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாமை, (இஸ்ரவேல் பலஸ்தீனப் பிரச்சினை) போன்ற அம்சங்களைக் குறிப்பிடலாம்.

இதனை எடுத்து நோக்குமிடத்து ஐக்கிய நாடுகள் சபை உலகசமாதானத்தைப் பேண வில்லை என்ற கூற்றில் சில உண்மைகள் இருப்பதை உணரலாம். இருப்பினும் உலக சமாதானத்தைப் பேணிக் கொள்ளக்கூடிய எவ்வித நடவடிக்கைகளையும் ஐக்கியநாடுகள் சபை மேற்கொள்ளவில்லை எனக் கூறமுடியாது.

பொதுவாக 1990ம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் சில நடவடிக்கைகளை நோக்குமிடத்து மேற்குறித்த வகையில் குறிப்பிட்ட சில நீண்ட காலப்பிரச்சினைகளுக்குத் தீர்வினைப்பெற மேற்கொண்ட சில முயற்சிகள் வெற்றியடையும் அறிகுறிகளையே காட்டிநிற்கின்றன.

உதாரணமாக 1993இன் இறுதிப்பகுதியில் நியுயோர்க் நகரில் பலஸ்தீன் இஸ்ரேலியத் தலைவர்களினால் கைசாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கை, மற்றும் 1994மே மாதம் நடைபெற்ற தென்னாபிரிக்காத் தேர்தலினைத் தொடர்ந்து நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை, (இனஒதுக்கற் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்குமெனக் கருதப்படுகிறது) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அதேநேரம் பொஸ்னிய சேபிய விவகாரம், சோமாலியா விவகாரம் போன்றன ஐ.நாவிற்கு ஒரு புதிய சவாலாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் ஏற்படக் கூடிய சிற்சில பிரச்சினைகள் உலக சமாதானத்திற்கான தலையீடாக அமைந்து காணப்படுகின்றன. இவற்றை பின்வருமாறு சுருக்கமாகத் தொகுத்துக்கூறலாம்.

அ) பிரச்சினை நிலைகளில் ஐக்கிய நாடுகள் சபையின் யோசனைகளை கட்டாயம் ஏற்க வேண்டும் என்ற நிலை இல்லாமை.
ஆ) சட்ட அதிகாரம் பொருந்தியதாக இன்மை.
இ) வல்லரசுகள் ஐக்கிய நாடுகள் சபைக்குப் புறம்பான முறையில் தனது பலத்தினைப் பிரயோகித்தல்.
ஈ) அமைப்பினுள் வல்லரசுகளின் தலையீடு.
இத்தகைய தலையீடுகளுக்கிடையே ஐக்கிய நாடுகள் சபை செயற்படும் போது சில சந்தர்ப்பங்களில் முயற்சிகள் தோல்வியடைவதும் உண்டு. எனவே உலக



115158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது என்ற கருத்து சற்று உண்மையாகிறது.

2ம் உலக மகா யுத்தம் முடிவடைந்து இன்று அரை நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. ஆனால் முதலாம் உலக மகா யுத்தம் முடிவடைந்து 2 தசாப்தங்களுக்குள்ளேயே 2ம் உலக மகாயுத்தம் ஏற்பட்டு விட்டது. எனவே 2ம் யுத்தத்தின் பின்னர் மீண்டும் ஒரு உலக யுத்தம் ஏற்படாமைக்கு ஐ.நா சபை முழுமையான காரணியா? இவ்வினாவினைச்சற்று அழுத்தமான முறையில் ஆராய்தல் வேண்டும். எவ்வாறாயினும் உலக சமாதானத்தைப் பேணத்தக்க முறையில் சில அத்தியாவசியமான கருமங்களை இது ஆற்றிவருவதை எம்மால்மறுக்க முடியாது.

## வினா-05

### சுதந்திரகால முதல் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றி சுருக்கமாக ஆராய்க.

## விடைக்குறிப்புகள்

வெளிநாட்டுக் கொள்கை என்றால் என்ன என்ற வினாவிற்கு விடைகாண பின்வரும் வரைவிலக்கணத்தை நோக்குவோம்.

'உலகின் மற்றைய பகுதிகளோடு ஓர் அரசாங்கத்தின் தொடர்புகளை நடத்துவதற்கான திட்டவட்டமானதும் அறிவு, அனுபவம், என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதுமான விரிவான திட்டமாகும். அது நாட்டின் நலனை வளர்ப்பதையும் பாதுகாப்பதையும் இலக்காகக் கொண்டது.'

-கியூ ஜிப்ஸன்-

1. வெளிநாட்டுக் கொள்கை என்ற வார்த்தையைப் பிரயோகத்திற்கு தெளிவானவரைவிலக்கணமொன்றைக் கூறுவது கடினம். இருப்பினும் ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையானது அந்நாட்டின் தேசிய நலனை வளர்ப்பதாக இருத்தல் வேண்டும் என்பது அனைத்து அரசியலறிஞர்களினதும் கருத்தாகும்.

2. ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையினை நிர்ணயிப்பதில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றுள் முக்கியமானது தேசிய நலனாகும்.

3. தேசிய நலன் பின்வரும் மூன்று அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.
   i.பாதுகாப்பு ii.தேசிய அபிவிருத்தி iii.உலகஒழுங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.வெளிநாட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் கருவியாகச் செயற்படுபவை

i. பாதுகாப்பு    ii. இராஜதந்திரம்

5. வெளிநாட்டுக் கொள்கைகள் உருவாக்கம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்.

i. புவியியல் அமைப்பு    ii. பொருளாதார அபிவிருத்தி
iii. அரசியல் மரபு    iv. உள்நாட்டுச் சூள்நிலை
v. சர்வதேச சூழ்நிலை    vi. இராணுவப் பலம்
vii. தேசிய இயல்பு.

# இலங்கையின் வெளிநாட்டுக்கொள்கை.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையாக்கத்தில் பாதிப்புச் செலுத்தும் இரண்டு அரசியல் காரணிகள் பின்வருமாறு.

1. சுதந்திரத்தின் பின்பு கட்சிகள் மாறி, மாறி அரசாங்கத்தை அமைத்தமை.
2. பிரதான கட்சிகளான ஐக்கியதேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் வெளிநாட்டுக் கொள்கைகள்.

அ) அடிப்படை ஒற்றுமை நிலவும் பிரதான அம்சங்கள் (வெளிநாட்டு கொள்கையில்)

1. காலனி ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு.
2. ஆயுதக் குறைப்புக்கு ஆதரவு.
3. வல்லரசுகளுடன் கூட்டுச் சேராமை.

ஆ) அடிப்படை அபிப்பிராய வேறுபாடுகள் நிலவும் அம்சங்கள்

**மேலைத்தேய நாடுகள் கம்யூனிச நாடுகளுடனான தொடர்புகள். இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் இதர காரணிகளானவை**

1. புவியியல் அமைப்பு
2. பொருளாதார நிர்ப்பந்தங்கள்
3. ஆட்சியிலுள்ள அரசாங்கங்களின் இயல்பு
4. பல்லின சமூகத்தின் இயல்புகள்
5. அரசியல் தலைமைத்துவத்தின் இயல்புகள்
6. சர்வதேச அரசியல் சூழ்நிலைகள்

## சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகள்

### 1. 1948 முதல் 1956 வரை

ஆட்சியிலிருந்த கட்சி    ஐக்கிய தேசியக் கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர்கள் திரு. D.S சேனநாயக்கா, திரு டட்லி சேனநாயக்கா
சேர் ஜோன் கொத்தலாவலை

வெளிநாட்டுக் கொள்கையாக்கத்தில் கவனத்திற் கொள்ளப்பட்ட காரணிகளாவன

1. கம்யூனிசத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தல்.
2. பாராளுமன்ற தாபனங்களைப் புதிதாக உருவாக்கப்பட்ட
   கம்யூனிசத்திலிருந்து பாதுகாத்தல்.
3. ஆகவே மேலைத்தேய நாடுகளுடன் நெருங்கிய உறவுகளை வைத்திருத்தல். உதாரணமாக (பிரித்தானியா அமெரிக்கா போன்ற நாடுகளுடன்)

☆ பொதுநலவாய அமைப்பை ஒரு மூன்றாவது சக்தியாகக் கருதிய திரு D.S சேனநாயக்கா அவர்கள் பிரித்தானியாவுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொள்வதையே இலங்கையின் பாதுகாப்பாகக் கருதினார். இதன்படி எமது நாடு பிரித்தானியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டது.

☆ கம்யூனிச நாடுகளுடன் இலங்கையின் நிலைப்பாட்டை பின்வரும் காரணிகள் தீர்மானித்தன.

1. பிரித்தானியாவுடனான தொடர்பு.
2. ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறுவதற்கான இலங்கையின் விண்ணப்பத்தை ரஷ்யா மறுத்தமை.
3. உள்நாட்டு அரசியல் சூழ்நிலை.

சீனாவுடனான தொடர்புகள் (இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் புறநடையாகக் கொள்ளலாம்)

அ) 1950ல் மக்கள் சீனக் குடியரசுக்கு இலங்கை அங்கீகாரம் வழங்கியது (கம்யூனிசம் அல்லாத நாடுகளைப் பொறுத்து இவ்வாறு அங்கீகாரம் வழங்கிய நாடுகளுள் ஸ்ரீலங்கா முன்னணி வகிக்கிறது)

ஆ) 1952 ஸ்ரீலங்கா சீன வர்த்த உடன்படிக்கை (ஒப்பந்தம்) (5வருடங்களுக்கு சீனா இலங்கையின் இறப்பரைப் பெற்று அரிசியை வழங்குதல்) இலங்கைக்கு நன்மை பயக்கக்கூடிய இவ்வொப்பந்தம் இன்று வரை புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. தற்போது சீனா அரிசிக்குப் பதிலாக பெற்றோலியத்தை வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

## 2. 1956 முதல் 1965 வரை

ஆட்சியிலிருந்த கட்சிகள் மக்கள் ஐக்கிய முன்னணி (பாஷாபெரமுன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CP, S.L.F.P, VLSSP, LSSP ஆகியவற்றின் கூட்டு)
ஐக்கிய தேசியக் கட்சி 1960 மார்ச்
ஸ்ரீ.ல.சு.கட்சி 1960 ஜுலை 6

பிரதமர்கள்

திரு S.W.R.D பண்டாரநாயக்கா 1956-1959
கலாநிதி W.தகநாயகா (காபந்துப் பிரதமர்)
திரு டட்லி சேனநாயக்கா 1960 மார்ச் முதல்
திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா (1960 ஜுலை முதல் 1965 வரை

பொதுவாக இக்காலகட்டம் ஸ்ரீ.ல.சு.கட்சியின் செல்வாக்குமிக்க காலகட்டம் எனலாம். எனவே இக்காலகட்டத்தில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையாக்கத்தில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் பங்களிப்பே முக்கியமானதாகும்

அ) திரு S.W.R.D பண்டாரநாயக்கா இந்திய பிரதமர் திரு நேருவுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார்.
ஆ) அணிசேராக் கொள்கையை இலங்கை பின்பற்றலாயிற்று.
இ) பிரித்தானியாவுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தி இலங்கையில் முகாமிட்டிருந்த பிரித்தானியக் கடற்படையை இங்கிருந்து அகற்றியமை.
ஈ) கம்யூனிச நாடுகளுடன் இராஜதந்திரத் தொடர்புகள் ஆரம்பிக்கப்பட்டமை.

1. சீனா, ரஷ்யாவுடன் இராஜதந்திரத் தொடர்புகள்
2. வர்த்தகத் தொடர்புகள்
3. கம்யூனிச இலக்கியங்கள், பிரசுரங்கள் போன்றவற்றின் இறக்குமதிக்கான அனுமதி இவற்றின் காரணமாக மேற்குலகத் தொடர்புகளும், செல்வாக்கும் கணிசமாகக் குறைந்தன.

## 03 1960 இன் பின்னர்

சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களும் இதே கொள்கைகளையே கடைப்பிடித்தார்.

☆ காப்புறுதிக் கூட்டுத்தாபனமும், ஏனைய கம்பனிகளும் தேசியமயப்படுத்தப் பட்டமை (மேலைத்தேய நாடுகளின் கம்பனிகள்)

☆ அமெரிக்கா பொருளாதார உதவியை நிறுத்தியமை (1963) 1963ல் அமெரிக்காவின் 7வது கடற்படை இலங்கை எல்லைப்புறக் கடலுக்குவர மறுப்புத் தெரிவிக்கப்பட்டமை.

☆ 1964ல் கிழக்கு ஜேர்மனியுடன் தொடர்புகளை மேற்கொண்டமை

☆ சீனாவுடன் நெருங்கிய தொடர்பு.

அ) 1962ல் இந்திய சீனப் போரை முடிவுக்குக் கொண்டுவர மகாநாடு கூட்டப்பட்டமை.

ஆ) 1964ல் சீனப்பிரதமர் சூ.என்-லாய் அவர்களின் இலங்கை விஜயம்.

☆ அணிசேராக் கொள்கையை இலங்கைக்கு ஏற்றிருந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.1965 முதல் 1970 வரை

ஆட்சியிலிருந்த கட்சி — ஐக்கிய தேசியக் கட்சி

பிரதமர் — திரு டட்லி சேனநாயக்கா அவர்கள்

முன்னைய அரசாங்கத்தைப் போலவே அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக அறிவித்தமை.

ஆனால் கம்யூனிச நாடுகளுடன் படிப்படியாக நெருக்கத்தைக் குறைத்து மேலைத்தேய நாடுகளுடன் நட்புறவுவைக்கத் தலைப்பட்டமை

உ-ம் 1. சீனாவுடனான தொடர்புகளைக் குறைத்துக் கொண்டமை.

2. 1965ல் (ஏப்பிரல் திங்கள்) இலங்கையிலிருந்த கம்யூனிசநாடுகளின் இராஜதந்திரிகளைக் குறைக்க உத்தரவிட்டமை.

3. சீனத் தூதுவராலயத்தின் இரண்டு இராஜதந்திரிகளின் வீசாக்களைப் புதுப்பிக்க மறுத்தமை.

4. கொழும்பில் இருந்த சீனத் தூதுவராலயத்தில் இருந்த பிரசுரங்கள் புத்தகங்களைக் கைப்பற்றியமை.

5. அமெரிக்காவுடனான (நட்புறவு முன்னைய அரசாங்கம் தேசியமயமாக்கிய கம்பனிகளுக்கு நட்டஈடு வழங்க முன்வந்தமை) இதனால் 1966 பெப்ரவரித் திங்கள் முதல் மீண்டும் அமெரிக்கா உதவிகள் இலங்கைக்குக் கிடைத்தன.

6. பிரித்தானியாவுடன் நெருக்கமான தொடர்புகள்.

7. இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கான ஆதரவு

8. சீன நேசம் குறைந்தமையால் பாரத ஸ்ரீலங்கா உறவுகளில் முன்னேற்றம்.

## 5 1970 முதல் 1977 வரை

வெற்றி பெற்ற கட்சிகள் — ஐக்கிய முன்னணிக் கூட்டு (S.L.F.P, L.S.S..P,CP )ஆகியவற்றின் கூட்டு

பிரதமர் — சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையார்.

இவ்வரசாங்கம் வெளிநாட்டுக் கொள்கைகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

1. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, வட வியட்னாம், வட கொரியா, தென்வியட்னாம் போன்ற தேசங்களுக்கு இராஜந்திர அங்கீகாரம் வழங்கியமை.

2. சீனாவுடன் மீண்டும் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமை (இலங்கைக்கு சீனா எல்லா வகையிலும் உதவ முன்வந்துள்ளது)

3. இலங்கை, இந்திய உறவில் முன்னேற்றகரமான தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டமை

4. இலங்கையிலிருந்த சர்வதேச ஆக்கிரமிப்பாளர்களான இஸ்ரேலியர்கள் விரட்டியடிக்கப்பட்டமை. பலஸ்தீனம் உற்பட அரபுலகுடன் சுமுக நிலைமையை வளர்த்துக் கொண்டமை.

5. பங்களாதேசப் பிரச்சினையில் நடுநிலைமை வகித்தமை. 1972 மார்ச் திங்கள் பங்களாதேசத்தை அங்கீகரித்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கம்யூனிச நாடுகளுடன் தொடர்புகளை அதிகரித்துக் கொண்ட இலங்கை மேற்குலக நாடுகளுடன் தொடர்புகளை குறைத்துக் கொண்டமை.

7. 1972மே திங்கள் 22ம் நாள் ஸ்ரீலங்கா குடியரசானது. இதனால் பிரித்தானியாவுடனான உறவுகளில் இடை வெளிஏற்பட்டது.

8. 1976ல் இலங்கையில் அணிசேரா உச்சி மகாநாடு நடாத்தப்பட்டது. இது இவ்வரசாங்கத்தின் அணிசேராக் கொள்கையினை உறுதிப்படுத்துகிறது.

9. யூகோஸ்லாவியா, ருமேனியா, பாக்கிஸ்தான் போன்ற நாடுகளுடன் இலங்கை நெருங்கிய உறவினைக் கொள்ளலாயிற்று.

## 1977 முதல் 1994 வரை

| | |
|---|---|
| வெற்றிபெற்ற கட்சி | ஐக்கிய தேசியக் கட்சி |
| பிரதமர் | திரு ஜே.ஆர் ஜயவர்த்தனா அவர்கள் (1978 பெப்ரவரி திங்கள் 4இன் பின்னர் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றார். |
| | திரு ரணசிங்க பிரேமதாச அவர்கள் (1988முதல் 1993 மே 01ம் திகதி வரை) |
| | திரு டி.பி விஜேதுங்க அவர்கள்(1993மே முதல் 1994 நவம்பர் வரை) |

1. 1977ல் பதவியேற்ற புதிய அரசாங்கம் முன்னைய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையினைத் தொடர்ந்தும் கடைப்பிடித்திருப்பதை எடுத்துக் காட்டியது.

அணிசேரா, ஆயுதக் குறைப்பு, சமாதான சகவாழ்வு போன்றவற்றில் இதைக் காணலாம். 1978ல் காவன்னாவில் நடைபெற்ற வெளியுறவு அமைச்சர்கள் மகாநாட்டில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையார் ஏற்கனவே முன்வைத்திருந்த இந்து மகாசமுத்திரத்தின் பிராந்திய சமாதானக் கொள்கையை எமது இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு ASC ஹமீட் அவர்கள் வலியுறுத்தியமை இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் தொடர்ச்சியைக் காட்டுகிறது.

2. இருப்பினும் மேலைத்தேய பாதுகாப்புக் கொள்கையில் கரிசனை காட்டப்பட்டது. பிரித்தானிய அமெரிக்க உறவுகள் வலுப்பெற்றன.

3. தெற்காசிய நாடுகளுடன் நெருக்கத்தை ஏற்படுத்த முயற்சித்தமை (1980இன் பின்னர் ஸ்ரீலங்கா-பாரத உறவு நிலையில் ஒரு விரிசல் நிலையைக்காட்டுகின்றது. இதற்கு மூல காரணம் ஐ.தே.கட்சி அரசின் ஆரம்ப நடவடிக்கைகளும் அமெரிக்காவுடனான நெருக்கமான பிணைப்புமாகும்.)

4. ஈரான்-ஈராக் யுத்தத்தை நிறுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் ஈரானில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த அமெரிக்க உளவாளிகள் எனக் கருதப்பட்ட உத்தியோகத்தர்களை மீட்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தமை,

5. சீனாவுடன் மரபு ரீதியாகக் கொண்டிருந்த உறவுகள் மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணப்பட்டமை.தற்போது இந்நிலை வலுப்பெற்றுள்ளது.

6. 1986-87இல் காணப்பட்ட வெளிநாட்டுக் கொள்கைகளுக்கும் 1988இன் பின்னர் காணப்பட்ட கொள்கைகளுக்குமிடையில் சில சில மாற்றங்கள் காணப்படுகின்றன.

**சுருக்கமாக-**

ஜப்பானுடனும் அமெரிக்காவுடனும் அரசாங்கத்தின் உறவுகளும், ஆசியான் நிறுவனத்தில் இலங்கை அங்கத்துவம் பெற எடுத்த நடவடிக்கைகளும் S.L.F.P அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையிலிருந்தும், அனிசேராக் கொள்கையிலிருந்தும் விலகிச் செல்லும் போக்கையே காட்டியது.

1989ல் திரு ரணசிங்ஹ பிரேமதாசா அவர்கள் இந்திய உறவில் ஒரு வித விரிசல் நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். விசேடமாக இந்திய அமைதிகாக்கும் படையினை அனுப்புமுகமாக இவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் இதற்கு மூல காரணமாக அமைந்திருந்தன.

1992ல் சார்க் அமைப்பின் தலைவராக ஜனாதிபதி பிரேமதாச தெரிவு செய்யப்பட்டதை அடுத்து சார்க் நாடுகளுடன் மீண்டும் நெருக்கமான உறவினை இவர் வைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

1993மே மாதம் பதவியேற்ற ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க அவர்கள் வெளிநாட்டுக் கொள்கையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார் எனக்கொள்ள முடியாது. அவர் பதவியேற்றதும் அவரின் கொள்கைப் பிரகடனத்திலிருந்து இதை அறிய முடிகிறது.

1994 இன் பின்னர்

| | |
|---|---|
| வெற்றிபெற்றகட்சி | : பொதுசனஐக்கிய முன்னணி. |
| ஜனாதிபதி | : திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க |

ஐ.தே. கட்சியின் வெளிநாட்டுக் கொள்கைக்கும் PAயின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்குமிடையில் பாரிய மாற்றம் இதுவரையில்லை. முதலாளித்துவ நாடுகளுடனும் இந்தியாவுடனும் தொடர்புபடுப்படுத்தப்பட்டுள்ளமை முக்கிய அங்கமாக எடுத்துக்கூறப்படுதல் வேண்டும்.

## வினா 6

**இலங்கையின் உள்ளூராட்சி முறை தொடர்பாகப் பின்வரும் தலைப்பின் கீழ் ஆராய்க.**

**அ) தேர்தல் முறை**

**ஆ) பிரதேச சபைகளின் அமைப்பும், நோக்கங்களும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைக்குறிப்புகள்

அ. இலங்கை ஓர் ஒற்றையாட்சி நாடாகும். எனவே இலங்கையின் உள்ளூராட்சி முறைகளை அதிகாரப் பரவலாக்கத்திற்கான அமைப்புக்களாகவே நோக்குதல் வேண்டும். ஏனெனில் மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் கடமைகளையும் செய்யும் நிறுவனங்களாகவே இவை விளங்குகின்றன. இவ்வடிப்படையில் இன்று இலங்கையில் மாகாணசபைகள், மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள், கிராமோதய சபைகள் என்பன அமைந்து காணப்படுகின்றன.

இலங்கையில் காணப்படும் இவ் உள்ளூராட்சி அமைப்புக்களில் கிராமோதய சபைக்கான அங்கத்தவர் தெரிவு மாத்திரம் பொது மக்களின் வாக்கெடுப்பின் மூலமாக நடத்தப்படுவதில்லை. குறித்த கிராமோதயப் பிரிவில் காணப்படும் பதிவு செய்யப்பட்ட சமூக சேவை இயக்கங்களின் தலைவர்களே அங்கத்துவம் வகிப்பர்.

இருப்பினும் இதர உள்ளூராட்சி அமைப்புக்களான மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை என்பவற்றிற்கான அங்கத்தவர் தெரிவானது மக்கள் வாக்கெடுப்பின் மூலம் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இத் தெரிவானது விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் பட்டியல் முறைக்கமைய தேர்தல்கள் நடாத்தப்படுகின்றன. இங்கு கட்சிகள் அல்லது குழுக்கள் பெற்ற வாக்குகளின் விகிதாசாரத்திற்கிணங்க ஆசனங்கள் பகிர்ந்தளிக்கப்படும். கட்சிகள் அல்லது குழுக்கள் பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கைக்கு இணங்க அதிக விருப்புத் தெரிவு வாக்குகளைப் பெற்ற அபேட்சகர்கள் உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

1991ம் ஆண்டு மே மாதம் 11ம் திகதி இலங்கையில் நடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலானது 1990ம் ஆண்டு 25ம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் திருத்தச்-சட்டமூலத்திற்கிணங்க நடாத்தப்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இத் தேர்தலின் போது நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யவேண்டியது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினுடாக அல்லது சுயேற்சைக் குழுவின் ஊடாகவாகும். நியமனப் பத்திரம் தாக்கல் செய்கையில் கட்சிகள் அல்லது குழுக்கள் முன்வைக்கும் பட்டியலின் எண்ணிக்கையானது தேர்தல் சட்டத்திற்கிணங்க அமைந்திருத்தல் வேண்டும். அதாவது குறித்த உள்ளூராட்சி சபைக்காகத் தேர்ந் தெடுக்கப்பட வேண்டிய அங்கத்தவர் எண்ணிக்கையை விட 1/3 மடங்கு அங்கத்தவர்களை மேலதிகமாகக் கொண்டதாக பட்டியல் அமைத்தல் வேண்டும். அதே நேரம் இத் தொகை 6க்கு அதிகமாகாமல் அமைதல் அவசியமாகும்.

உதாரணம் 1. 12 அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமாயின்
12+12 இன் 1/3=16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் 2. 24 அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமாயின்
24+06=30

மேற்படி உதாரணம் 1இல் 1/3 வீதமான மேலதிகமான அங்கத்தவர்களும் உதாரணம் 2இல் மேலதிகமான 6 அங்கத்தவர்களும் கொண்டதாகப் பட்டியல் அமைக்கப்படுவதை அவதானித்தல் வேண்டும்

மேலும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்படுகையில் 40%க்குக் குறையாத இளைஞர்கள் வேட்பாளர்களாக உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும் முக்கியமான விடயமாகும். தாக்கல் செய்யப்பட்ட பட்டியல் தேர்தல் ஆணையாளரால் பரிசீலிக்கப்பட்டு பட்டியலில் இடம் பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு சிங்கள அகரவரிசைக்கிணங்க இலக்கங்கள் வழங்கப்படும்.

வாக்காளர் வாக்களிக்கும் போது தாம் விரும்பும் கட்சிக்கு அல்லது சுயேற்சைக் குழுவிற்கு வாக்களிக்கலாம். மேலும் எக்கட்சிக்கு வாக்காளர்கள் வாக்கினை அளித்துள்ளனரோ அக்கட்சியைச் சேர்ந்த வேட்பாளருக்கு விருப்பத்தெரிவு வாக்கினை வழங்க முடியும்.

விருப்பத்தெரிவினை வழங்கும் போது ஒரே அபேட்சகருக்கு 3 விருப்பத் தெரிவு வாக்குகளையும் அல்லது அபேட்சகர்களுக்குப் பிரித்துத் தமது விருப்பத் தெரிவுகளையும் வழங்க முடியும் (விருப்பத் தெரிவு கட்டாயமானதல்ல) வாக்குக் கணிப்பு இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

1. கட்சிகள் அல்லது குழுக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குகளைக் கணித்து ஆசனங்களை ஒதுக்குதல்.
2. விருப்பத் தெரிவுகளைக் கணித்து அபேட்சகர்களைத் தீர்மானித்தல்

ஆசனங்களைப் பகிர்ந்தளிக்கும் முறையைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

அ) ஆகக்கூடுதலான வாக்குகளைப் பெற்ற கட்சி அல்லது குழுவிற்கு இரண்டு போனஸ் ஆசனங்களை வழங்குதல்

ஆ) முடிவான எண்ணினைக் கணித்தல்

$$\text{முடிவான எண்} = \frac{\text{செல்லுபடியான மொத்த வாக்குகள்}}{\text{ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை} - 2}$$

இ) முடிவான எண்ணைக் கொண்டு கட்சிகள் அல்லது குழுக்கள் பெற்ற வாக்குகளைப் பிரித்து கட்சிகள் அல்லது குழுக்கள் பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.

ஈ) இவ்வாறு பகிரப்பட்டபின் மேலும் ஆசனங்கள் எஞ்சியிருப்பின் மிகப் பெரும் மிகுதிக்கிணங்க அந்த ஆசனங்களை வழங்குதல்

உ) இறுதியாக விருப்பத் தெரிவுகளின் அடிப்படையில் அங்கத்தவர்களைத் தீர்மானித்தல்.

இலங்கையில் மாநகர நகர பிரதேச சபைகளுக்கான தேர்தலின் போது தற்போது இந்த வழிமுறையே பின்பற்றப்படுவது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

**ஆ) பிரதேச சபைகள்**

1. இது 1978இல் ஸ்தாபிக்கப்பட்டது.
2. இதன் உறுப்புரிமையானது கிராமோதய சபைத்தலைவர்கள் மற்றும் பதவி வழிகாரணமாக உதவி அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் (உதாரணமாக கிராமசேவையாளர், விசேட சேவையாளர் போன்றோர்) இடம் பெறுவர்.
3. இச் சபையின் தலைவராக பதவி வழியற்ற யாராயினும் ஒருவர் (சபை தெரிவு செய்பவர்) இடம் பெறுவார். இச் சபையின் செயலாளராகப் பதவி வழிகாரணமாக உதவி அரசாங்க அதிபர் இடம் பெறுவார்.
4. 1987ம் ஆண்டின் 15ம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டமூலம் பிரதேசசபை அமைப்பு தெரிவு, நோக்கங்கள் அதிகாரங்கள் செயற்பாடுகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தின.

## 1987ம் ஆண்டின் 15ம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டமூலம்

### அ) இதன் நோக்கம்

உள்ளூராட்சி மட்டத்தில் நிர்வாக மாற்றம், அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக முடிவுகளை எடுத்தல், நடைமுறையில் பயனுறும் வகையில் மக்கள் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக்களை வழங்கல்.

### ஆ) இச் சட்டத்தின் படி

பிரதேச சபைப் பிரதிநிதிகள் தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படுவர்.

இ) இதன் படி முதலாவது பிரதேச சபைகளுக்கான தேர்தல் 1991மே மாதம் 11ம் திகதி நடைபெற்றது.

ஈ) இலங்கையிலுள்ள 25 நிர்வாக மாவட்டங்களிலும் 257 பிரதேச சபைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன (இவற்றுள் வடக்கு, கிழக்கு மகாணங்களில் அமைந்துள்ள 8 மாவட்டங்களிலும் 63 பிரதேச சபைகள் உண்டு .இந்த 8 மாவட்டங்களிலும் தேர்தல் 1991இல் நடை பெறவில்லை. மேற்படி தேர்தல் மூலம் 194 பிரதேச சபைகளுக்கான அங்கத்தவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### உ) பிரதேச சபைகளின் நிர்வாக எல்லை

ஓர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காணப்படும் மாநகரசபை, நகரசபை எல்லைகள் தவிர்ந்த ஏனைய நிலப்பரப்பு, பிரதேச சபைகளின் நிலப்பரப்பாகும்.

### ஊ) பிரதேச சபையின் உறுப்பினர்கள்

1. உறுப்பினர் எண்ணிக்கை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணசபை அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் விசேட கட்டளை ஒன்றினால் தீர்மானிக்கப்படும்

2. உறுப்பினர்கள் பிரதேச சபை வாக்காளர்களினால் விகிதாசார தேர்தல் முறையின் கீழ் தெரிவு செய்யப்படுவர்.

3. சபையில் அதிக ஆசனங்களைப் பெறும் கட்சி அல்லது குழு ஆட்சி அதிகாரத்தைப் பெறும் அதிகாரத்திற்கு வரும் கட்சி அல்லது குழுவிலிருந்து துணைத் தவிசாளரும் தெரிவு செய்யப்படுவர்.

4. பதவிக்காலம்

தேர்தல் முடிந்து பதவியேற்ற நாளிலிருந்து 4 வருடங்களாகும். இக்காலகட்டத்தைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ அமைச்சருக்கு அதிகாரமுண்டு.

## எ. தவிசாளரும், துணைத் தவிசாளரும்.

1. தவிசாளரே சபையின் நிறைவேற்று அலுவலராவார்.

2. சட்டத்தின் மூலம் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் ஒரு பிரதேச சபையினரால் செய்யப்படவேண்டிய, நிறைவேற்றப்பட வேண்டியவையெனப் பணிக்கப்பட்ட செயல்கள், பொறுப்புக்களுக்கு தவிசாளருக்கு இருக்கும் அதிகாரத்தைச் செய்யலாம்.

3. தவிசாளரின் அதிகாரங்கள் கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றை எழுத்திலான கட்டளைகள் மூலம் துணைத் தவிசாளருக்கு வழங்கலாம்.

## ஏ) பிரதேச சபைக் குழுக்கள்

பின்வரும் நோக்கங்களுக்காகப் பிரதேச சபைக் குழுக்கள் அமைக்கப்படலாம்.-

1. நிதி கொள்கைகள் உருவாக்கம்.
2. வீடமைப்பு சமூகசேவை உருவாக்கம்.
3. தொழில் நுட்ப சேவைகள் வழங்கல்.
4. சுற்றாடலும் வாழ்க்கை வசதிகளும்.

## ஐ) பிரதேச சபைகளின் அதிகாரங்கள்

1. தனக்குப் பொருத்தமான பதவிகளை உருவாக்கல்.
2. பிரதேசசபையின் சேவையிலுள்ள ஏதேனும் ஒரு பதவிக்கு அல்லது உத்தியோகத்திற்கான நியமனங்களைச் செய்தல், சேவையை விட்டும் அகற்றுதல்.
3. பிரதேச சபையிலிருந்து இளைப்பாறுபவர்களின் ஓய்வூதியத்தை வழங்குதல்.
4. தனது சேவைகளைச் செய்யபிரதேச சபைகளுடன் அல்லது உள்ளூராட்சி அமைப்புகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல்.
5. சபையின் இப்பரப்பில் உள்ள அசையும் அசையா ஆதனங்களையும் சொத்துக்களையும் உரித்தாக்கல் (அமைச்சரின் அனுமதியுடன்)
6. காணி கட்டிடங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல், குத்தகைக்கு விடுதல்.



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. படகுச்சேவைகளை இஸ்தாபித்தல்.
8. வேலைவாய்ப்புத் திட்டங்களை ஒழுங்கு படுத்துதல்.
9. பிரதேசப் பாடசாலைகளைத் திருத்தல், மூடுதல், பெயர்சூடல், தரம் உயர்த்துதல்
10. தனது நிதியத்தில் ஒரு பாகத்தை மகளிர் சிறுவர் நலனோம்பும் சேவைகளுக்கு ஒதுக்குதல் (உதாரணமாக சுகாதார வசதிகள்)
11. நிதியத்தின் ஒரு பகுதியைக் கிராம அபிவிருத்திக்கு ஒதுக்குதல்.
12. சமய கலாசார இலக்கிய விழாக்களை ஒழுங்கு செய்தலும், பரிசில்களை வழங்குதலும்
13. மகளிர் அபிவிருத்தி.
14. ஏழை நிவாரணம்.

இது போன்ற 24 திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மறைந்த ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் இச் சபைகளை கிராமிய இராஜ்யங்களாக மாற்றவும், சனசக்தி திட்டத்தை இப்பிரதேச சபைகளினூடாக அமுல் படுத்தவும் நடவடிக்கை எடுத்துவந்தார். பிரதேச சபைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கடந்த 21 வருடங்களாக போதிய அபிவிருத்தியைக் கண்டு கொள்ள முடியாமை இச் சபைகள் தற்போது எதிர்நோக்கும் மிக முக்கிய பிரச்சினையாகும். இவற்றின் செயற்பாடுகளையும் அதிகாரப் பிரயோகங்களையும் பொறுத்திருந்துதான் அவதானிக்க வேண்டும்.

## வினா - 7

**இலங்கையின் உள்ளூராட்சி முறை தொடர்பாகப் பின்வருவன பற்றி சிறு குறிப்புகள் எழுதுக.**
**அ) மாநகரசபைகள்**
**ஆ) நகரசபைகள்**

## விடைக்குறிப்புகள்

### இலங்கையின் உள்ளூராட்சி அமைப்புகள்

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலங்களில் இலங்கையில் நடைமுறையில் இருந்த உள்ளூராட்சி அமைப்புக்களைப் பின்வருமாறு வகுக்கலாம்.

அ) மாநகர சபைகள்
ஆ) நகரசபைகள்
இ) பட்டின சபைகள்.
ஈ) கிராமசபைகள்.

### அ) மாநகரசபைகள்

1. 1947ம் ஆண்டின் மாநகரசபைச் சட்டத்தின் (இல:129) படி உள்ளூராட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் எந்த ஒரு பகுதியையும் மாநகர சபைப் பகுதியெனப் பிரகடனப்படுத்தி அதன் எல்லையை வரையறுத்துப் பெயரையும் குறிப்பிடலாம்.

## 2. மாநகரசபையின் பொறுப்புகள்.

1) சபையின் ஒழுங்கு விதிகள், கட்டுப்பாடுகள்.
2) பொதுச்சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவை, பொதுப்போக்குவரத்து.
3) பிரதேச மக்களின் பொதுநல வசதிகள்.

3. மாநகரசபைக்குப் பொறுப்பாக உள்ளூராட்சி அமைச்சர் இருப்பார். சபையைக் கலைத்தல், பதவிநீக்கம் என்பன இவரின் உத்தரவின் பேரிலேயே மேற்கொள்ளப்படும்.

## 4. அதிகாரங்கள்.

1) சபைக்குத் தேவையான பதவிகளை உருவாக்குதல்.
2) அப் பதவிக்கு ஆட்களை நியமித்தல்.
3) மாநகரசபை விதிகளின்படி அதற்குச் சொந்தமான எந்தக் கட்டிடத்தையும் (அமைச்சர் அனுமதியுடன் ) ஏலத்தில் விற்றல். வாடகைக்கு விடல்.
4) எல்லைக்குள் மக்களுக்கு இன்னல் விளைவிக்கும் விடயங்களைக் கண்டு பிடித்து தடுத்துத் தணிக்கை செய்தல்.
5) விதிகளுக்குற்பட்ட ரீதியில் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்.
6) வீதிகளுக்கு மின்சாரம் நீர் என்பவற்றை வழங்குதல்.

## 5. மாநகரசபைக்கு மேயரே தலைவராவார்.

**6. நிதிதிரட்டும் மூலங்கள்.**

1) சபை விதிக்கும் வரிகள்
2) அபராதம், தண்டம்
3) முத்திரை வரி
4) விற்றல், வாடகைக்குக் கொடுத்தல், வாங்கல் மூலம் கிடைக்கும் பணம்
5) வருமானங்களும் நன்கொடைகளும்.
6) அமைச்சரின் விசேட ஒதுக்கு நன்கொடை.

## ஆ) நகரசபைகள்

1. 1939ம் ஆண்டு நகரசபைத் திருத்தச்சட்ட மூலத்தின் (61ம் இலக்க) உள்ளூராட்சி அமைப்புத் தேவைகளை முன்னிட்டு நகரசபைகளை உருவாக்க வழி பிறந்தது.

## 2. எல்லை.

மாநகரசபைக்குள் இடம்பெயர்ந்த வளர்ச்சியடைந்து வரும் ஒரு பிரதேசத்தை அல்லது நகரத் தன்மை கொண்ட இடத்தை நிர்வாக எல்லை ஒன்றினை வரையறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து உள்ளூராட்சி அமைச்சர் கட்டளையொன்றின் மூலம் வர்த்தமானியில் பிரசுரிப்பார். பெயர், அந்தஸ்து ஆகியவற்றையும் அமைச்சரே நிர்ணயிப்பார்.

### 3. அங்கத்தவர்கள்

குறைந்தது 4 அங்கத்தவர்கள் கூடியது 12 அங்கத்தவர்கள் (இத்தொகையை அமைச்சரே தீர்மானிப்பார்)

### 4. பதவிக்காலம் -3வருடங்கள்.

5. பொதுவாக நகரசபைகளின் செயற்பாடுகள் மாநகர சபைகளின் செயற்பாடுகளை ஒத்ததாகவே காணப்படும்.

உ+ம் அ) சபையின் ஒழுங்குவிதிகள்.

ஆ) பொதுச்சுகாதாரம், பயன்பாட்டுச் சேவை, போக்குவரத்து

இ) பொதுநலவசதிகள்

### 6. சில அதிகாரங்களாவன

அ) சபைக்குத் தேவையான ஊழியர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோரை நியமித்தல்.

ஆ) உள்ளூர் நிதியினை குழந்தைப் பராமரிப்பு, பிரசவ வீடுதி,தாதிமார் பயிற்றுவிப்பு, வீடமைப்பு,மழை வெள்ளம், தீ, பூமியதிர்ச்சி போன்ற நிவாரணங்களுக்கு ஒதுக்கலாம்.

இ) காணி, கட்டிடம் என்பவற்றை வாங்க, விற்க, மாற்ற

ஈ) வேலைகளைச் செய்வதற்கான ஒப்பந்தம் செய்தல்.

**1987 இல் உள்ளூராட்சி முறையில்**
**மேற்கொள்ளப்பட்ட முக்கிய மாற்றங்கள்.**
**பட்டினசபைகளுக்குப்பதில் - பிரதேசசபைகள்**
**கிராமசபைகளுக்குப்பதில் - கிராமோதயசபைகள்**

ஆரம்பத்தில் பட்டினசபைகளும் கிராமசபைகளும் 1978ல் ஏற்படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபையின் கூறுகளாகவே இயங்கின.இலங்கையில் மாவட்ட அபிவிருத்திச் சபைமுறை வெற்றியளிக்கவில்லை.

## வினா-8

**நிர்வாகத்தைப்பன்முகப்படுத்தல் என்ற அடிப்படையில் 1992ம் ஆண்டில் இலங்கையில் நிறுவப்பட்ட பிரதேச செயலகம் முறை பற்றி நுணுக்கக் குறிப்புரை ஒன்று எழுதுக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைக்குறிப்புகள்

## 1. அறிமுகம்.

அ) 1989இல் பதவியேற்ற திரு ரணசிங்க பிரேமதாசா அவர்களின் அரசாங்கம் வறுமை ஒழிப்பு, கிராமியமட்ட விருத்தி ஆகியவற்றை ஒரு புதியமட்டத்தில் ஏற்படுத்தி வந்ததை அறிவோம்.

ஆ) சனசக்தித் திட்டத்தை அதிஉன்னத வறுமை ஒழிப்பு நடவடிக்கையாகவும் பிரதேச நிர்வாக முறையைக் கிராமிய மட்ட அபிவிருத்தி நடவடிக்கை யாகவும் அரசாங்கம் செயற்படுத்தி வந்தது.

இ) இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் (1656-1796) ஏற்படுத்தப்பட்ட கச்சேரி முறையை (மாவட்ட செயலகம்) மாற்றி, பிரதேசமட்டத்தில் நிர்வாகம் பன்முகப்படுத்தப்படுதல் வேண்டும் என்ற அடிப்படையை நோக்கமாகக் கொண்டு ஏற்கனவே உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக (A.G.A. Division) இருந்த நிறுவனங்கள் பிரதேச செயலகங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

ஈ) நிர்வாகத்தை மக்களின் காலடிக்கு எடுத்துச்செல்வதே பிரதேச செயலகமுறையின் பிரதானஇலக்காகும். இதன் கீழ் முன்பு அமைச்சுக்கள், திணைக்களங்கள், கச்சேரிகள் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட அலுவல்கள் தற்போது பிரதேச செயலகங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உ) மக்கள் தமது தேவைகளை விரைவாகவும், பணவிரயமின்றியும் நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பை வழங்குவதுடன், துரித அபிவிருத்தியைப் பெறுவதும் அரசாங்கத்தின் எதிர்பார்க்கையாகும்.

## 2. பிரதேசசெயலகங்களின் பணிகள்.

அ) சமூகநலவிருத்தி (சுகாதாரம், நீர், விநியோகம்)

ஆ) பொருளாதார விருத்தி (விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள், பாதை அபிவிருத்தி, கைத்தொழில்)

இ) திட்டமிடல் நடவடிக்கைகள் (ஆண்டுத்திட்டங்கள்)

ஈ) பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு நடவடிக்கைகள்.

உ) ஓய்வூதியம் வழங்கல்.

ஊ) இணக்க சபைகள் மூலம் குடும்ப, சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

எ) அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் (மரம், வியாபாரம், வாகனம், சாரதி)

## 3. நோக்கங்கள்

பிரதேச செயலகங்களின் நோக்கங்களைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

அ) நிர்வாகத்தைப் பன்முகப்படுத்துவதன் மூலம் கிராமிய மட்ட அபிவிருத்தியைத் துரிதப்படுத்தல் .

ஆ) பிரதேச அபிவிருத்தியில் மக்கள் பங்குபற்றலை அதிகரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) மக்களின் அன்றாடத் தேவைகளை உடனுக்குடன் பூர்த்திசெய்து கொடுப்பதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

ஈ) மக்களின் வாழ்க்கைச் செலவு, நேர விரயம், போக்குவரத்துச் செலவு என்பவற்றைக் குறைத்து வாழ்க்கைத்தரத்தைக் கூட்டுதல்.

உ) தேசிய அபிவிருத்தியை எய்துவதற்கு கிராமிய அபிவிருத்தி அவசியம் என்பதால் கிராமிய மட்டத்தை விருத்தி செய்தல்.

ஊ) கிராமிய மட்டத்திலான சமூக பொருளாதார, கலாசார தகவல்களை உடனுக்குடன் பெற்றுக் கொடுத்தல்.

எ) வினைத்திறனான துரித தீர்மானங்களை எடுத்தல்.

4. பிரதேசச் செயலகங்கள் தாபிக்கப்படுவதன் முக்கியத்துவத்தை இரண்டு கட்டங்களாக வகுத்து நோக்கலாம்.

1. சமூக பொருளாதார முக்கியத்துவம்.
2. நிர்வாக, அரசியல் முக்கியத்துவம்.

### 1. சமூக, பொருளாதார முக்கியத்துவம்.

அ) மக்களின் தேவைகள் அவர்களின் காலடியில் பூர்த்தி செய்யப்படுவதால் காலதாமதம், நேரவிரயம், போக்குவரத்து செலவு என்பன குறைவடையும். இதனால் அவர்களது வாழ்க்கைத்தரம் உயரும்.

ஆ) மக்களின் தேவைகள் துரிதமாக நிறைவேற்றப்படும் போது அவர்களிடம் காணப்படும் விரக்தி அமைதியின்மை என்பன நீங்கி நாடு சுபீட்சம் அடையும்.

இ) கிராமிய மட்ட அபிவிருத்தி ஏற்படும். இதனால் ஒவ்வொரு பிரதேசத்திலும் சம அளவில் அபிவிருத்தி ஏற்பட வாய்ப்புண்டு.

ஈ) மக்கள் அபிவிருத்திப்பணிகளில், சமூகச் செயற்றிட்டங்களில் பங்குபற்ற வாய்ப்புண்டாகிக் கொடுக்கப்படும். இதனால் மக்களின் பங்கு பற்றல் அதிகரிக்கும்.

உ) நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேசத்தையும் பற்றிய தகவல்களை உடனுக்குடன் பெற முடியுமானதாக இருப்பதினால் துரித அபிவிருத்தி ஏற்படும்.

### 2. நிர்வாக அரசியல் முக்கியத்துவங்கள்

அ) முன்பு கச்சேரிகள், உதவி, அரசாங்கஅதிபர் காரியாலயங்கள் என்பவற்றை நிர்வகிக்க வேண்டியிருந்தது. ஆனால் தற்போது பிரதேசச் செயலகங்களை மட்டுமே நிர்வகிக்கவேண்டி உள்ளது. இதனால் நிர்வகிப்பதும் இலகு, கட்டுப்படுத்தும் இலகு தீர்மானங்களைத் துரிதமாக மேற் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.

ஆ) நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. முகாமைத்துவ நோக்கில் கட்டுப்படுத்துவது இலகுவாகவும், ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், தீர்மானங்கள் என்பவவற்றை உடனுக்குடன் நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பிவைக்க முடியும்.

ஈ) மக்களின் பங்கு பற்றல் அதிகரிப்பதனால் இவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும். அத்துடன் ஜனநாயக முறைக்கு மேலும் வலுவூட்டப்படும்.

## வினா 9

**இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் கட்டமைப்பு குறித்து நுணுக்கக் குறிப்புரையொன்று எழுதுக.**

## வினா 10

**அ) ஆளுனரின் கடமைப் பங்கு**

**ஆ) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்**

**இ)சட்டவாக்க அதிகாரம்**

**ஆகிய தலைப்புக்களின் கீழ் மாகாணசபை முறை குறித்து கருத்துரை வழங்குக.**

மாணவர்களின் கவனத்திற்கு
இலங்கையின் மாகாணசபைகள் குறித்து அவசியமெனக் கருதப்படும் சுருக்கமான குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. வினா இல. 10,11 ஆகியவற்றிற்கான விடைகளை இக்குறிப்புக்களில் இருந்து பெற்றுக்கொள்ளவும்.

## இலங்கையில் மாகாணசபைகள்

### இலங்கையின் உள்ளூராட்சி முறையின் சுருக்க வரலாறு

1. இலங்கையினது உள்ளூராட்சி முறையின் சுருக்க வரலாற்றினை எடுத்து நோக்குமிடத்து 1865ம் ஆண்டு மாநகர சபைகளுக்கான சட்டமூலம் முக்கிய இடத்தினைப் பெறுகிறது. கொழும்பு, கண்டி, மாநகரங்களில் இச் சட்ட மூலத்தின் கீழ் அமைக்கப்பட்ட இம் மாநகர சபைகள் 125 வருடங்களுக்கு மேல் பழைமை மிக்கவை.

2. 1871ம் ஆண்டு 26ம் இலக்க கம்சபா சட்ட மூலம் 1920ஆண்டு 11ம் இலக்க மாவட்ட சபை சட்டமூலம் உள்ளூராட்சி முறையில் முக்கிய கட்டங்களாக விளங்குகின்றன. மேலும் 1946ம் ஆண்டு 3ம் இலக்க சட்டமூலமானது இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரசபைகளைத் தோற்றுவித்தன.

3. பல தசாப்தங்களாக மேற்படி முறையில் செயற்பட்ட உள்ளூராட்சி அமைப்பானது 1980ம் ஆண்டு 35ம் இலக்க மாவட்ட அபிவிருத்தி சபை சட்டமூலத்தின் மூலமாக பாரிய மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டது. 1980ல் அமைக்கப்பட்ட மாவட்ட சபைகளும் வெற்றியளிக்கவில்லை.

4. மாவட்ட அபிவிருத்தி சபைகள் அமைக்கப்பட்டு 7 வருடங்களின் பின்னர் 1987ல் பிரதேச சபைகள் அமைக்கப்பட்டன. (1987ம் ஆண்டு 15ம் இலக்க சட்டமூலம்) இதன் படி இலங்கை பூராவும் 257 பிரதேச சபைகள் அமைக்கப்பட வேண்டுமெனவும், பிரதேச சபைகளுக்கான உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டது. 1987/88 ம் ஆண்டுகளில் இலங்கையில் காணப்பட்ட சுமுக மற்ற நிலை காரணமாக இத்தேர்தல்கள் (1991வரை) நடத்தப்படவில்லை.

## இலங்கை இந்திய ஒப்பந்தம்

இலங்கையில் காணப்பட்ட இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமுகமாக 1987.08.19ம் திகதி இலங்கை ஜனாதிபதி திரு . ஜே. ஆர். ஜயவர்த்தனா அவர்களாலும் பாரதப்பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களினாலும் கொழும்பில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது.

இவ்வொப்பந்தத்தில் காணப்படும் முக்கியமான அம்சங்களைப் பின்வருமாறு தொகுத்துக்கூறலாம்.

அ) வடக்கு கிழக்குத் தீவிரவாதிகள் தமது ஆயுதங்களை சமாதானக் குழுக்களிடம் ஒப்படைத்தல்.

ஆ) இலங்கைப் படையினர் தமது முகாம்களுக்குள் முடங்கிக்கிடத்தல்.

இ) இரு நாட்டுத் தலைவர்களினதும் விருப்பத்திற்கிணங்க இந்திய அமைதிப்படையொன்றை (IPKF) வடக்கிலும், கிழக்கிலும் நிலைகொள்ளச் செய்தல்.

ஈ) வடக்கு- கிழக்கு இணைக்கப்பட்ட ரீதியில் மாகாண சபையொன்றினை அமைத்தல்.

உ) பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குதல்.

ஊ) பாக்கு நீரிணையில் இணைந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

எ) இந்தியத் துணைக் கண்டத்தைப் பயங்கரவாதிகள் பயன்படுத்தாமல் இருத்தல் போன்றன.

## இலங்கை இந்திய ஒப்பந்தமும் இலங்கை மாகாணசபைகளும்

1987 ஆகஸ்ட் 15ஆம் திகதி இலங்கையில் நடைபெறவிருந்த பிரதேச சபைகளுக்கான தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறவில்லை. இந் நிலையில் இலங்கை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக 1987ம் ஆண்டு 42ம் இலக்க மாகாண சபைகள் சட்ட மூலத்திற்கிணங்க 1987 நவம்பர் மாதத்தில் புதிய தொரு சபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவே மாகாண சபைகள் எனப்படுகின்றன.

இலங்கையில் ஏற்கனவே காணப்பட்ட உள்ளூராட்சி முறைகளை விட பரப்பில் இது விசாலமானதாகும். அதிகாரத்திலும் மிகைத்ததாகும்.

## 13ம் இலக்கத் திருத்தம்.

இலங்கையில் மாகாண சபைமுறையை அறிமுகப்படுத்துமுகமாக சட்ட ஏற்பாடுகள் அரசியலமைப்பில் 13வது திருத்தமாக இணைக்கப்பட்டுள்ளது. இவ் இணைப்பினை உயர் நீதிமன்றம் 1987 நவம்பர் 14ம் திகதி உறுதிப்படுத்தியது. 1988.01.3ம் திகதி 491/10 ம் இலக்க விசேட வர்த்தமானி மூலம் 1988.01.26ம் திகதி முதல் இத் திருத்தங்கள் செயற்படுத்தப்படுமென இலங்கையின் ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

## மாகாணசபை சட்டமூலம்

1987ம் ஆண்டு 42ம் இலக்க மாகாணசபை சட்ட மூலத்தின் 1ம் உறுப்புரைப்படி மாகாணசபைகளின் அதிகாரமானது ஜனாதிபதி மூலம் வழங்கப்படும் எனப்படுகிறது. குறித்த சட்டமூலத்தின்படி அமைக்கப்படும் சகல மாகாணசபைகளும் மாகாணசபைத் தேர்தல் ஒன்றின் கீழ் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் செயற்பட ஆரம்பிக்கும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

மேல், வடமேல், ஊவா, சப்பிரகமுவ, மத்திய, கிழக்கு, தெற்கு, வடக்கு, வடமத்திய, ஆகிய அனைத்து மாவட்டங்களிலும் மாகாணசபை அமைப்பு 1988பெப்ரவரி 05ம் திகதி முதல் செயற்படுத்தப்படல் வேண்டும் என 1988.02.03ம் திகதியிடப்பட்ட 491/16 ம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி அறியக்கொடுத்திருந்தார்.

இரண்டு அல்லது மூன்று மாகாணங்களை இணைத்து ஒரே ஆளுனர், ஒரே முதலமைச்சர் ஒரே அமைச்சரவை என்ற ரீதியில் தனி மாகாணசபையாக இயங்க வைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கிணங்க வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டன.

மாகாணசபைகள் அமைத்தல், பெயரிடுதல் போன்றவை 1987ம் ஆண்டு 12ம் இலக்க மாகாணசபைச் சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாகாணசபையின் கட்டமைப்பினைப்பின்வருமாறு சுருக்கமாக நோக்கலாம்.

## மாகாணசபைக் கட்டமைப்பு

1. இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமுகமாகவும், அதிகாரத்தினைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசப் பொருளாதார விருத்தியை அடைவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையே மாகாணசபைகள் முறையாகும். (இங்கு அதிகாரப் பகிர்வு என்பது அதிகாரங்கள், கடமைகள் என்பவற்றை ஓர் உப அதிகார சபைக்கு கையளித்தலையே குறிக்கின்றது)

2. இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமுகமாக 1984 முதல் இலங்கை அரசு தமிழ்த் தலைவர்களுடனும், இந்திய அரசாங்கத்துடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாகவும், 1987ல் இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் விளைவாகவும் இது உதயமாகிறது.

3. 1987 நவம்பரில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இது நடைமுறைக்கு வந்தது 13ம் திருத்தத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்களைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

அ) 154ம் உறுப்புரை 1ம் பிரிவு
ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு மாகாணசபை அமைக்கப்படும்.

ஆ) 154ம் உறுப்புரை 3ம் பிரிவு
இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் ஒரே ஆளுனர் ஒரே முதலமைச்சர் ஒரே அமைச்சர்கள் சபை என்பவற்றை உள்ளடக்கிய ஒரு நிர்வாக அலகாக (ஒரே மாகாண சபையாக) செயற்படலாம். (இதன்படி வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு ஒரு மாகாணசபை அமைக்கப்பட்டது)

## அமைப்பு

1. மாகாணசபைக்கான பிரதிநிதிகள் அம்மாகாண வாக்காளர்களால் விகிதாசார தேர்தல் முறைப்படி (பட்டியல் முறை) தெரிவு செய்யப்படுவர்.
2. மாகாணங்களின் விஸ்தீரணம் சனத்தொகை என்பவற்றிற்கேற்ப பிரதிநிதிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். (மாகாணத்தில் 40,000 மக்களுக்கு ஒரு பிரதிநிதி 1000 சதுர மைல்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற முறை பின்பற்றப்படும்) இதன்படி மாகாண சபைகளின் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை 455 ஆகும். 437 அங்கத்தவர்கள் வாக்குகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார். ஒரு மாகாணத்தில் கூடுதலான வாக்குகளைப் பெறும் கட்சிக்கு 2 போனஸ் உறுப்பினர்கள் வழங்கப்படுவார். இதன்படி 437+18=455 அங்கத்தவர்கள்.

3. சபை தீர்மானித்தால் அம் மாகாணத்தில் அமைந்த தேர்தல் மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் சபையின் நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம் (இது சபையில் ஆளும் கட்சியின் பலத்தை அதிகரிக்கத் தக்கதென குறை கூறப்படுகிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணசபை ஆளுனர்

தேசிய அரசாங்கத்தையும், மாகாண சபைகளையும் இணைக்கும் முக்கியமான இணைப்புப் பாலமாகக் கருதப்படுபவர் ஆளுனராவர். பொதுவாக மாகாணசபைகளில் ஆளுனருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் விமர்சிக்கப்படுகின்றன.

1. ஒவ்வொரு மாகாண சபைக்கும் ஒரு ஆளுனர் இருப்பார்.
2. இவர் இலங்கை ஜனாதிபதியின் பிரதிநிதியாவார். எனவே இவரை ஜனாதிபதியே நியமிப்பார்.
3. இவரின் பதவிக்காலம் 5 வருடங்களாகும்.
4 ஆளுனரின் கடமைகள்

1 மாகாண சபைகளைக் கூட்டுதல் ஒத்திவைத்தல், கலைத்தல் ஒரு கூட்டத்தொடர் முடிந்து 2 மாதங்களுக்குள் அடுத்த கூட்டத்தொடர் கூட்டப்படல் வேண்டும், சபையைக் கலைக்கும் போது முதலமைச்சரின் ஆலோசனைப்படியே செயலாற்றுவார்.

2 மாகாணசபையில் அமைச்சர்கள் சபையின் ஆலோசனைகளுக்கு உடன்படாத விடத்து ஆளுனர் அதனை ஜனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

3 சபையில் தேவையான நேரம் உரையாற்றுதல்.

4 இயற்றி நிறைவேற்றாத சட்டம் பற்றியும் ஏனைய விடயங்கள் பற்றியும். சபைக்கு செய்தி அனுப்புதல்

5 சபையால் இயற்றப்பட்ட சட்டத்திற்கோ அல்லது மாகாணசபை தொடர்பாக பாராளுமன்றம் இயற்றிய சட்டத்திற்கோ எதிராகக் குற்றங்களை இழைத்ததன் பேரில் குற்றவாளி எனக் காணப்பட்ட எவருக்கும் மன்னிப்பு வழங்கும் அதிகாரம்.

6 சபைக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக நிர்வாக சட்டமாக்கும் அதிகாரங்களை ஆளுனர் நேரடியாக அல்லது தனது உத்தியோகத்தர்களூடாக நடைமுறைப்படுத்துவார்.

7 முதலமைச்சரை நியமித்தல் முதலமைச்சரின் ஆலோசனைப்படி அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை நியமித்தல்.

## 5. ஆளுனரின் பதவி வெற்றிடமாகும் நிலை

1 தானே கைப்பட இராஜினாமாச் செய்தல்.

2 அல்லது அரசியல் திட்டத்தை மீறியமைக்காகவோ, அதிகாரத்துஷ்பிரயோகம் செய்தமைக்காகவோ, முறை தவறி அல்லது துர் நடத்தையில் ஈடுபட்டார் என்பதற்காகவோ, இலஞ்சம் வாங்கியமைக்காகவோ அல்லது ஒழுக்கக்கேடாக நடந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மாகாணசபை ஜனாதிபதிக்கு அறிவிக்குமிடத்து (2/3அங்கத்தவர் கையொப்பத்துடன் ஜனாதிபதி இவரைப் பதவிநீக்குவார்)

6. இவரது சம்பளப் படிகள், ஓய்வூதியம், ஓய்வு பெறும் வயதெல்லை ஆகியவற்றை பாராளுமன்றமே தீர்மானிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண முதலமைச்சர்

1. முதலமைச்சரை ஆளுனர் தெரிவு செய்வார். (பெரும்பான்மை ஆதரவைப் பெற்றவர்.) 1993 மாகாணசபை தேர்தலின் போது தென்மாகாண சபை, வடமேல் மாகாணசபை என்பவற்றின் முதலமைச்சர்களை ஆளுனர்தெரிவு செய்தது பிழையானது என உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் மேற்படி நிலை மீண்டும் நிரூபிக்கப்பட்டது.
2. கடமைகள்
   1 இவர் அமைச்சர் சபையின் தலைவர்.
   2 மாகாணத்தின் அலுவல்கள் தொடர்பான நிர்வாகம், சட்டம் இயற்றுவதற்கான பிரேரணைகள் தொடர்பான அமைச்சர் சபையின் தீர்மானத்தை ஆளுனருக்கு அறிவித்தல்
   3 ஆளுனர் கோரும் போது மாகாணத்தில் அலுவல்கள் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பித்தல்.
   4 ஒரு அமைச்சரின் தீர்மானத்தை (சபை கவனத்திற் கொள்ளாவிடின்) ஆளுனர் கேட்டுக்கொண்டதற் கிணங்க அமைச்சரவையின் கவனத்திற்குச் சமர்ப்பித்தல்.

## மாகாண அமைச்சர் சபை

1 ஆளுனருக்கு உதவ ஆலோசனை வழங்க முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட 4 பேருக்கு மேற்படாத அமைச்சர் சபை அமைக்கப்படும்.

2 முதலமைச்சரின் சிபாரிசுக்கமைய அமைச்சர்களை ஆளுனர் நியமிப்பார்.

3 ஆளுனர் தனது கடமையைச் செய்யும் போது அரசியல் திட்டம் அவரை தனது எண்ணப்படி நடக்கலாமென அனுமதியளித்தவற்றைத் தவிர மற்றைய விடயங்களில் அமைச்சர்சபையின் ஆலோசனைப் படியே கடமையாற்றுவார்.

4 ஒரு விடயம் தொடர்பாக ஆளுனரின் விருப்பப்படி தீர்மானிக்க வேண்டியவிடயமா? இல்லையா எனப் பிரச்சினை எழுமாயின் ஆளுனரின் முடிவே இறுதியானது.

5 ஆளுனரின் விருப்பம் ஜனாதிபதியின் பணிப்பின் பேரிலேயே நடைமுறைப்படுத்தப்படும். எனவே அமைச்சரவை எத்தகைய ஆலோசனையை வழங்கிய தென்பது பற்றி எந்த நீதிமன்றத்திலும் விசாரணை செய்ய முடியாது.

## மாகாணநிதி ஆணைக்குழு

1 மாகாணங்களுக்கு நிதி வள வருவாய்களைப்பங்கீடு செய்யவென ஓர் ஆணைக்குழு நிறுவப்படும்.

2 இவ் ஆணைக்குழுவில்

அ) திறைசேரிக்காரியதரிசி

ஆ) மத்தியவங்கியின் ஆளுனர்

இ) மூன்று பிரதான சமூகங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகள் இடம் பெறுவர்

3 பதவிக்காலம் 3 வருடங்களாகும்.

4 இந்த ஆணைக்குழு பின்வரும் விடயங்களில் ஜனாதிபதிக்குத் தனது சிபாரிசுகளை வழங்கும்.

அ) மத்திய அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் வழங்கும் நிதியினை மாகாணங்களுக்கிடையில் எவ்வாறு பகிர்தல்.

ஆ) பிரதேச அபிவிருத்தி

## மாகாண மேல்நீதிமன்றம்

1 ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு மேல் நீதிமன்றம் காணப்படும்.

2 பிரதம நீதியரசர் இந் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பார்.

## கடமைகளும், அதிகாரங்களும்

அ) மாகாணத்தில் இழைக்கப்படும் குற்றங்களைப் பொறுத்து இலங்கை மேல் நீதிமன்றத்தினது மூல குற்றவியல் விசாரணைகளைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளல்.

ஆ) மாகாணத்திலுள்ள ஆரம்ப மஜிஸ்ரேட் நீதிமன்றத் தீர்ப்புக்களை மறுபரிசீலனை செய்தல் அல்லது திருத்துதல்.

இ) பாராளுமன்ற சட்டத்தின் கீழ் வழங்கப்படும் மற்றைய விசாரணை அதிகாரங்களையும், ஏனைய அதிகாரங்களையும் செயல்படுத்தல்.

ஈ) முறைப்பாடுகளை விசாரித்தல்.

உ) மாகாணத்திலுள்ள எந்த வொருநபரும் எந்தவொரு சட்டத்தையும் அல்லது மாகாணசபை இயற்றிய சட்டத்தினையும் மீறினால் விசாரிக்கும் உரிமை.

## மாகாணசபைகளின் சட்டமியற்றும் அதிகாரம்

மாகாண சபைகள் பற்றிய சட்ட அதிகாரங்கள் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன.

அ) பட்டியல் -1 (மாகாணசபைப் பட்டியல்)

உ+ம் பொலிசும் பொது ஒழுங்கும், திட்டமிடல், உள்ளூராட்சி தெருக்கள், பொது சேவைகள், விவசாயம், கிராமிய அபிவிருத்தி, சுகாதாரம், கூட்டுறவு போன்ற 37 விடயங்களை உள்ளடக்கியது.

ஆ) பட்டியல் -2 (ஒதுக்கப்பட்ட பட்டியல்)

உ+ம் இலங்கையின் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வர்த்தகம், துறைமுகங்களும் தேசியப் போக்குவரத்தும், குடிவரவும் குடியகல்வும். (இப்பட்டியல் 16 விடயங்களை உள்ளடக்கியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) பட்டியல் -3 (ஒத்தியங்கு பட்டியல்)
உ+ம் திட்டமிடல் கல்வியும், கல்விச் சேவைகளும், உயர் கல்வி போன்ற 36 விடயங்களை உள்ளடக்கியது.

1. அரசியல் திட்டத்திற்கமைய தமக்கு வழங்கப்பட்டுள்ள (மாகாணசபை பற்றிய விடயங்கள் தொடர்பாகப் பொருந்தத்தக்க சட்டங்களை ஆக்கும் அதிகாரம் மாகாணசபைகளுக்குண்டு.
2. மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களை நீக்கவோ அல்லது திருத்தவோ கூடிய மசோதாக்களை ஜனாதிபதிக்கு அனுப்பி (வர்த்தமானி அறிவித்தலின்பின்) பாராளுமன்றப் பெரும்பான்மை பெற்றாலன்றி சட்டமாக்க முடியாது. (ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்கள் சம்பந்தப்படும் இத்தகைய திருத்தமோ. நீக்கமோ பாராளுமன்றத்தின் 2/3 வாக்குகளாலே நிறைவேற்றப்பட்ட முடியும்.
3 ஒதுக்கப்பட்ட பட்டியல் தொடர்பாக சட்டமியற்றும் அதிகாரம் பாராளுமன்றத்தையே சார்ந்தது. (மாகாண சபைக்கு அதிகாரமில்லை.)
4 ஒத்தியங்கும் பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பாக எல்லா மாகாணங்களையும் கலந்தாலோசித்தே பாராளுமன்றம் சட்டமியற்றும். அதேபோல எந்த மாகாண சபையும் பாராளுமன்றத்தை கலந்தாலோசித்தே சட்டமியற்றும்.
5 ஏதாவதொரு மாகாணசபை ஆளுனருக்கு அல்லது அரசியல் திட்டத்தின் பிரகாரம் பணிக்கப்பட்ட கட்டளைகளுக்கு ஒத்துழைக்கவோ அல்லது நடைமுறைப்படுத்தவோ மறுத்தால் அரசியல் திட்டத்திற்கமைய நடத்த முடியாதென ஜனாதிபதி அறிவித்து அம் மாகாணசபையின் சகல கடமைகளையும் அல்லது சில கடமைகளையும் ஒத்துக்கொள்ளலாம். அல்லது பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கலாம்.

## வினா 11

**அ) இலங்கைக் கட்சி முறை பற்றிச் சுருக்கக் குறிப்புரை எழுதுக.**

**ஆ) 1977 இன் பின்னர் இலங்கையில் பல அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளன--ஆராய்க.**

## விடைக்குறிப்புகள்

அ) டொனமூர் ஆணைக்குழுவினரின் சிபாரிசுக்கமைய இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதன் பின்னரே, இலங்கையின் அரசியல் கட்சிகளின் தோற்றத்தினைக் காணலாம். 1935ம் ஆண்டில் தோற்றம் பெற்ற லங்கா சமசமாஜக்கட்சியே (LSSP) இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியாகும். இருப்பினும் ஓர் ஒழுங்கமைப்புக்கு உட்பட்ட அரசியல் கட்சிமுறையின் வளர்ச்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
LIBRARY
JAFFNA

போக்கினை 1947ம் ஆண்டின் பின்பே (பாராளுமன்றக் கெபினட் அரசாங்க முறையினை சோல்பரிக் குழுவினர் வழங்கியதன் பின்னர் காணலாம்.) கட்சி அரசாங்கமுறை செயற்பட தொடங்கியதிலிருந்து இலங்கையில் பல கட்சிகள் தோற்றம் பெறலாயிற்று.

அரசியலமைப்பின் கீழ் இலங்கையின் அரசியல் கட்சிகளின் தோற்றத்தினை வரையறை செய்ய வழிமுறைகள் கூறப்படவில்லை. இதன்காரணமாக இலங்கையில் பல கட்சிமுறைப் போக்கினை அவதானிக்கலாம். குறிப்பாக சுதந்திரத்தின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் பத்திற்கு(10) மேல் இலங்கையில் காணப்பட்டுள்ளன. 1989ம் ஆண்டின் பொது தேர்தலின் போது இத்தொகை 23 ஆக உயர்ந்து காணப்பட்டது. எனவே இலங்கை பல கட்சிமுறையினை உடைய ஒரு நாடு என்பதை நிராகரிக்க முடியாது.

இருப்பினும் இலங்கையில் அரசாங்கங்கள் அமைக்கப்பட்ட போது கட்சி முறையின் தனித்துவப் போக்கினை அவதானிக்கலாம். அதாவது ஐக்கிய தேசியக்கட்சி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய கட்சிகளே அரசாங்கம் அமைக்கும் பலமான கட்சிகளாகக் காணப்பட்டுள்ளன. எனவே இலங்கையில் பல கட்சிகள் காணப்பட்ட போதிலும் கூட இலங்கையில் இரு கட்சிமுறைப் போக்கே நிலவுகின்றது என விவாதிக்கலாம்.. ஆனால் இலங்கையில் காணப்படுவது இரு கட்சி முறைப் போக்கு என நம்மால் திட்டமாகக் கூற முடியாதுள்ளது. காரணம் சுதந்திரத்தின் பின்னர் இவ்விரு கட்சிகளும் மாறிமாறி அரசாங்கங்களை அமைத்த போதிலும் கூட இவை பல சந்தர்ப்பங்களில் கூட்டு அரசாங்கங்களாக இருந்ததையே அவதானிக்கலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அமைத்த 1947-1956 மற்றும் 1965-1970 காலகட்டங்களிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் அமைத்த 1956-1960 மற்றும் 1970-1977 ஆகிய காலகட்டங்களிலும் ஏனைய அரசியற் கட்சிகளுடன் இணைந்து கூட்டு அரசாங்கம் அமைத்ததையே குறித்துக் காட்டலாம்.

கடந்த 17 ஆண்டுகளாக (1977 முதல் 1994) ஐ.தே.கட்சியே அதிகாரமிக்க கட்சியாக விளங்கிவந்தது. 1977 முதல் 1991 பிரதேசசபைத் தேர்தல் வரை நடைபெற்ற சகல தேர்தல்களின் போதும் 50% அதிகமான வாக்குகளைப் பெற்றுத் தொடர்ந்தும் அதிகாரத்திலிருந்து வந்ததை நோக்கலாம். இதற்கு ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் கொள்கைகளும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுள் ஏற்பட்ட தலைமைத்துவப் போராட்டங்களுமே காரணமெனலாம். எவ்வாறாயினும் 1992இன் ஆரம்பப் பகுதியில் ஐ.தே கட்சியிலிருந்து ஒரு பகுதியினர் பிரிந்து சென்று ஐ. ஐ.சோ. முன்னணி என்னும் புதுக் கட்சியினை ஆரம்பித்துள்ளனர். இந்நிலையானது எதிர்காலத்தில் ஐ.தே.கட்சியின் உறுதிப்பாட்டினைத் தளர்த்தலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

1993 மே மாதம் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல் முடிவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து நோக்குமிடத்து இந்த எதிர்பார்ப்பு ஓரளவுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இந்த தேர்தலில் தான் ஐ.தே கட்சி (77 இன் பின்னர்) முதல் தடவையாக 50% குறைவான வாக்குகளைப் பெற்றமையும், முதற் தடவையாக ஒருமாகாணசபையை எதிர்க்கட்சியினருக்கு இழந்தமையும் குறிப்பிடல் வேண்டும்.

1994 மார்ச்சில் நடைபெற்ற தென்மாகாண சபைக்கான தேர்தலில் ஐ.தே.கட்சி படுதோல்வியினை அடைந்தது. தென்மாகாணசபைக்குத் தெரிவு செய்யப்படவேண்டி இருந்த 53 உறுப்பினர்களுள் 23 உறுப்பினர்களை மாத்திரமே இத் தேர்தலில் ஐ.தே.கட்சியால் வெற்றி கொள்ள முடிந்தது.

**குறிப்பு** இலங்கையின் கட்சி முறையின் புதிய போக்குகள் இலங்கையின் கட்சிகள் குறித்து இடம் பெறும் விடைக்குறிப்புக்களில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்தும் இலங்கையின் கட்சி முறை குறித்து புதிய போக்குகளை மாணவர்களால் திரட்டிக் கொள்ள முடியும்.

ஆ) 1977ம் ஆண்டின் பின்னர் இலங்கையின் கட்சி முறையில் காணப்படும் மிக முக்கிய போக்குகளில் ஒன்றாக பல புதிய கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளதை எடுத்துக்காட்டலாம். 1989 ஆண்டு பொது தேர்தலின் போது காணப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 23 இல் 12 கட்சிகள் 1977 இன் பின்னர் தோற்றம் பெற்றவையே 1993 மாகாணசபைத் தேர்தலின் போது அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் எண்ணிக்கை 28 ஆகும்.
உ+ம் ஸ்ரீ.ல.ம. கட்சி, ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ், ஐ.ம.வி.முன்னணி, ஐ.ஐ.சோ.முன்னணி போன்றன.

இவ்வாறாக அதிக கட்சிகள் தோற்றம் பெற பல காரணிகள் ஏதுவாக அமைந்துள்ளன. அவற்றுள் முக்கியமாக 1978 ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார தேர்தல் முறையினை குறிப்பிடலாம். குறிப்பாக விகிதாசார முறையில் பட்டியல் முறையானது அதிக கட்சிகளின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்துள்ளது. இப் புதிய தேர்தல் முறையினால் தேர்தல் தொகுதிகள் தேர்தல் மாவட்டங்களாக விரிவடைந்துள்ளன. இவ்வாறாக தேர்தல்மாவட்டங்கள் விசாலமடைகையில் பல இன, மொழி மக்களிடையேயும் தம்பிரதிநிதிகளைத் தேர்ந்து கொள்ள பிரதேச ரீதியான கட்சிகள் தோன்றுவது இயல்பே. குறிப்பாக 1989ம் ஆண்டின் பொதுத்தேர்தல் வரை இவ்வாறு தோற்றம்பெற்றுள்ள கட்சிகளுள் 7 கட்சிகள் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் இனக் குழுக் கட்சிகளாக இருப்பது அவதானிக்கத்தக்கதாகும்.

மேலும் 1980களின் ஆரம்பப் பகுதிகளில் இலங்கையில் தலைவிரித்துத் தாண்டவமாடிய இனப்பிரச்சினைகளை மையமாகக் கொண்டு 1983ம் ஆண்டளவில் பல போராளிக் குழுக்களில் சில வடக்கிலும் கிழக்கிலும் செயற்பட ஆரம்பித்தன. இவ்வாறாக தமிழ் போராளிக்குழுக்களில் சில ஜனநாயகப் பாதைக்குத் திரும்பவும், அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் தலைப்பட்டமை இனரீதியான தோற்றத்திற்கான மற்றுமொரு காரணியாகக் குறிப்பிடலாம்.



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர பிரதான கட்சிகளிடையே காணப்பட்ட கொள்கைப் பிரச்சினைகள் காரணமாகவும் அக் கட்சிகளில் இருந்து விலகி புதிய கட்சிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான காரணிகளே 1977 ஆண்டின் பின்னர் அதிகமான அரசியல் கட்சிகள் தோற்றம் பெற ஏதுவாயின என்றால் மிகையாகாது.

## வினா 12

## இலங்கையில் இடதுசாரிக்கட்சிகள் குறித்து சுருக்க குறிப்புரையொன்று எழுதுக.

## விடைக்குறிப்புகள்

1. இலங்கையின் கட்சி முறையின் வளர்ச்சியினை அவதானிக்கையில் கட்சிகளின் தோற்றம் வளர்ச்சி என்பன மிகவும் குறுகிய வரலாற்றினை உடையனவே.

2. இலங்கையின் கட்சி முறையில் முதலாவது கட்சியாக 1920ல் ஏ.ஈ. குணசிங்ஹ என்பவரால் அமைக்கப்பட்ட தொழிலாளர் கட்சி விளங்குகின்ற போதிலும் இதைக் கட்சி முறை வரலாற்றில் சேர்த்துக் கொள்வதில்லை.

காரணம். அ) கொழும்பு நகர தொழிலாளர்களை மட்டுமே கொண்டிருந்தமை
ஆ) தனிமனிதனை மட்டும் மையமாகக் கொண்டு செயற்பட்டமை. (கட்சிக்கான ஒழுங்கமைப்பு இன்மை)

3. 1930களில் ஐரோப்பிய நாடுகளில் கற்று நாடுதிரும்பிய கலாநிதிகள் விக்கிரமசிங்க, கொல்வின் ஆர்.டி. சில்வா, லெஸ்லி குணவர்த்தன, என்.எம்.பெரேரா, பிலிப்குணவர்த்தன போன்ற இடது சாரிகள் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான முறையில் நவம்பர் 11ம் திகதி பொப்பிப்பூ விற்பனைக்குப் பதிலாக சூரியப்பூக்கள் விற்பனை செய்யும் சூரியப்பூக்கள் இயக்கத்தை (1934ம் ஆண்டு) ஆரம்பித்தனர்.

4. சூரியப்பூக்கள் இயக்கத்தினர் காலகதியில் (1935ல்) லங்கா சமசமாஜக்கட்சியினை ஸ்தாபித்தனர். இக்கட்சியே இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியாகும்.

5. இக்கட்சியின் பிரதான கொள்கைகள் (ஆரம்பத்தில்)
   அ) ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கை.
   ஆ) பொருளாதார சமத்துவத்தையும், சோசலிச சமூகத்தையும் கட்டியெழுப்புவது.

6. ஆரம்பத்தில் இக்கட்சி தீவிர வளர்ச்சிப் போக்கை அடையாமைக்குப் பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115158

காரணங்கள்.........

அ) புரட்சி, மாற்றம், சமத்துவம்,என்ற புதிய கருத்துக்களை பாமர மக்கள் புரிந்து கொள்ளாமை.

ஆ) பிரித்தானியரின் எதிர்ப்புக் காணப்பட்டமை.

7. இருப்பினும் 1936ம் ஆண்டுத் தேர்தலில் இக் கட்சி 2 ஆசனங்களை வென்றெடுத்தது.

8. இடது சாரிக் கட்சிகளின் வளர்ச்சிக்குத் தடையாக அமைந்த முக்கிய காரணிகளுள் ஒன்றாக கட்சியில் ஏற்பட்ட பிளவுகளைக் குறிப்பிட முடியும். இதற்கான காரணிகள்.

அ) தலைமைத்துவப்போட்டி.

ஆ) கொள்கை, சித்தாந்த, கருத்து முரண்பாடுகள்.

9. 1940ல் கட்சியின் பிளவு

அ) முதலாம் உலகப்போர் ஆரம்பித்ததும் ல.ச.ச.கட்சியினுள் ஸ்ராலிங் வாதிகளுக்கும் (கலாநிதி விக்கிரமசிங்ஹ தலைமை) ரொஸ்கி வாதிகளுக்கும் (கலாநிதி என்.எம் பெரேரா தலைமையில்) கொள்கையளவில் கருத்து மோதல்கள் ஏற்பட்டன.

ஆ) இதனால் ஸ்ராலிங் வாதிகள் ல.ச.ச கட்சியிலிருந்து பிரிந்து 1940ல் கலாநிதி விக்கிரமசிங்ஹ தலைமையில் ஐக்கிய சோசலிசக் கட்சியை ஆரம்பித்தனர். இக் கட்சியே 1943ல் கம்யூனிசக் கட்சியாக மாற்றமுற்றது.

10. பொல்ஸவிக் லெனினிஸிட் கட்சி உருவாக்கம்.

1945ல் ல.ச.ச கட்சியிலிருந்த கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா விலகி பொல்சவிக் லெனினிஸ்ட் என்னும் கட்சியை ஆரம்பித்தனர்.

11. 1947ம் ஆண்டு தேர்தலின் போது 3 இடதுசாரிக் கட்சிகள் போட்டியிட்டன.

| | | | |
|---|---|---|---|
| அ) | L.S.S.P வெற்றி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை | | 10 |
| ஆ) | C.P. வெற்றி பெற்ற | ,, ,, | 03 |
| இ) | B.L.P வெற்றி பெற்ற | ,, ,, | 05 |

12. பொல்ஸவிக் லெனினிஸ்ட்,ல.ச.ச கட்சி இணைப்பு

அ) 1950ல் BLP யும் LSSP யும் மீண்டும் இணைந்தன.

ஆ) இதனை விரும்பாத பிலிப் குணவர்த்தன LSSP ல் இருந்து விலகி விப்லவகார லங்கா சமசமாஜக்கட்சி என்னும் பெயரில் புதிய கட்சியொன்றை ஆரம்பித்தார்.(VLSSP)

13. 1952 தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் பெற்ற ஆசனங்கள்

அ) C.P,VLSSP கூட்டு 04 ஆசனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) LSSP 09 ஆசனங்கள்

14. இக் கட்டத்தில் இடது சாரிக் கட்சிகளின் பிரதான கொள்கைகளாவன.
அ) பொருளாதாரச் சமத்துவத்தினைப் பெறல்.
ஆ) உற்பத்திக் கருவிகளைப் பொதுவுடமை ஆக்குதல்.
இ) வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்.
ஈ) சோசலிச சமூகம் ஒன்றினை உருவாக்குதல்.
உ) வரையறுக்கப்பட்ட வேலை நேரத்தினைப் பெற்றுக்கொள்ளல்.

15. 1950 களில் கம்யூனிசக் கட்சியில் சீனச் சார்புக் கம்யூனிசம், ரஷ்ய சார்புக் கம்யூனிசம் எனும் பிளவுகள் ஏற்படலாயிற்று.

16. 1956 தேர்தலில் இடதுசாரிக்கட்சிகள்
அ) 1951ல் புதிதாக உருவாக்கப்பட்டிருந்த ஸ்ரீ.ல.சு.கட்சி ஓரளவு இடதுசாரிப்போக்குடையதாக இருந்தது. இருப்பினும் இதனை முற்றாக ஒரு இடதுசாரிக் கட்சியெனக் கூற முடியாது.
ஆ) 1956 தேர்தலில் SLFP யுடன் VLSSP யும் இணைந்திருந்தது. இத்துடன் பசாபெரமுனையும் இணைந்திருந்தது. இக் கூட்டு மக்கள் ஐக்கிய முன்னணி எனப்பட்டது (MEP)CP,LSSP என்பவற்றுடன் தேர்தல் தவிர்ப்பு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.
இ) முடிவு MEP=51 ஆசனங்கள், LSSP=14 ஆசனங்கள், CP=03 ஆசனங்கள்

17. இடதுசாரிக்கட்சிகளில் மீண்டும் பிளவு
அ) 1960 ல் பதவிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா 1963களில் இடது சாரிகளின் நெருக்கடி காரணமாக இடதுசாரிகளைத் தன்னோடு சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். பலம்வாய்ந்த இடதுசாரிக்கட்சியான LSSP,SLFP யுடன் சேர்வதை விரும்பாத சிலர் LSSP யிலிருந்து விலகி எட்மண்ட் சமரக்கொடி தலைமையில் LSSP(R) எனும் கட்சியைத் தோற்றுவித்தனர் ஆ) இக்கட்டத்தில் CP யும் பிளவுபட்டது. CP(R) எனும் புதிய அமைப்பு சண்முகதாசன் தலைமையில் உருவாக்கப்பட்டது.
இ) 1963ல் அனைத்து இடதுசாரிக்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஈற்றில் இம் முயற்சியும் தோல்வியுற்றது.

18. 1965ல் வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி வலதுசாரிக் கட்சிகளுடன் கூட்டிணைந்து இந்நிலையில் S.L.F.P இடது சாரிக் கட்சிகளுடன் கூட்டிணைவதை விரும்பியது. இதனடிப்படையில் 1968ல் SLFP,LSSP,CP= என்பன ஒரு பொதுக் கொள்கைத் திட்டத்தின் கீழ் ஐக்கிய முன்னணி என்னும் அமைப்பை தோற்றுவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. 1970 தேர்தலில் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றது.
(SLFP=91, LSSP=19, CP=06என்ற முறையில் ஆசனங்களைக் கைப்பற்றிக்கொண்டன.)

20. 1977 பொதுத் தேர்தலில் இடது சாரிக்கட்சிகளினால் முதற்தடவையாக எவ்வித ஆசனங்களையும் பெற முடியாமற் போனமை குறிப்பிடத்தக்கதாகும்.

21. இன்று ஸ்ரீலங்காவில் பல இடதுசாரிக் கட்சிகள் (அங்கீகரிக்கப்பட்ட) காணப்பட்ட போதிலும் அரசாங்கமொன்றை அமைக்குமளவிற்கு இவை மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெறவில்லை என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். 1982ல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட இடது சாரிக்கட்சிகள் பெற்ற வாக்கு விகிதங்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| திரு ரோகனவிஜேவீர (ம.வி.முன்னணி) (ஜேவி.பி)- | 4.2% |
| கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா (ல.ச.ச.கட்சி) | 0.9% |
| திரு. வாசுதேவ நாணயக்கார (நவ.ச.ச.க.கட்சி) | 0.3% |

22. இப் பெறுபேறுகளையும் 1989 பொதுத்தேர்தல் முடிவுகளையும் அவதானிக்கும் மிடத்து இடது சாரிக்கட்சிகள் 07% க்கும் குறைவான ஆதரவையே மக்கள் மத்தியில் பெற்றுள்ளன என்பது புலனாகிறது.

23. 1993 மேல் மாகாணசபைத் தேர்தலையும் 1994 தென்மாகாண சபைஇடைத் தேர்தலையும் 1994 பாராளுமன்றத் தேர்தலையும் அவதானிக்குமிடத்து முக்கியமான இடதுசாரிக்கட்சிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து நாற்காலி சின்னத்தில் பொதுசனஐக்கிய முன்னணியாகப் போட்டியிட்டது. 1977இன் பின்னர் நடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது ஓரளவு அபிவிருத்திப் போக்கினையே காட்டுகிறது. இருப்பினும் 1994 பொதுத்தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட SLPF ஆல் மாத்திரம் ஒரு ஆசனத்தை மட்டும் வெற்றி கொள்ள முடிந்தது.

24. இலங்கையின் இடதுசாரி கட்சிகளை அவதானிக்கையில் காணும் ஒரு பொது நிலை தனித்திருந்து ஒரு அரசாங்கத்தை அமைக்கும் நிலையை அது பெறவில்லை என்பதே. கட்சிகளின் தலைமைத்துவக் கொள்கைப் போராட்டங்களே இத்தகைய நிலையை வலியுறுத்தி வருவதைச் சுட்டிகாட்ட வேண்டும். இடது சாரிக்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு சக்தியாக மாறக் கூடிய சூழ்நிலை இனி ஏற்படுமா என்பதுங்கேள்விக்குறியே!

## வினா 13

**கடந்த பதினைந்து ஆண்டுகளில் இலங்கை-இந்திய உறவு நிலை குறித்து நுணுக்கக் கட்டுரை ஒன்று எழுதுக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைக்குறிப்புகள்

தெற்காசிய நாடுகளில் மக்கள் தொகை, நிலப்பரப்பு, பொருளாதாரவளம் யுத்த சக்தி ஆகிய அம்சங்களில் முன்னணியில் திகழும் நாடு இந்தியாவாகும். இதனால் இந்திய அரசியல் அரங்கில் ஏற்படும் மாற்றங்கள் வலயத்தின் ஏனைய நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது மறுக்கமுடியாத விடயமாகும்.

புவியியல் ரீதியாக இலங்கை இந்திய நாடுகள் அண்மிய நாடுகளாகும். 1947.08.15ம் திகதி இந்தியாவிற்கு வழங்கப்பட்ட சுதந்திரம் இலங்கையின் சுதந்திரத்திற்கு ஒரு காரணியாயிற்று. 1947 முதல் 1977வரை இந்திய இலங்கை உறவு நிலையை நோக்குமிடத்து சுமுகப்போக்கினையே அவதானிக்கலாம். இக்காலகட்டங்களில் இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட சிறு சிறுபிரச்சினைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளப்பட்டன.

உதாரணமாக 1964 இல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம், 1970களில் பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயக்கா அவர்களினால் முன்வைக்கப்பட்ட இந்து சமுத்திர அமைதிவலய சிந்தனைகளை இந்தியா பலமாக ஆதரித்தமை, 1974ல் வடபிராந்தியத்திலுள்ள கச்சதீவை பேச்சுவார்த்தைகள் மூலம் இந்தியா இலங்கைக்கு வழங்கியமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

கடந்த 15 ஆண்டுகளில் இலங்கை-இந்திய உறவுநிலைகுறித்து ஆராய்கையில் 1977ல் பதவிக்கு வந்த UNP அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகளும், செயற்பாடுகளும் இலங்கை இந்திய உறவு நிலையில் ஒருவித விரிசல் தன்மையினைத் தோற்றுவித்துள்ளதை அவதானிக்கலாம்.

1977க்கு முன்னர் இலங்கையில் ஆட்சியில் இருந்த SLFP அரசாங்கத்துக்கும் 1977க்கு முன்னர் இந்தியாவில் பதவியிலிருந்த இந்திராகாந்தி அம்மையாரின் காங்கிரஸ் அரசாங்கத்துக்குமிடையில் நெருக்கமான உறவுநிலை பேணப்பட்டு வந்தது. 1977ம் பொதுத்தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த UNP தலைவர்கள் அரசியல் நோக்குக் கொண்டு சிரிமா-இந்திரா உறவுகளை வன்மையாக விமர்சித்து வந்தனர். இந்நிலையில் 1977இல் இலங்கையில் UNP வெற்றியடைந்து அரசாங்கமமைத்ததுடன், இந்தியாவிலும் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டு மொராஜிதேசாய் தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட்டது.

ஜனதா அரசாங்கத்துடன் UNP அரசாங்கம் நெருக்கமான உறவுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுத்த போதிலும் கூட UNP அரசாங்கத்தின் முதலாளித்துவ சார்பான மேலைத்தேய கொள்கைகள் (உதாரணமாக அமெரிக்கா பிரித்தானியா இஸ்ரேல் தொடர்புகள்) நெருக்கமான உறவுக்குத் தடையாக அமைந்திருந்தது (காரணம் இந்தியா ரஷ்யசார்புக்கொள்கையையே கடைப்பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. இந்தியாவின் அரசாங்க மாற்றமானது வெளிநாட்டு கொள்கையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வில்லை என்பது கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.)

1980இல் மீண்டும் இந்திராகாந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கமைத்தது. இதையடுத்து இலங்கை இந்திய உறவில் விரிசல் நிலை தோற்றுவிக்கப்பட்டது. காரணம் இலங்கையின் அமெரிக்க உறவு இந்தியாவுக்கு பெரும் அச்சுறுத்தலையே ஏற்படுத்தி வந்தது. இலங்கையை உளவு நிலையமாக அமெரிக்காபயன்படுத்திக் கொள்ளும் என்பதே இந்தியாவின் எதிர்பார்க்கையாக இருந்தது. இதே நேரம் தமிழ் நாட்டு முதலமைச்சர் காங்கிரசுடன் தொடர்பு கொண்டு தமிழ்பிரிவினைவாதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தமை இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கத்தின் மீது பகைமை நிலையை மேலும் வலியுறுத்தியது.

தொடர்ந்து இடம் பெற்ற சம்பவங்களை அவதானிக்கையில் இந்நிலையானது மேலும் வலியுறுத்தப்பட்டே வந்துள்ளது. உதாரணமாக 1983இல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் விளைவாக தமிழ் அகதிகள் ஒரு இலட்சத்துக்கு மேல் தமிழ் நாட்டில் தஞ்சம்புகுந்தனர். இதனால் இந்திய அரசும் தமிழக அரசும் தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி மற்றும் நிதியுதவி போன்றவற்றை வழங்கி வந்தது என இலங்கை அரசாங்கம் நம்பியது.

1987இல் வட பிராந்தியத்திலுள்ள வடமராட்சிப் பகுதியில் இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் மீண்டும் தமிழ் நாட்டில் அகதிகளைக் குவித்தது.

இக்கட்டத்தில் இலங்கை இந்திய உறவில் ஏற்பட்ட விரிசல் நிலையானது உச்சகட்டத்தை அடைந்தது.குறிப்பாக இந்தியா அரசாங்கத்தின் எதிர்நடவடிக்கைகள் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலை இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தியது.

இந்நிலையில் JR அரசாங்கத்தால் ஒன்றுமே செய்யமுடியாத நிலையில் 1987 மத்திய பகுதியில் இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. J.R ஜயவர்த்தனா அவர்களின் ஆட்சியின் இறுதிக்காலங்களில் இந்திய, இலங்கை உறவில் மீண்டும் ஒரு வித சுமுகநிலை ஏற்பட்டது என்றால் பிழையாகாது.

1988 ஜனாதிபதி தேர்தலின் போது UNP ஜனாதிபதி வேட்பாளர் ரணசிங்க பிரேமதாசா அவர்கள் இலங்கை இந்திய ஒப்பந்தப்படி இலங்கையில் பணியாற்றிய இந்திய அமைதிகாக்கும் படையை (IPKF) திருப்பி அனுப்புவதையும் தேர்தல் விஞ்ஞாபனமாகக் கொண்டிருந்தார். அதுமட்டுமல்லாமல் தேர்தல் இலாபம்கருதி



PUBLIC LIBRARY
JAFFNA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேமதாச அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள். இலங்கை இந்திய உறவு நிலையில் மீண்டும் விரிசலை ஏற்படுத்தியது. 1989 இல் இந்தியாவின் ஆட்சி அதிகாரங்கள் விஸ்வநாத் பிரதாப் சிங் தலைமையிலான ஜனதாக் கட்சிக்கு மாறியது. பிரதாப் சிங் அரசாங்கம் (IPKF) ஐ இலங்கையிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டது பிரதாப்சிங் மற்றும் சந்திரசேகர் ஆட்சிக்காலங்களில்(1989-1991) இலங்கை, இந்திய உறவுநிலையில் ஓர் அமைதிப்போக்கு பேணப்பட்டுவந்தது.

1991ம் ஆண்டு மே மாதத்தில் தேர்தல் பிரச்சாரவேலைகளில் ஈடுபட்டிருந்த திரு ரஜீவ்காந்தி படுகொலைசெய்யப்பட்டார். இதற்கு விடுதலைப்புலிகளே காரணம் எனச் சந்தேகிக்கப்பட்டது. 1991இல் காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வந்தது. தமிழ்நாட்டு முதலமைச்சராக செல்வி ஜெயலலிதா பதவியேற்றுக் கொண்டார். ரஜீவ் கொலைக்குக் காரணமெனக் கருதிய விடுதலைப்புலிகளுடன் கடுமையான போக்கினைத் தமிழக அரசும், இந்திய அரசும் கடைப்பிடிக்கலாயிற்று. விடுதலைப்புலிகளின் விடயத்தில் ஒற்றுமை பேணப்பட்டன. இருப்பினும் இலங்கை, இந்திய உறவில் மிகவும் திருப்திகரமான நிலையேற்பட்டுவிட்டது என்று கொள்ளமுடியாது.

உதாரணமாக 1991 நவம்பரில் இலங்கையில் நடைபெறவிருந்த சாரக் உச்சி மாநாடு தாமதப்படுத்தப்பட்டமைக்கு இந்தியாவின் போக்கே மூலமாகக் கொள்ளப்பட்டது. இது மட்டுமல்லாமல் கச்சதீவைப் பாரதத்திற்கும் பெற்றுக்கொள்ள தமிழக அரசின் நடவடிக்கைகள், 1992 ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளின் தலைவரைக் கைது செய்ய பாரத நீதிமன்றம் பிடிவிராந்துக் கட்டளையைப் பிறப்பித்த போது ஏற்பட்ட சிக்கல்நிலைகள் என்பன உறவு நிலையில் போதிய திருப்தியற்ற நிலையையே பிரதிபலித்து நின்றன.

சார்க் தலைமைப் பதவி இலங்கையினால் ஏற்கப்பட்ட பின்னர் திரு ரணசிங்ஹ பிரேமதாச ஓரளவு நிதான போக்கினைக் கடைப்பிடிக்கலானார். சார்க் தலைவர் என்ற ரீதியில் அவரின் இந்தியவிஜயம் புத்தகாயா புனருத்தாபனம் மற்றும் அங்கு மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புத்திட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

திரு ரணசிங்ஹ பிரேமதாசாவின் மறைவை அடுத்து பதவியேற்ற ஜனாதிபதி முன்னைய தலைவரைவிட இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை வைத்துக்கொள்ளத் தலைப்பட்டார். விசேடமாக திரு திசாநாயக்கா அவர்கள் UNP யில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளதினால் இலங்கை- இந்திய உறவில் புதியதிருப்பமொன்று ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டது. (காரணம் 1987இல் இந்திய, இலங்கை ஒப்பந்தத்திற்கு இலங்கையின் சார்பில் முக்கியமானவராகத் திகழ்ந்தவர் திரு காமினி திசாநாயக்க அவர்களாவர். அதே நேரம் இந்தியாவின் சார்பில் முக்கியமாகத் திகழ்ந்தவர் தற்போதைய பிரதமர் திரு நரசிம்மராவ் அவர்களாவார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994 மே மாதத்தை எடுத்து நோக்குமிடத்து யெமன் யுத்தத்தின் போது பாதிப்புக்குள்ளாகியிருந்த இலங்கையரைத் தருவிக்க இந்திய அரசாங்க உதவியை இலங்கை கோரியதையும், புத்தகாயாவில் இருந்து வெசாக் பண்டிகை நிகழ்ச்சிகள் நேரடியாக இலங்கை ரூபவாகினியால் ஒளிபரப்பப்பட்டதையும் குறிப்பிடலாம்.

1994 இல் பொது சன ஐக்கிய முன்னணி அரசாங்க மமைத்ததும் இலங்கை-இந்திய உறவு மற்றும் வெறிநாட்டுக் கொள்கையில் பாரிய மாற்றங்கள் இடம் பெறலாமென எதிர்பார்க்கப்பட்டது. 1994 நவம்பரில் பொ.ஐ.முன்னணி வேட்பாளர் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க அவர்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் வெளிநாட்டுக் கொள்கையில் பாரிய மாற்றங்களில்லாமல் முதலாளித்துவ நாடுகளுடன் சுமுக உறவுகளை வளர்த்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

1994 நவம்பர் 1995 ஏப்ரல் இடைக்காலத்தில் உள்நாட்டு நிர்வாக விடயத்தில் ஓரளவு பின்னடைவு காணப்பட்ட போதிலும் கூட, வெளிநாட்டு உறவுகளில் போதிய திருப்தியினை காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக 1995 ஜனவரி 1995 ஏப்பிரல் வரை மோதல் தவிர்ப்பு உடன் படிக்கையில் அரசும், விடுதலைப்புலிகளும் ஈடுபட்டிருந்த நேரத்தில் (சுமார் 14 வாரங்கள்) 1994-04-19ம் திகதி இந்த மோதல் தவிர்ப்பை மீறும் வகையில் திருகோணமலையில் கடற்படையைச் சேர்ந்த இரண்டு கடற்படைப்படகுகளை விடுதலைப்புலிகள் குண்டு வைத்துத் தகர்த்தனர். இச்சம்பவம் குறித்து அமெரிக்க இராஜாங்க அமைச்சுப் பேச்சாளரினால் கண்டன அறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சு பேச்சாளர் நிக்களஸ் பார்ன்ஸ் அவர்களினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் பின்வரும் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.

" கடந்த ஜனவரியில் இணக்கம் காணப்பட்ட மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை தமிழ் ஈழவிடுதலைப்புலிகள் இயக்கத்தினர் முடிவுக்குள் கொண்டு வந்து ஏப்பிரல் 19ம் திகதி இரு இலங்கைக் கடற்படைப் படகுகள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இத்தாக்குதலில் குறைந்தது 11 கடற்படையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்பட்டனர்

இச்செய்கையை ஐக்கிய அமெரிக்க நாடுகள் வன்மையாகக் கண்டி க்கின்றதுயுத்த நடவடிக்கையை ஆரம்பிக்கும் நோக்குடன் விடுதலைப் புலிகளால் நிகழ்த்தப்பட்ட இச்சம்பவத்தால் கடந்த ஒரு தசாப்பத்திற்கு மேலாக நடந்து வரும் யுத்தம் முடிவுக்குவரும் என்ற நம்பிக்கை மக்கள் மனதிலிருந்து விலகியுள்ளது, இதன் எதிரொலியாக எதிர்காலத்தில் சமாதான நடவடிக்கைகள் உடைவுறுமாயின் முழுமையான பொறுப்பையும் விடுதலைப் புலிகளே ஏற்க வேண்டும். அதே நேரத்தில் அரசியல் தீர்வு காணும் இலங்கை அரசின் முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

இலங்கை உள்நாட்டு விடயம் குறித்து அமெரிக்கா இவ்வளவு துரிதமான முறையில் அறிக்கை விட்டு கரிசனைகாட்டுகின்றனதென்றால், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியினைத் தான் எடுத்துக் கூறக்கூடியதாக உள்ளது (விசேடமாக முன்னைய கால ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஆட்சிக்காலங்களில் அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளுடன் உறவு நிலையில் போதிய அபிவிருத்தி பேணப்பட்டு வரவில்லை என்பது அவதானிக்கத்தக்கதாகும்)

சார்க் நாடுகளுடனும் சந்திரிக்கா குமாரணதுங்க அவர்கள் நெருக்கமான உறவுகளை வைத்துக் கொள்ளத்தலைப்பட்டுள்ளார், 95 ஏப்ரல் முதல் வாரத்தில் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு இவரால் மேற்கொள்ளப்பட்ட விஜயங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. (95 மே மாதம் புதுடில்லியில் நடத்தப்பட்ட 8வது சார்க் மகாநாட்டில் கலந்து கொண்டிருந்த சனாதிபதி சந்திரிக்கா இந்தியப் பிரதமருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளையும் கவனத்திலெடுக்க வேண்டும்) விசேடமாக இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை வைத்துக் கொள்வதில் சந்திரிக்கா குமாரணதுங்க கூடிய கரிசனையைக் காட்டி வருகின்றார் 95 ஏப்ரல் மாதத்தில் இந்திய விஜயத்தின் போது பாரதத்தலைவர் நரசிமராவுடன் நடத்திய பேச்சுவார்த்தை இலங்கை இந்திய உறவு நிலையில் புதியதோர் அத்தியாயம் தோற்றுவிக்கப்படுமெனக் கருத இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா 14

**பத்தாவது பாராளுமன்ற பொதுத்தேர்தல் குறித்து உமது மதிப்பீட்டினை எழுதுக.**

## விடைக்குறிப்புகள்

இலங்கைத் தேர்தல் வரலாற்றிலே பலதரப்பட்ட எதிர்பார்ப்புக்கள் மத்தியில் நடந்து முடிந்த பத்தாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலானது (94 பொதுத்தேர்தல்) இலங்கை அரசியல் வரலாற்றிலே ஒரு திருப்புமுனையினை ஏற்படுத்தியது எனலாம்.

1977ம் ஆண்டிலிருந்து எதிர்கொண்ட தேர்தல்கள் அனைத்திலும் (1994 தென் மாகாண இடைத் தேர்தல் நீங்கலாக மகத்தான வெற்றியினை அனுபவி த்துவந்த ஐ.தே.கட்சியானது இத்தேர்தலில் தோல்வியினை அரவணைத்துக் கொண்டது. பொதுசன ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், திரு சந்திரசேகரன் தலைமையிலான சுயேட்சை அணி என்பன கூட்டரசாங்கமொன்றினை அமைக்க வித்திட்ட 10வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்கள் பிரதம மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

பொதுத்தேர்தலுக்கான நியமனப்பத்திரம் கோரப்பட்டது முதல் பேரினவாதக்கட்சிகள் பல சிறுபான்மையினரைப் புண்படுத்தும் வகையிலே தமது பிரச்சாரங்களை நடத்தி வந்தன. பத்திரிகை விளம்பரங்கள், சுவரொட்டிகள், மேடைப்பேச்சுகள் மூலமாக இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாதத்தை நிலைநிறுத்தவே அங்கிகாரம் கோரின.

தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது. சிறுபான்மைப் பிரதிநிதிகள் அரசர்களானார்கள். தேர்தல் முடிவுகள் முழுமையாக அறிவிக்கப்படுமுன்பே வடக்கு நோக்கியும், கிழக்கு நோக்கியும், மத்தி நோக்கியும் ஹெலிகப்டர்கள் பறந்தன. இருப்பினும் ஓரளவேனும் சிறுபான்மையினரைப் பற்றிப்பேசிய பொதுசன ஐக்கிய முன்னணியின் பக்கமாகவே சிறுபான்மைப் பிரதிநிதிகள் சாய்ந்தனர்.

விளைவு- பொதுசன ஐக்கிய முன்னணியின் அரசாங்கம் உருவாக்கம் பெற்றது.

இலங்கை அரசியல் வரலாற்றிலே முன்னெப்போதும் இல்லாத வகையில் சிறுபான்மையினர் நிந்திக்கப்பட்ட அதேநேரம் தேர்தல் முடிவுகள் வெளியானதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மைப் பிரதிநிதிகள் இல்லாவிட்டால் அரசாங்கம் அமைக்க முடியாது என்பதை உணர்த்திய தேர்தலாகவே 94ம் ஆண்டு பொதுத்தேர்தல் அமைந்ததினால்.. இலங்கை அரசியல் அரங்கில் சிறுபான்மையினரை இனிப்புறக்கணிக்க முடியாது என்ற நிலை வலுவடைந்து விட்டது.

ஆம்- ஏனைய நேரங்களில் உரிமைகளுக்குச் சாவுமணியடித்து விட்டு தேர்தல் காலங்களில் மட்டும் சொப்பன உலகைக் காட்டும் மூன்றாம் உலக ஜனநாயகத்திற்கு எமது இலங்கையும் விதிவிலக்கல்ல.

ஆனால் இனி பேரினவாதிகளின் கனவுக்கோட்டைகளை மட்டும் மையப்படுத்தாமல் சிறுபான்மையினரது ஏக்கத் தவிப்புக்களையும் சிந்திக்கவேண்டிய நிலையைப் பேரினவாதக் கட்சிகளுக்கு ஏற்படுத்திய பத்தாவது பாராளுமன்றத் தேர்தலானது இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு மைற்கல்லைப் பதிக்குமா?

21ம் நூற்றாண்டினை நோக்கிய பயணத்தில் நம்பிக்கை ஒளிகள் -
கனவுகளின் வெளிப்பாடுகள் மட்டும் தானா? அல்லது
நிஜங்களின் உருவாக்கத்தின் அத்திவாரமா?
ஆம்-
10வது பாராளுமன்றத் தேர்தல் ஆராயப்படவேண்டியதே.

## நியமனப்பத்திரங்கள் கோரப்படல்

இலங்கையின் 10வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 1994 ஜூலை04ம் திகதி முதல் 1994 ஜூலை11 ம் திகதி நண்பகல் 12 மணிவரை என தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த. டி.சில்வா அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

## வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த அரசியல் கட்சிகளும் குழுக்களும்.

1994 ஆகஸ்ட் 16ம் திகதி காலை 7மணிமுதல் மாலை 4மணிவரை நடைபெறத் திட்டமிடப்பட்ட 10வது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட 13அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், 26 சுயேட்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.

**வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த அரசியல் கட்சிகளாவன.**

1. ஐக்கிய தேசியக்கட்சி (UNP)
2. பொதுசன ஐக்கிய முன்னணி (PA)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC)
4. தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF)
5. ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி (SLPF)
6. மக்கள் ஐக்கிய முன்னணி (MEP)
7. தமிழ் ஈழவிடுதலை முன்னணி (TELO)
8. ஜனநாயக மக்கள் சுதந்திர முன்னணி(DPLF)
9. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)
10. நவசமசமாஜக்கட்சி (NSSP)
11. மக்கள் சுதந்திர முன்னணி (PFF)
12. ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் (DWC)
13. ஸ்ரீலங்கா பூமிபுத்திர கட்சி (SBPP)

ஆகியனவாகும்

இம்முறை பொதுத்தேர்தலில் மொத்தமாக 26 சுயேட்சைக்குழுக்கள் போட்டியிட்டன. இவற்றுள் சிலகுழுக்கள் தேர்தல் போட்டியினை மையப்படுத்திய போதிலும், சில குழுக்கள் பேரினவாதக் கட்சிகளின் அடிவருடிகளாகவே போட்டியிட்டன. விசேடமாக வானொலி, தொலைக்காட்சி, பிரசார நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் வாக்களிப்பு, வாக்குக்கணிப்பு நிலையங்களில் தத்தமது ஆதரவாளர்களை அதிகரித்துக் கொள்ளுவதற்குமாக பிரதான கட்சிகள் சில சுயேட்சைக்குழுக்களை முன்வைத்தன.

இலங்கை அரசியல் வரலாற்றிலே அதிகமான கட்சிகளும், சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்ட முதல் முதல் சந்தர்ப்பமாக இது அமைந்தது. இம்முறை 1444 அபேட்சகர்கள் தேர்தல் களத்தில் குதித்திருந்தனர். அதாவது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் 1174 அபேட்சகர்களும், சுயேட்சையாக 270 அபேட்சகர்களும் இலங்கை பூராவுமிருந்து போட்டியிட்டனர்.

## தேர்தல் சமர்

இலங்கையின் அரசியல் வாலாற்றிலே மிகவும் சூடுபிடித்த ஒரு தேர்தலாக பத்தாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலைக் குறிப்பிடலாம்.

தேர்தலில் பல கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்ட போதிலும் கூட ஐக்கிய தேசியக்கட்சி, பொதுசன ஐக்கிய முன்னணி இரண்டுக்குமே போட்டி மும்முரமடைந்திருந்தது. இதுதவிர மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி, மற்றும் கொழும்பு மாவட்ட சுயேட்சைக்குழு, யாழ்சுயேட்சைக்குழு, நுவரெலியா சுயேட்சைக்குழு போன்றவையும், பிரதேசரீதியான தாக்கத்தை ஏற்படுத்தத் தவறவில்லை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10வது பாராளுமன்றத் தேர்தலில் பேரினவாதக்கட்சிகளின் பிரசாரங்களில் அடிப்படையாக 3 விடயங்கள் மையப்படுத்தப்பட்டிருந்ததை அவதானிக்கலாம்.

1. அஸ்ரப்- சந்திரிக்கா ஒப்பந்தம் நாட்டைப் பிரிக்கும் என்பது,
2. 70-77 ஆட்சிக்காலத்தில் இலங்கையின் பொருளாதார நிலைப்பாட்டில் மரவள்ளி, வற்றாளை, கியூவரிசையுகங்கள் மீண்டும் ஏற்படுமென்பது
3. ஊழல்களுக்கும், மிரட்டல்களுக்கும் இடமளியாத, மனித நேயத்திற்கு இடமளிக்கும் புதியயுகமொன்று அமைக்கப்படுமென்பது.

இவைதவிர ஸ்ரீலங்கா பூமிபுத்திரகட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகள் இனத்துவேசமான பிரசாரங்களை முன்னெடுத்துச் சென்றமை வேதனைக்குரிய விடயமே.

## தேர்தல் முடிவுகள்(அகில இலங்கை ரீதியில்)

| | | |
|---|---|---|
| 1. | பொதுசன ஐக்கிய முன்னணி, | 38,87,823 (48.94%) |
| 2. | ஐக்கிய தேசியக் கட்சி | 34.98,370(44.03%) |
| 3. | ஸ்ரீ.ல. முஸ்லிம் காங்கிரஸ் | 1.43.307(1.80%) |
| 4. | தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,32,461(1.66%) |
| 5. | ஸ்ரீ.ல.மு.முன்னணி | 90,078(1.13%) |
| 6. | சுயேட்சை (நுவரெலியா) | 27,374(0.34%) |
| 7. | TELO | 26,087(0.32%) |
| 8. | DPLF | 11,567(0.14%) |
| 9. | சுயேட்சை (யாழ்ப்பாணம்) | 10,744(0.13%) |

ஏனைய அனைத்துக்கட்சிகளும், குழுக்களும் 10,000 த்துக்கு குறைவான வாக்குகளையே பெற்றன. 39வது இடத்தை அடைந்த சுயேட்சை (மொனராகலை) (11)குழு பெற்ற மொத்த வாக்குகள் 64ஆகும்.

| | |
|---|---|
| பதியப்பட்ட வாக்குகள் | 1,09,45,065 |
| அளிக்கப்பட்டவாக்குகள் | 83,44,095(76.23%) |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,00,389(4.79%) |
| செல்லுபடியான வாக்குகள் | 79,43,706 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

**தேசிய ரீதியில் கட்சிகள் குழுக்களால் வெற்றிகொள்ளப்பட்ட மொத்த ஆசனங்கள்.**

பாராளுமன்றத்தில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை:225

| கட்சி/சுயேட்சை | மாவட்ட ரீதியில் வெல்லப்பட்ட பிரதிநிதிகள் (தேர்தல் மூலம்) | தேசியப்பட்டியல் மூலம் | மொத்தம் |
|---|---|---|---|
| PA | 91 | 14 | 105 |
| UNP | 81 | 13 | 94 |
| SLMC | 06 | 01 | 07 |
| TULF | 04 | 01 | 05 |
| Ind (Jaffna) | 09 | - | 09 |
| DPLF(புளொட் அணி) | 03 | - | 03 |
| Ind (N'Eliya) | 01 | - | 01 |
| SLPF | 01 | - | 01 |
| மொத்தம் | 196 | 29 | 225 |

தேர்தல்முடிவுகளைத் தொகுதிவாரியாக நோக்குமிடத்து

| | | |
|---|---|---|
| UNP | - | 43 |
| PA | - | 96 |
| IND | - | 08 |
| SLMC | | 09 |
| DPLF | - | 01 |
| TULF | | 03 |
| Total | - | 160 |

இலங்கையின் 160 தொகுதிகளிலும் மேற்கண்டவாறு கட்சிகளும், குழுக்களும் வெற்றி கண்டன

# அரசாங்கமமைத்தல்

1994.08.16ம் திகதி நடைபெற்ற தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியது. ஆனாலும் தனித்து அரசாங்கமமைக்கக்கூடிய பெரும்பான்மையை அதனால் பெற முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசியல் அமைப்பின் படி (2ம் குடியரசு யாப்பு- 14ம் திருத்தம்.) பாராளுமன்றத்தில் மொத்தப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 225 ஆகும்.

அரைவாசிக்கும் மேற்பட்ட ஆதரவினைப் பெறக்கூடிய கட்சிக்கே அரசாங்கம் அமைக்கும் வாய்ப்புண்டு. அதாவது அரசாங்கத்தை அமைப்பதென்றால் குறைந்த பட்சம் 113 பிரதிநிதிகளையாவது ஒருகட்சிபெற்றாக வேண்டும்.

பத்தாவது பாராளுமன்றம் பொதுத்தேர்தலில் போட்டியிட்ட பிரதான கட்சிகளான பொதுசனஐக்கிய முன்னணியால் தேசியபட்டியல் பிரதிநிதிகள் உட்பட105 பிரதிநிதிகளை மாத்திரமே வெற்றி கொள்ள முடிந்தது. அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய பட்டியல் உட்பட 94 பிரதிநிதிகளை மாத்திரமே வெற்றிகொள்ள முடிந்தது.எனவே எந்தக்கட்சி அரசாங்கம் அமைக்க வேண்டுமாயினும் இதர கட்சிகளுடன் கூட்டுச்சேர வேண்டியது தவிர்க்க முடியாததொன்றாகும்.

அதாவது- பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்க வேண்டுமாயின் குறைந்தது பிறகட்சிகள், குழுக்களில் இருந்து 8 பிரதி நிதிகளையாவது சேர்த்துக்கொள்ள வேண்டும். அதேநேரம் ஐ.தே.கட்சி அரசாங்கமமைக்க வேண்டுமாயின் பிறகட்சிகள், குழுக்களில் இருந்த 19 பிரதிநிதிகளையாவது இணைத்துக் கொள்ள வேண்டும்.

பிரதான கட்சிகள் தவிர இதர கட்சிகளும், குழுக்களும் வெற்றி கொண்டிருந்த பிரதிநிதிகளின் எண்ணிக்கையை நோக்குவோம்.

| | |
|---|---|
| சுயேட்சை (யாழ்) ஈ.பீ.டி.பி அணி | 09 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 07 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 05 |
| புளொட் | 03 |
| சுயேட்சை (நுவரெலியா) | 01 |
| ஸ்ரீ.ல.மு. முன்னணி | 01 |

இவற்றுள் ஸ்ரீ.ல.மு. முன்னணிப் பிரதிநிதி தவிர மீதமான 25 பிரதிநிதிகளுமே சிறுபான்மையினராவார். தேர்தல் பிரசாரங்களில் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்ட போதிலும் சிறுபான்மையினர் இல்லாவிட்டால் ஆட்சியை அமைக்க முடியாது என்ற நிலை உறுதியாகி விட்டது.

பொதுசன ஐக்கிய முன்னணிக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையே ஏற்கனவே காணப்பட்ட ஒப்பந்தம் காரணமாகவும், ஐ.தே. கட்சியுடன் கொள்கையளவில் பகைமை கொண்டிருந்தமையாலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுசன ஐக்கிய முன்னணிக்கே தமது ஆதரவினை வழங்கியது. அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவரெலியா சுயேட்சை வேட்பாளர் திரு. சந்திரசேகரன் தனது ஆதரவை பொதுசன ஐக்கிய முன்னணிக்கே வழங்கினார். இந்நிலையால் பொதுசன ஐக்கிய முன்னணியின் பெரும்பான்மைப் பலம் நிரூபிக்கப்பட்டது.

| | |
|---|---|
| PA | 105 |
| SLMC | 07 |
| IND | 01 |
| Total | 113 |

பத்தாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலின் PA ,SLMC, திரு சந்திரசேகரன் (சுயேட்சை) ஆகியோர் இணைந்த கூட்டரசாங்கமே தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

## வெற்றி தோல்விக்கான காரணிகள்

தொடர்ந்தும் 17 வருடங்களாக இலங்கையில் அரசாங்கமமைத்து வந்த ஐ.தே.கட்சி இத்தேர்தலில் தோல்வியடைந்தது. தோல்விக்கான காரணிகளாகப் பின்வருவனவற்றைக் (சுருக்கமாகக்) கூறலாம்

1. மக்கள் ஆட்சி மாற்றமொன்றினை வேண்டி நின்றமை (1993 மேல் மாகாணசபை தேர்தல் முடிவுகள், 1994 தென் மாகாணசபை இடைக்கால தேர்தல் முடிவுகள் இக்கருத்தினை வலியுறுத்துகின்றது.

2. ஐ.தே.க அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைப் போக்குகள் (உதாரணமாக ஜே.வி.பி ஐ அடக்குவதற்காக 1988/89ம் ஆண்டுகளில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளால் ஏற்பட்ட விரக்தி மனோநிலை)

3. பத்திரிகை சுதந்திர மறுப்பும், பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டமையும் (இதன் காரணமாக வெகுசன தொடர்புத் துறையினர் ஐ. தே.கட்சியினர் மீது அதிருப்திகரமான போக்கினைக் கடைப்பிடித்தமை) தமிழ்பத்திரிகைகளைவிட சிங்களப் பத்திரிகைகள், ஆங்கிலப்பத்திரிகைகள் இந்நிலையை சரிவரப்புரிந்ததெனலாம். உதாரணமாக ராவய, யுக்திய, லங்காதீப, திவயின, சண்டே டைம்ஸ், தீ ஐலண்ட், கவுண்டபைல், லங்காகார்டியன் போன்ற பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் ஐ.தே.கட்சியினரின் ஊழல்களை எடுத்துக்காட்டியமை. இறுதிநேரத்தில் TNL தொலைக்காட்சியின் ஜனஹன்ட (மக்கள் குரல்) மக்களின் மன எழுச்சிகளை வெளிக்கொணர உதவியவை.

4. ஐக்கிய தேசியகட்சி அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட இலஞ்ச,ஊழல் குற்றச்சாட்டுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
MPL

5. ஐக்கிய தேசியக்கட்சியின் இறுதிக்காலங்களில் (ஜனாதிபதி டி.பீ. விஜேதுங்க காலத்தில்) சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டமை.

## உதாரணமாக

அ. இலங்கையில் இனப்பிரச்சினையில்லை என்றும், இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு என்றும் பகிரங்கமாகப் பிரஸ்தாபித்தமை.

ஆ. பெரும்பான்மையினரான பெருமரத்தைச் சுற்றிப் படரும் சிறுகொடிகளைப் போல சிறுபான்மையினரை அவமதித்தமை. (இப்பிரச்சாரங்கள் மூலம் சிறுபான்மையினரின் தனித்துவத்தை நிராகரித்த அதே நேரத்தில் சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை அண்டி வாழ வேண்டும் என்ற தன்மை வலியுறுத்தப்பட்டமை.

இ. பொதுத்தேர்தல் பிரச்சாரங்களில் பௌத்த மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளுமுகமாக அஷ்ரப்- சந்திரிக்கா ஒப்பந்தத்தை திரிபு படுத்தி முன்னெடுத்துச் சென்றமை.

ஈ. தொண்டமானுடன் ஏற்படுத்திக் கொண்ட பகைமை உறவுகள். இக்காரணங்களினால் சிறுபான்மையினரின் ஆதரவைப் பெறத்தவறியமை ஐ.தே. கட்சியின் தோல்விக்கான காரணியாகக் கூறப்படுகிறது.

6. 1993இல் தென்மாகாண சபை கலைக்கப்படுவதற்கு தந்திரநடவடிக்கைகளை மேற்கொண்டமை.

7. அனுரா பண்டாரநாயக்காவை ஐக்கிய தேசியக் கட்சியினுள் சேர்த்துக் கொண்டமை (பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைமைத்துவ ஸ்திரணத்தன்மைக்கு இது அத்திவாரத்தை வழங்கியது)

8. மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் தூரதிருஷ்டி நோக்கில் திட்டமிடப்படாத அரசாங்கக் கொள்கைகள். (உதாரணமாக, போக்குவரத்துச் சேவை மக்கள் மயப்படுத்தப்பட்டமை)

9. ஐ.தே.கட்சியின் சில வேட்பாளர்கள் மீது மக்கள் கொண்டிருந்த அதிருப்திப்போக்கு.

10. சந்திரிக்கா குமாரணத்துங்கவின் தலைமைத்துவத்தின் மீது மக்கள் வைத்த நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பொதுசன ஐக்கிய முன்னணியினர், மக்களால் வெறுக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் செய்கைகளின் மீது நிவாரணம் தருவதாக வாக்குறுதியளித்தமை.

12. வடக்கு கிழக்கு இனப்பிரச்சினையை அரசாங்கம் தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை.

13. அனுராதபுரம், பொலநறுவை போன்ற பகுதிகளில் விவசாயிகள் பாதிப்பு

இது போன்ற பல காரணிகள் ஐக்கிய தேசியக்கட்சியின் தோல்விக்கு வித்திட்ட அதேநேரத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியின் வெற்றிக்குத் தூபமிட்டதெனலாம்.

* 8வது சார்க் உச்சிமாநாடு 95 May 02-04ம் திகதிகளில் இந்தியாவில் நடைபெற்றது.

## வினா 15

**"94 சனாதிபதித் தேர்தல் குறித்து மதிப்பிடுக.**

## விடைக்குறிப்புகள்

இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் 7வது அத்தியாயம் 30வது உறுப்புரை 1ம் பந்தி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"இலங்கைக் குடியரசிற்கு சனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவரே அரசின் தலைவரும், ஆட்சித்துறையினதும், அரசாங்கத்தினதும் தலைவரும், ஆயுதம் தாங்கிய படைகளின் தலைவருமாவார்.

30ம் உறுப்புரையின் 2ம் பந்தியின் படி குடியரசின் சனாதிபதியை 6 ஆண்டுகள் கொண்ட பதவிக்காலத்திற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதலாவது சனாதிபதித்தேர்தல் 1982.10.20ம் திகதி நடைபெற்றது. இத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகராக திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா அவர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அபேட்சகராக திரு ஹெக்டர் கொப்பேகடுவ அவர்களும், மக்கள் விடுதலை முன்னணி அபேட்சகராக திரு றோஹணவீஜேவீர அவர்களும், தமிழ் காங்கிரஸ் அபேட்சகராக திரு. குமார் பொன்னம்பலம் அவர்களும், லங்கா சமசமாஜக்கட்சி வேட்பாளராக கலாநிதி கொல்வின் ஆர்-டி-சில்வா அவர்களும், நவசமாஜக்கட்சி வேட்பாளராக திரு வாசுதேவ நாணயக்கார அவர்களும் போட்டியிட்டனர்.

இத்தேர்தலின்போது இலங்கை முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கொள்ளப்பட்டது. அகில இலங்கை ரீதியில் 81,84,015 வாக்காளர்கள் வாக்களிக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதிபெற்றிருந்தனர். இவர்களுள் 66,02,617 வாக்காளர்களே (81.06%) வாக்களிப்பில் கலந்து கொண்டனர். இருப்பினும் செல்லுபடியான வாக்குகள் 65,22,147 ஆகும்.

ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் திரு. ஜே.ஆர். ஜயவர்த்தனா அவர்கள் 34,50,811 (52.91%) வாக்குகளைப் பெற்று இலங்கையில் [illegible] தெரிவு செய்யப்பட்ட முதலாவது நிறைவேற்று அதிகாரமிக்க சனாதிபதி [illegible] பெற்றுக்கொண்டார். இத்தேர்தலில் இரண்டாமிடத்தைப் பெற்ற திரு ஹெக்டர் கொப்பேகடுவை அவர்கள் பெற்ற வாக்குகள் 25,48,438 (39.07%) ஆகும். திரு ஹெக்டர் கொப்பேகடுவை அவர்களைவிட திரு ஜயவர்த்தனா 9,02,373 மேலதிக வாக்குகளைப்பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாவது சனாதிபதித்தேர்தல் 1988.12.19 ம் திகதி நடைபெற்றது. இத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகராக திரு. ரணசிங்க பிரேமதாச அவர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களும், ஸ்ரீலங்கா மக்கள் கட்சி அபேட்சகராக திரு. ஒஸி அபேகுணவர்த்தனா அவர்களும் போட்டியிட்டனர்.

இத்தேர்தலில் வாக்களிக்க அகில இலங்கை ரீதியாக 93,75,742 வாக்காளர்கள் தகுதிபெற்றிருந்தனர். இவர்களுள் 51,86,223 வாக்காளர்களே (55.32%) வாக்களிப்பில் கலந்து கொண்டனர். இருப்பினும் செல்லுபடியான வாக்குகள் 50,94,778 ஆகும்.

ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் திரு ரணசிங்க பிரேமதாச அவர்கள் 25,69,199 வாக்குகளைப் பெற்று (50.43%) இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரமிக்க சனாதிபதியாகத் தெரிவானார். இரண்டாமிடத்தைப்பெற்ற திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பெற்ற வாக்குகள் 22,89,860 (44.94%) ஆகும். திருமதி பண்டாரநாயக்காவை விட திரு பிரேமதாச மேலதிகமாக 2,73,339 வாக்குகளைப்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை அரசியல் வரலாற்றில் 3வது சனாதிபதித்தேர்தல் 1994 நவம்பர் 09ம் திகதி புதன் கிழமை காலை 7.00 மணிமுதல் 4.00மணிவரை நாடுபூராவும் நடைபெற்றது. இத்தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் 4 வேட்பாளர்களும், சுயேட்சையாக இரண்டு வேட்பாளர்களும் போட்டியிட்டனர். தேர்தல் முடிவுகள் வருமாறு-

1. திருமதி சந்திரிக்கா குமாரணத்துங்க (பொதுசன ஐக்கிய முன்னணி) 47,09,205 (62.28%)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. திருமதி வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்க (ஐ.தே.க) 27,15,283 (35.91%)
3. திரு ஹட்சன் சமரசிங்க (சுயேட்சை) 58,886 (0.78%)
4. திரு ஹரிச்சந்திர விஜேதுங்க (சிங்களே மகாசம்பத பூமிபுத்திர கட்சி) 32,651 (0.43%)
5. திரு ஏ.ஜே ரணசிங்க (சுயேட்சை) 22,752 (0.30%)
6. திரு. நிஹால் கலப்பதி (ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி) 22,749 (0.30%)

| | |
|---|---|
| பதியப்பட்டவாக்குகள் | 1.09,37,279 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 77,13,232 (70.52%) |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,51,706 (1.97%) |
| செல்லுபடியான வாக்குகள். | 75,61,526(98.03%) |

இம்முடிவின்படி சனாதிபதியாகத் தெரிவாக குறைந்த பட்சமாகப் பெறவேண்டிய வாக்குகள் (செல்லுபடியான வாக்குகளில் 50% த்துக்கு அதிகமான வாக்குகள் 37,80,763 ஆகும்.

குறைந்தபட்ச வாக்குகளைவிட திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரணத்துங்க அவர்கள் பெற்ற மேலதிக வாக்குகள் 9,28,442 ஆகும்.

இரண்டாமிடத்தைப்பெற்ற திருமதி வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்கா வை விட சந்திரிக்கா பெற்ற மேலதிக வாக்குகள் 19,93,922 ஆகும்.

## 21ம் நூற்றாண்டை நோக்கிய பயணத்தில்....

இலங்கையில் இனங்களுக்கிடையே ஒற்றுமை, ஐக்கியம், சமாதானம், ஏற்பட்டு புரிந்துணர்வு மிக்க ஒரு சமூக அமைப்பு உருவாக வேண்டும் என்று அங்கலாய்க்கும் இந்நிலையில்.. இனவாதத்தையும், இனவெறியையும் கிளறி, அரசியல் இலாபம் தேட எத்தனித்த ஒரு சில அரசியல்வாதிகளின் பிரசாரக்களமாக அமைந்த 1994 சனாதிபதித்தேர்தலானது-

மக்கள் சனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றியாக ஆராயப்படல் வேண்டுமா? அல்லது-

மகத்தான ஜனநாயகத்தின் பெயரால் இனவாதங்களைக் கிளறிய துவேஷ அரங்காக ஆராயப்பட வேண்டுமா? துர்ப்பாக்கியமான முறையில் இந்த வினாக்களைக் கருத்திற்கொண்டு சனாதிபதித்தேர்தல், பிரசாரங்கள், முடிவுகள், வெற்றி தோல்விக்கான காரணிகள் போன்றவற்றின்மீது கண்ணோட்டத்தைச் செலுத்துவது ஏற்புடையதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் இனவாதப் பிரசாரங்கள்.

21ம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். மேற்குலக நாடுகள் விஞ்ஞானத்தின் உச்சநிலையை எட்டிப் பிடிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையிலே மூன்றாம் உலக நாடுகளோ மதம், இனவாதம்என்ற போர்வையில் குறுகிய இலாபத்திற்காக அரசியல் அரங்கைப் பயன்படுத்த விழைவது 3ம் உலகங்களின் பிற்போக்கு நிலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. குறிப்பாக தெற்காசிய நாடுகளை எடுத்து நோக்கும் போது இந்த நிலையானது மேலும் வலியுறுத்தப் படுகின்றது.

20ம் நூற்றாண்டின் பின் இறுதித் தசாப்தத்தில் எமது இலங்கைத் திருநாட்டிலும் நவீன தொழில்நுட்ப மாற்றங்களுக்கிணங்க பல்வேறுபட்ட திருப்பங்களுக்கு முகங் கொடுத்து வருகின்றோம் என்பது உண்மைதான். ஆனாலும் கடந்த 4 தசாப்தங்களாகத் தலைவிரித்துத் தாண்டவமாடும் இனவாதப் பிரச்சினைகள் முற்றுப்பெறுவதற்குப் பதிலாக மேலும், மேலும் தூண்டப்படுவது இந்த இறுதித் தசாப்தத்திலும் இடம் பெறுவது வேதனைக்கிடமானதே. இலங்கை பல இன மக்கள் வாழும் ஒரு நாடு. ஒவ்வொரு இனங்களுக்கும் வாழக்கூடிய உரிமை உண்டு. ஆனால் சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமைகளை மறுத்துரைப்பதைப்போல் 94 பொதுத் தேர்தலை ஒத்தமுறையிலே 94 சனாதிபதித்தேர்தலிலும் பிரச்சாரங்கள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இனவெறிப் பிரசாரத்தில் முதன்மை பெற்றிருந்த வேட்பாளர் திரு ஹரிச்சந்திர விஜேதுங்க அவர்களாவார். இவர் சிங்களே மகாசம்பத பூமிபுத்திரகட்சியின் வேட்பாளராவார். பூமிபுத்திர என்னும்போது மண்ணின் மைந்தர்கள் என்று பொருள் கொள்ளப்படும். அதாவது வரலாற்றுக் காலம்முதல் இலங்கை மண் பௌத்தர்களுடையதே. ஆகவே இலங்கை மண்ணின் மைந்தர்கள் பௌத்தர்களே. புத்தபகவான் இலங்கைக்கு மூன்று தடவை விஜயம் செய்துள்ளார். இதில் ஒருதடவை அவர் நாகதீபத்திற்கும் (யாழ்ப்பாணம்) விஜயம் செய்துள்ளார். எனவே வடபகுதியின் பூர்வீக உரிமை பௌத்தர்களுக்குரியதே. பூமிபுத்திர கட்சியின் அடிப்படையாகவே இது விளங்கியது..

இலங்கையில் வாழக்கூடிய தமிழ், இந்தியத்தமிழ், முஸ்லிம்களை ஆக்கிரமிப்பாளர் களாகக் கருதும் பூமிபுத்திர கட்சியினர் 1815இல் ஆங்கிலேயர் பௌத்தர்களிடமிருந்து இலங்கையை ஆக்கிரமித்தாலும் 1948ல் சுதந்திரம் வழங்கும்போது முழு இலங்கைக்குமே வழாங்கிச்சென்றனர். என்று கூறுவதுடன் பௌத்தம், பௌத்தவாதம் போன்றவையே ஏக போகமாக இருக்க வேண்டும் என்றரீதியிலும் பிரசாரத்தைத் தொடர்ந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மட்டுமல்ல-சுயேட்சை வேட்பாளர் ஹட்சன் சமரசிங்கவின் கடைசி நேர உரைகளும் இனவாதத்தை வலியுறுத்துவதாகவே இருந்தன. சந்திரிக்காவிற்கு வாக்களிப்பது, பிரபாகரனிற்கு வாக்களிப்பதற்கு (அதாவது நாட்டைப் பிரித்துக் கொடுப்பதற்கு) சமனானதாகும் என்ற வகையிலேயே அமைந்திருந்தன.

இனங்களுக்கிடையே ஐக்கியம், புரிந்துணர்வு, சகவாழ்வு ஏற்பட வேண்டும் என்றும், இலங்கையில் வாழக்கூடிய மக்கள் அனைவரும் ஒரே தாயின் பிள்ளைகள் என்றும் ஒற்றுமையையும், சமாதானத்தையும் எடுத்துரைத்துவரும் இந்நிலையில் சிறுபான்மை இனங்களைப் புறக்கணித்து அவர்களை உரிமை யற்றவர்களாக எடுத்துக்காட்ட விழையும் இது போன்ற துவேஷப் போக்கு மிக்க கட்சிகள் இருக்கும் வரை இலங்கையில் சமாதானம், ஒற்றுமை ஏற்படுமா? என்பது கேள்விக்குறியே.

பல்லின மக்கள் வாழக்கூடிய ஒரு தேசத்தில் இனவாதத்தையும், இனவெறியையும் தூண்டும் இது போன்ற கட்சிகள் ஜனநாயகத்தின் உரிமையாகக் கருதப்படுமாயின்- பல்லினமக்கள் வாழும் மூன்றாம் உலக நாடுகளுக்கு ஜனநாயகம் ஒரு விமோசனமா? அல்லது சாவுமணியா? என்பதும் விரிவாக ஆராயப்பட வேண்டியதே.

## சனாதிபதி தேர்தல் கால முக்கிய நிகழ்வுகள்.

### 1.ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் போட்டியிலிருந்து விலகல்.

94 சனாதிபதித் தேர்தலில் சனாதிபதி வேட்பாளர் திரு நிஹால் கலபத்தி அவர்கள் போட்டியிலிருந்து விலகியமை முக்கிய விடயமாகும்.

தேசத்தை மீட்கும் முன்னணி (ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி) வேட்பாளரான இவர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்தது முதல் இலங்கையில் நிறைவேற்று அதிகாரமிக்க சனாதிபதிப்பதவி முறை நீக்கப்பட வேண்டும், என்பதையே தனது அடிப்படைப் பிரசாரமாக கொண்டிருந்தார்.இவ்வாறு இருக்கும்போது நிறைவேற்று அதிகாரமிக்க சனாதிபதித்துவமுறை ஒழிக்கப்படுமெனவும், அதேநேரம் தனிப்பட்ட ஒரு நபருக்கு அதிகாரம் வழங்கப்படுவதைத் தடுத்து பாராளுமன்றத்துக்குப் பூரண பொறுப்புச் சொல்லக்கூடிய ஒரு நிர்வாக முறை ஏற்படுத்தப்படுமெனவும், பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளர் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மக்களுக்கு உறுதியளித்து எழுத்துமூலமாக அறிவிப்பாராயின் தான் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக நிஹால் கலப்பதி அவர்கள் 1994.10.20ம் திகதியன்று பொதுசனத் தொடர்பு சாதனங்களினூடாக அறிவித்தல் விடுத்தார்.

இந்த சவாலை திருமதி சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் ஏற்றுக்கொண்டார். 1995.07.15ம் திகதிக்கு முன்னர் தற்போதைய அரசியலமைப்பு மாற்றியமைக்கப்படுமெனவும், புதிய அரசியலமைப்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனாதிபதிப் பதவி ஒழிக்கப்படுமெனவும் 1994.10.21ம் திகதி இலங்கை ரூபவாஹினியில் இடம்பெற்ற ஒரு விசேட பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

சந்திரிக்காவின் இந்நிலைப்பாட்டால் திருப்தியடைந்த கலப்பதி 1994.10.27 திகதி தான் சனாதிபதிப் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தல் விடுத்தார்.

## அபேட்சகர் கொலை

தேர்தல் பிரச்சாரங்களில் தீவிரமாக ஈடுபட்டிருந்த திரு காமினி திசாநாயக்கா (UNP) அவர்கள் 1994. அக்டோபர் 23ம் திகதி நள்ளிரவு 12.17 அளவில் கொழும்பு தொட்டலங்க (பாலத்தோட்டை) நாகலம் வீதியில் அமைந்துள்ள பொதுச்சந்தை மைதானத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிவிட்டு தமது இருக்கையை நோக்கிச் செல்கையில் குண்டு வெடித்ததினால் கொலை செய்யப்பட்டார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் சனாதிபதி வேட்பாளர் ஒருவர் கொலைசெய்யப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

1981ம் ஆண்டு 15ம் இலக்க பாராளுமன்ற சட்டமூலத்தின் 22ம் உறுப்புரையின் (1), (2), (3). உட்பிரிவுகளுக்கமைய திருமதி வஜிரா ஸ்ரீமணி திசாநாயக்க (காமினி திசாநாயக்காவின் பாரியார்) ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளராக ஐக்கியதேசியக்கட்சியின் தலைமைத்துவத்தினால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தேர்தலின் போக்குகள்

இலங்கை அரசியல் வரலாற்றிலே இதுவரை இடம்பெறாத மகத்தான வெற்றியினை பொதுசன ஐக்கிய முன்னணி இத்தேர்தலில் பெற்றுக்கொண்டது.

1. இலங்கையில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளர் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க அவர்களே வெற்றியடைந்தார். இது சனாதிபதித் தேர்தல் வரலாற்றில் ஒரு சாதனையாகும். (முதலாவது சனாதிபதித் தேர்தலில் திரு. ஜே.ஆர். ஜயவர்த்தனா அவர்கள் 21தேர்தல் மாவட்டத்தில் வெற்றி பெற்றார். இருப்பினும் இவரால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வெற்றியீட்ட முடியவில்லை. 2வது சனாதிபதித் தேர்தலில் திரு ரணசிங்க பிரேமதாச அவர்கள் 6 தேர்தல் மாவட்டங்களில் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

2. இலங்கையில் உள்ள 160 தேர்தல் தொகுதிகளில் 159 தேர்தல் தொகுதியிலுமே பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியது. இதுவும் இலங்கையின் தேர்தல் வரலாற்றில் ஒரு சாதனையாகும். (94 சனாதிபதித் தேர்தலில் மஹியங்கனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் தொகுதியில் மாத்திரமே ஐக்கிய தேசியக்கட்சியால் வெற்றியீட்ட முடிந்தது.

3. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சந்திரிக்கா குமாரணதுங்க வாக்குவிகிதத்தில் அமோக வெற்றியை ஈட்டினார்.

| மாவட்டம் | சந்திரிக்கா பெற்ற வாக்கு விகிதம் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 96.35% |
| வன்னி | 85.30% |
| மட்டக்களப்பு | 87.30% |
| திகாமடுல்லை | 72.36% |
| திருகோணமலை | 71.62% |

4. 94 சனாதிபதித் தேர்தலில் எந்தவொரு மாவட்டத்திலாவது சந்திரிக்கா குமாரணதுங்க 50% குறைவான வாக்குகளைப் பெறவில்லை.
5. தேசிய ரீதியில் சந்திரிக்கா பெற்றவாக்கு விகிதம் 62.28% ஆகும். அதே நேரத்தில் தனிப்பட்ட ரீதியில் சந்திரிக்கா பெற்ற விருப்பவாக்குகள் 47,09,205 ஆகும். இலங்கை அரசியல் வரலாற்றிலே தனிப்பட்ட வேட்பாளர் ஒருவர் பெற்ற மிகைத்த விருப்பு வாக்கு இதுவாகும்.
6. இரண்டாமிடத்தைப் பெற்ற திருமதி வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்காவை விட திருமதி சந்திரிக்கா பெற்ற மேலதிக வாக்குகள் 19,93,922 ஆகும் (இலங்கை அரசியல் வரலாற்றில் இதுவும் ஒரு சாதனையாகும்.)

## தேர்தலில் ஐ.தே.கட்சியின் தோல்விக்கான காரணிகள்

1. ஐ.தே.கட்சியின் தலைமைத்துவப் பலவீனம்
2. பிரேமதாச காலத்தில் One Man Show (தனிமனிதன்காட்சி) யாகத்திகழ்ந்த நிர்வாகத்தன்மையை One Party Show (தனிக் கட்சிக் காட்சியாக) மாற்ற எத்தனித்தமை. விசேடமாக கட்சியில் ஸ்திரத்தன்மையைப் பேணிக்கொள்ள தூரதிருஷ்டி நோக்கில் செயற்படாமை.
3. ஐ.தே.கட்சியின் சனாதிபதி வேட்பாளராக திரு காமினி திசாநாயக்கா நியமிக்கப்பட்ட மையினால் கட்சியினுள் ஏற்பட்டவிரிசல்கள், இதன் எதிரொலியாக ரனில் விக்கிரமசிங்க ஆதரவாளர்கள் மறைமுகமாக வாக்களிப்பினைப் பகிஷ்கரித்தமை.
4. சந்திரிக்கா குமாரணதுங்க மீது மக்கள் வைத்த நம்பிக்கைகளும், சந்திரிக்காவின் உறுதியான பிரசார நடவடிக்கைகளும்.
5. சிறுபான்மையினரின் ஆதரவினைப் பெறத்தவறியமை.
6. நிலையான கொள்கையினை முன்வைக்கத் தவறியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PUBLIC LIBRARY
JAFFNA

# வினா 16

## "94 பாராளுமன்றப் பொதுத் தேர்தலையும் "94 சனாதிபதித்தேர்தலையும் ஒப்பீட்டு ஆராய்க

## விடைக்குறிப்புகள்

1994 பாராளுமன்றப் பொதுத்தேர்தலும், 1994 சனாதிபதித்தேர்தலும் நடைபெற்ற சூழலில் ஒருவித பொதுப்படையான ஒற்றுமை உண்டு. பொதுவாக இவ்விரு தேர்தல்களும் சுமார் மூன்று மாத இடைவெளியில் நடந்து முடிந்தமையினால் இவ்விரு தேர்தல்களிலும் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தோர் எண்ணிக்கை ஒரே அளவினராகவே இருந்தனர்.

இருப்பினும் இலங்கையின் 22 தேர்தல் மாவட்டங்களிலும் யாழ்ப்பாண மாவட்டம் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் 94 பொதுத்தேர்தலைவிட 94 சனாதிபதித்தேர்தலில் வாக்களிப்பு விகிதம் குறைவாகவே உள்ளதை அவதானிக்கலாம்.

அகில இலங்கை ரீதியாக நோக்குமிடத்து பொதுத்தேர்தலில் 76.24% வாக்குகள் அளிக்கப்பட்டன. சனாதிபதித்தேர்தலில் இவ்விகிதம் 70.52% ஆகக் குறைந்துள்ளது. (இது 5.72% குறைவாகும்)

வாக்களிப்பு விகிதம் ஏன் குறைந்தது என்பது அவதானிக்கப்படுதல் வேண்டும்.

குறிப்பாக 94 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் தோல்வியானது கட்சி ஆதரவாளர்களுக்கு ஒருவித அதிர்ச்சியையே கொடுத்திருக்கும். என்பது வெளிப்படை. பொதுத்தேர்தல் முடிவினைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக்கட்சியில் ஏற்பட்ட சில உட்பூசல்கள், சில ஆதரவாளர்கள் மத்தியில் ஒரு வித அதிருப்தியினை ஏற்படுத்தியது. என்றால் பிழையாகாது.

விசேடமாக எதிர்க்கட்சித் தலைவராக திரு காமினி திசானாயக்கா தெரிவானமை, மேலும் சனாதிபதி வேட்பாளராக அவர் நின்றமை என்பன முன்னயநாள் பிரதமர் ரனில் விக்கிரம சிங்க அவர்களது ஆதரவாளர்களிடையே அதிருப்தி நிலையைத் தோற்றுவித்திருந்தது.

தொடர்ந்து திரு காமினி திசாநாயக்காவின் மறைவினை அடுத்து சனாதிபதி வேட்பாளராக திருமதி வஜிரா திசாநாயக்கா நியமிக்கப்பட்டமை இந்நிலையை மேலும் தீவிரப்படுத்தியது.

எனவே சனாதிபதித்தேர்தலில் வாக்காளர் எண்ணிக்கை குறைவடைய அதிருப்தியடைந்த ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமையை ஒரு பிரதான காரணியாக சுட்டிக்காட்டலாம். இதனை இரண்டு தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக்கட்சி பெற்ற வாக்கினையும், சனாதிபதித்தேர்தலில் மாவட்ட ரீதியாக வாக்களிப்பில் கலந்துகொள்ளாத வாக்காளர் விகிதத்தையும் ஒப்பு நோக்கும்போது ஓரளவு உணர்ந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115158

## TOTAL POLLED AT THE GENERAL AND PRESIDENTIAL ELECTION

| D.No | District | 94 GE | 94PE | Difference |
|---|---|---|---|---|
| 1 | COLOMBO | 77.56% | 70.91% | 6.65% |
| 2 | GAMPAHA | 81.51% | 75.71% | 5.80% |
| 3 | KALUTARA | 82.14% | 75.57% | 6.57% |
| 4 | MAHANUWARA | 83.67% | 79.77% | 3.90% |
| 5 | MATALE | 84.32% | 81.53% | 2.79% |
| 6 | NUWARA-ELIYA | 83.67% | 79.52% | 4.15% |
| 7 | GALLE | 81.22% | 74.62% | 6.60% |
| 8 | MATARA | 78.78% | 71.10% | 7.68% |
| 9 | HAMBANTOTA | 79.60% | 67.30% | 12.30% |
| 10 | JAFFNA | 2.32% | 2.97% | -0.65% |
| 11 | VANNI | 25.34% | 22.41% | 2.93% |
| 12 | BATTICALOA | 72.40% | 64.32% | 8.08% |
| 13 | DIGAMADULLA | 81.25% | 75.70% | 5.55% |
| 14 | TRINCOMALEE | 68.78% | 60.05% | 8.73% |
| 15 | KURUNEGALA | 84.12% | 78.81% | 5.31% |
| 16 | PUTALAMA | 77.30% | 70.71% | 6.59% |
| 17 | ANURADHAPURA | 83.95% | 78.39% | 5.56% |
| 18 | POLONNARUWA | 83.68% | 77.15% | 6.53% |
| 19 | BADULLA | 84.00% | 79.23% | 4.77% |
| 20 | MONERAGALA | 85.75% | 78.66% | 7.09% |
| 21 | RATNAPURA | 87.85% | 81.25% | 6.00% |
| 22 | KEGALLE | 82.85% | 76.80% | 6.05% |
| | ALL ISLAND | 76.24% | 70.52% | 5.72% |

(PREPARED BY THE COMPUTING SERVIES CENTRE UNIVERSITY OF COLOMBO)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளிக்கப்பட்ட வாக்குகளில் ஐக்கியதேசியக்கட்சியினதும் பொதுசன ஐக்கிய முன்னணியினதும் நிலை

94 பொதுத் தேர்தலைவிட 94 சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி பெற்ற வாக்குகள்கணிசமான அளவில் குறைந்துள்ளன. 94 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தேசிய ரீதியில் 34,98,370 வாக்குகளைப் பெற்றது. இது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 44.02% வாக்குகளாகும்.

94 பொதுத்தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களில் ஐக்கிய தேசியக்கட்சி 8 மாவட்டங்களில் பொதுசனஐக்கிய முன்னணியை விட அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுவெற்றியீட்டியது.

இம்முடிவின்படி வன்னி மாவட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியை

| மாவட்டம் | மேலதிகமாகப் பெற்ற வாக்குகள் |
|---|---|
| கண்டி | 34,141 |
| நுவரெலியா | 77,820 |
| வன்னி | 2,267 |
| மட்டக்களப்பு | 3,366 |
| திகாமடுல்லை | 24,617 |
| திருகோணமலை | 11,100 |
| பதுளை | 35,582 |
| கேகாலை | 13,249 |

விட (5,583அல்லது13.2%) ஐக்கிய தேசியக்கட்சி அதிக வாக்குகளைப் பெற்ற போதிலும் கூட (7850அல்லது18.50% வன்னிமாவட்டத்தை புளொட் அணியே வெற்றி கொண்டது. (புளொட் அணி 11,567வாக்குகளை அல்லது 27.36% வாக்குகளை பெற்று மாவட்டத்தில் முன்னணியில் திகழ்ந்தது)

இதேபோல மட்டக்களப்பு மாவட்டத்திலும் பொதுசன ஐக்கிய முன்னணியை விட (19,278 அதாவது 11.07%) ஐக்கிய தேசியக்கட்சி அதிக வாக்குகளைப் பெற்ற போதிலும் கூட (23,244 அதாவது 13.35%) மட்டக்களப்பு மாவட்டத்தை தமிழர் விடுதலைக்கூட்டணி வெற்றி கொண்டது. (தமிழர் விடுதலைக் கூட்டணி 78,516 வாக்குகளை அதாவது 43.95% வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் முன்னணியில் திகழ்ந்தது)

இவ்விரு மாவட்டங்களும் தவிர மீதமான 6 மாவட்டங்களிலும் ஐக்கிய தே சியக்கட்சியே வெற்றியீட்டியது.

மறுபுறமாக தொகுதி வாரியாக நோக்குமிடத்து 94 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியால் 160 தேர்தல் தொகுதிகளுள் 43 தொகுதிகளை வெற்றி கொள்ள முடிந்தது. உதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மாவட்டம் | மொத்தத் தொகுதிகள் | ஐக்கிய சேியக்கட்சியால் வெற்றிபெறமுடிந்த தொகுதிகள் |
|---|---|---|
| கொழும்பு | 15 | 04 |
| கண்டி | 13 | 11 |
| மாத்தளை | 04 | 02 |
| நுவரெலியா | 04 | 03 |
| திகாமடுல்லை | 04 | 01 |
| திருமலை | 03 | 01 |
| குருநாகலை | 14 | 03 |
| அனுராதபுரம் | 07 | 01 |
| பதுளை | 09 | 09 |
| இரத்தினபுரி | 08 | 03 |
| கேகாலை | 09 | 06 |

ஆனால் 94 சனாதிபதித் தேர்தலை 94 பொதுத் தேர்தலுடன் ஒ நோக்கும் போது 22 தேர்தல் மாவட்டத்தில் ஒரு மாவட்டத்தையேனும் ஐக்ச தே ,சியக்கட்சியால் வெற்றி கொள்ள முடியவில்லை.

அதேபோல தொகுதி ரீதியில் நோக்குமிடத்து 160 தொகுதிகளுள் தொகுதியில் மாத்திரமே ஐக்கிய தேசியக்கட்சியினால் வெற்றியடைய முடிந்த பதுளை தேர்தல் மாவட்டத்தில் மஹியங்கனை தேர்தல் தொகுதியில் மாத்தி ஐ.தே. கட்சியால் வெற்றியடைய முடிந்தது.

ஐக்கிய தேசியக்கட்சி வரலாற்றில் இதுபோன்றதோர் படுதோல்வியிெ இதுவரை அனுபவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1994' பொதுத் தேர்தல்

## பொதுசன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக்கட்சியும் பெற்ற வாக்குகள்

| மாவட்டம் | பொ.ஐ.மு | ஐ.தே.க | ஐ.தே.கட்சியைவிட பொது.ச.ஐ.மு. மேலதிகமாகப் பெற்ற வாக்குகள் | பொது.ஐ.மு. யை விட ஐ.தே.கட்சி மேலதிகமாகப் பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 4,69,642 | 3,85,100 | 84,542 | - |
| கம்பஹா | 5,09,030 | 3,75,631 | 1,33,399 | - |
| களுத்துறை | 2,71,754 | 2,21,115 | 50,639 | - |
| கண்டி | 2,67,683 | 3,01,824 | - | 34,141 |
| மாத்தளை | 1,02,680 | 1,00,121 | 2,559 | - |
| நுவரெலியா | 97,658 | 1,75,478 | - | 77,820 |
| காலி | 2,77,956 | 2,03,268 | 74,688 | - |
| மாத்தறை | 2,27,285 | 1,42,024 | 85,261 | - |
| ஹம்பாந்தோட்டை | 1,32,008 | 95,382 | 36,626 | - |
| யாழ்ப்பாணம் | - | - | - | - |
| வன்னி | 5,583 | 7,850 | - | 2,267 |
| மட்டக்களப்பு | 19,278 | 23,244 | - | 3,966 |
| திகாமடுல்லை | 54,150 | 78,787 | - | 24,637 |
| திருகோணமலை | 23,886 | 34,986 | - | 11,100 |
| குருநாகலை | 3,66,856 | 3,32,547 | 34,309 | - |
| புத்தளம் | 1,50,605 | 1,27,671 | 22,934 | - |
| அனுராதபுரம் | 1,80,454 | 1,42,084 | 38,370 | - |
| பொலநறுவை | 82,438 | 76,706 | 5,732 | - |
| பதுளை | 1,46,546 | 1,82,131 | - | 35,585 |
| மொனராகலை | 77,955 | 67,753 | 10,202 | - |
| இரத்தினபுரி | 2,33,687 | 2,20,750 | 12,937 | - |
| கேகாலை | 1,90,689 | 2,03,938 | - | 13,249 |
| மொத்தம். | 38,87,823 | 34,98,370 | 3,89,453 | - |



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1994' சனாதிபதித் தேர்தல்

பொதுசன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக்கட்சியும் பெற்ற வாக்குகள்

| மாவட்டம் | பொ.ஐ.மு | ஐ.தே.க | ஐக்கிய தேசியக்கட்சியை விட பொ.ஐ.மு. மேல திக மாகப் பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| கொழும்பு | 5,57,708 | 2,88,741 | 2,68,967 |
| கம்பஹா | 5,50,654 | 2,88,608 | 2,62,046 |
| களுத்துரை | 2,95,686 | 1,78,466 | 1,17,220 |
| கண்டி | 3,20,110 | 2,35,519 | 84,591 |
| மாத்தளை | 1,21,449 | 73,324 | 48,125 |
| நுவரெலியா | 1,68,929 | 1,16,928 | 52,001 |
| காலி | 2,85,398 | 1,73,282 | 1,12,116 |
| மாத்தறை | 2,27,865 | 1,18,224 | 1,09,641 |
| ஹம்பாந்தோட்டை | 1,32,873 | 77,735 | 55,138 |
| யாழ்ப்பாணம் | 16,934 | 223 | 16,711 |
| வன்னி | 33,585 | 4,493 | 29,092 |
| மட்டக்களப்பு | 1,44,725 | 14,812 | 1,29,913 |
| திகாமடுல்லை | 1,68,289 | 59,074 | 1,09,215 |
| திருகோணமலை | 77,943 | 28,006 | 49,937 |
| குருநாகலை | 4,03,838 | 2,66,740 | 1,37,098 |
| புத்தளம் | 1,65,795 | 95,211 | 70,584 |
| அனுராதபுரம் | 2,00,146 | 1,07,342 | 92,804 |
| பொலநறுவை | 88,907 | 59,287 | 29,620 |
| பதுளை | 1,82,810 | 1,39,611 | 43,199 |
| மொனராகலை | 96,620 | 52,026 | 44,594 |
| இரத்தினபுரி | 2,57,265 | 1,77,924 | 79,341 |
| கேகாலை | 2,11,676 | 1,59,707 | 51,969 |
| மொத்தம் | 47,09,205 | 27,15,283 | 19,93,922 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
KOHA-JPL

| மாவட்டம் | பொதுத் தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட 94 சனாதிபதித் தேர்தலில் பொ.ஐ.முன்னணி மேலதிகமாகப் பெற்றவாக்குகள். | 94 பொதுத்தேர்தலில் பெற்ற வாக்குகளை விட 94 சனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி இழந்த வாக்குகள். |
|---|---|---|
| கொழும்பு | 88,066 | 96,359 |
| கம்பஹா | 41,624 | 87,023 |
| களுத்துறை | 23,932 | 42,649 |
| கண்டி | 52,427 | 66,305 |
| மாத்தளை | 18,769 | 26,797 |
| நுவரெலியா | 71,271 | 58,550 |
| காலி | 7,442 | 29,986 |
| மாத்தறை | 580 | 23,800 |
| ஹம்பாந்தோட்டை | 865 | 17,647 |
| யாழ்ப்பாணம் | 16,934 | - |
| வன்னி | 28,002 | 3,357 |
| மட்டக்களப்பு | 1,25,447 | 8,432 |
| திகாமடுல்லை | 1,14,139 | 19,713 |
| திருகோணமலை | 54,057 | 6,980 |
| குருநாகலை | 36,982 | 65,807 |
| புத்தளம் | 15,190 | 32,460 |
| அனுராதபுரம் | 19,692 | 34,742 |
| பொலநறுவை | 6,469 | 17,419 |
| பதுளை | 36,264 | 42,520 |
| மொனராகலை | 18,665 | 15,727 |
| இரத்தினபுரி | 23,578 | 42,826 |
| கேகாலை | 20,987 | 44,231 |



38586
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org